KALKI 26-8-79
75 காசு

கல்கி



இந்த இதழில்



லக்ஷ்மி எழுதும்

பூக்குழி

ஆரம்பம்

ஒரு முழுமையான சுவை அனுபவத்தை எங்களைத் தவிர வேறு யாரால் தர இயலும்

ஆம், சுவையான ட்ரு பிஸ்கட்களைச் சுவைப்பதே தனி இன்பம், பல்சுவையும், மொரமொரப்பும் கொண்ட ட்ரு பிஸ்கட் வகைகளை அடிக்கடி சுவைக்கும் ஆசையை யாராலும் அடக்க முடியாது. முழுமையான இயற்கை உட்பொருளான தேன், குளுகோஸ், பால்-பவுடர், ஏலக்காய் சத்து, புத்தம் புதிய முற்றிய தேங்காய் முதலியவற்றைக் கொண்டு, நீண்ட பல பரிசோதனைக்குப்பின் தயாரிக்கப்படுவதால்தான் சீரிய பலவகைகளில் உங்களுக்கு கிடைக்கிறது ட்ரு பிஸ்கட்கள்.

தேன்-குளுகோஸ்

புஷ்டியான தித்திப்புச்சுவைதரும் தேன்-குளுகோஸ் பிஸ்கட் போதுமான அளவு தேனும் திரவ குளுகோசும் கலந்தது. ஒவ்வொரு பாக்கட்டும் 350 கலோரி சக்தியை அளிக்கிறது.

நீஸ்

சுவையான தேங்காய் பிஸ்கட் நீஸ். தேங்காயின் இயற்கைச் சுவையை உங்களுக்கு அளிப்பதற்கென்றே தாராளமாக புத்தம் புதிய முற்றிய தேங்காய் சேர்க்கப்படுகிறது.

ஏலக்காய் 'கஸ்டர்ட்' க்ரீம்

நினைத்தாலே நாவூறும், இயற்கையான ஏலக்காய் கலந்த, சுவையான கிரீம் பிஸ்கட், எந்த வகையில் பார்த்தாலும் சிறந்த கிரீம் பிஸ்கட் இதுதான்.

மாரி

காபி, டீ வேளைகளில் சேர்த்துச் சாப்பிடும் மிதமான தித்திப்புக் கொண்டது இது. எந்தவகை பானத்துடனும் சேர்த்துச் சாப்பிட மிகச் சிறந்தது.

மேலும் பல வகைகளும் உண்டு


மேற்சொன்ன எல்லாவகை பிஸ்கட்களுமே உயர்தர பாக்கிங் பொருட்களைக் கொண்டு பாக் செய்யப்படுகிறது.

பிஸ்கட்டின் மணம், மொரமொரப்பு, புத்தம் புதுத் தன்மை கெடாமல் இருக்கும் பொருட்டு மிக அதிக விலையுள்ள செலப்பேன் (Cellophane) பேப்பரை பிஸ்கட்கள் மீது படும்படியாக பாக்கிங் செய்வதில் அதிக அளவு உபயோகப்படுத்தும் ஒரே தயாரிப்பாளர் நாங்கள்தான்.

நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் முழுமையான சுவையூட்டும் ட்ரு பிஸ்கட் வகைகளைச் சுவைத்து அதன் சீரிய நல்ல தன்மைகளை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்.



ட்ரு பிஸ்கட்கள்



நான்கு அகில உலக "மாண்டே" மெடல்களைப்பெற்றது.

AUROFOOD

தயாரிப்பாளர்:
இந்தியாவின் மிகநவீனமான மாவு மில்லும், பிஸ்கட் பாக்டரியும் இணைந்ததொழிற்குழுமம்

Headstart/ATM/104

Kalki Shopping Page

Nambisan's
BUTTER & GHEE

makes your food delicious




NAMBISAN'S DAIRY PRIVATE LTD.,
MADRAS-600 028.
Plant: Uttukuli R.S.,
Coimbatore Dist.

SUKI ELECTRONICS

Best Place to Choose your

STANDARD
televista
Solidaire TV sets



Available on cash or easy instalment

Cost of Antenna, installation & delivery charges free for cash purchases.

SUKI ELECTRONICS

16, Veeraraghavan Street, Nanganallur, Madras 600 061.

C-3, Kapaleeswarar Shopping Complex, V.A. Road, Near Saibaba Temple Mylapore, Madras 600 004.

Phone: 433019.

Beauty **with HAL* brains**

(* Hindustan Aeronautics Limited)

Bharat TV



Available at:

T. T. TRONICS
Perambur Ph: 661533
Parrys Ph: 27427

PARAM AGENCIES
Royapettah
Ph: 812577

4 AS AGENCIES
T. Nagar
Ph: 445366

ACIL BM 33/79

Kalki Shopping Page

HMV STEREO 3131 SUPERTRACK

Magnetic cartridge with diamond stylus.



HMV STEREO SYSTEMS

HMV STEREO 1010



HMV STEREO SYSTEMS

ARUNA & CO
479, T. H. Road
Madras-600021
Ph: 553644

V. G. PANNEERDAS & CO
Victory House, Mount Road
Madras-600002 Ph: 88184

SHANTHI ELECTRONICS
821, Mount Road
Madras-600002 Ph: 81594

STANDARD

Solid State TV



பேர்பெற்ற டிவிகளின்
பெயர்களை தெரிந்து
வைத்து இருப்பது என்பது
ஒன்று.

நிகழ்ச்சியைப் பார்த்து
தரத்தை அறிவது என்பது
மற்றொன்று.

ஸ்டாண்டர்டு டிவி தன் பெயருக்கு
ஏற்றவாறு தரமுள்ளதாக இருக்கிறது.

சுலப
தவணை முறையில்
கிடைக்கும்

STANDARD TV

பெயருக்கேற்ற தரமுள்ள டிவி.

M. I. ELECTRONICS
654, Anna Salai
Ph: 86422

M. N. ELECTRONICS
60-D, Royapettah High Road
Madras-4 Ph: 74842

SUPRIYA ELECTRONICS
10, Nelson Manicka Mudaliar Road
(Near Nungambakkam Rly. Station)



ராஜ்நாராயணனுடன் ஒரு நாள்!

காலை 9–30 மணி: 8–30 மணிக்கு வர வேண்டிய விமானம் ஒரு மணி நேரம் கால தாமதமாக வந்தது. தலையை மூடியிருக்கும் பச்சைத் துணி, வெள்ளை ஜிப்பா, பஞ்சகச்ச வேஷ்டி. கையில் பல்வேறுவிதமான தாயத்துக்கள். அத்துடன் பஞ்சலோக வளையம் ஒன்று. இடது கையில் தங்கத்தைத் தவிர வேறுசில உலோக மோதிரங்கள், கைக் கடிகாரம். கண்களில் மூக்குக் கண்ணாடி. ஊன்றி நடப்பதற்கு ஒரு வெள்ளிக் கைத்தடி. வழுவழுப்பான களைத்த முகம். இவைதாம் ராஜ்நாராயண். முகத்தை மூடுமளவுக்கு மாலை சேர்ந்தன. விமான நிலையத்தை விட்டு வெளியே வந்து தொண்டர்களின் வரவேற்பை ஏற்கும்பொழுது கண்களிலிருந்த மூக்குக் கண்ணாடியைக் காணவில்லை. ராஜ்நாராயணனுக்கு மட்டுமல்ல; எல்லோருக்குமே அதிர்ச்சிதான். ஒரு தொண்டர் மாலையிடும் அவசரத்தில் மூக்குக் கண்ணாடியைத் தள்ளிவிடப் பக்கத்திலிருந்த ஒரு போலீஸ் அதிகாரி கீழே விழ இருந்த மூக்குக் கண்ணாடியைப் பிடித்து ராஜ்நாராயணனிடம் கொடுக்கக் காரிலேறிக் கிளம்பினார்.

10.10 மணி: ஜனதா(எஸ்) தலைமை அலுவலகத்தில் கொடி ஏற்றினார்.

10–30 மணி: சென்னை அரசாங்க விருந்தினர் மாளிகைக்கு வந்தார். நிருபர்களுக்குத் தாம் எப்படி விமான விபத்திலிருந்து தப்பினார் என்பதைக் கூறியபின் காலைச் சிற்றுண்டியாக அவருக்குத் தரப்பட்டது டீயும் பிஸ்கெட்டும். பிஸ்கெட்டைக் கொரித்துக் கொண்டிருந்தபொழுது அவரது உதவியாளர் கையில் பல்வேறு வண்ண மாத்திரைகளை ராஜ்நாராயணனிடம் கொடுக்க அவற்றையும் அவர் விழுங்குகிறார்.

10–50: சிறிது ஓய்வெடுக்கலாம் என்று சாய்ந்தவரைப் பார்க்க ஆந்திர சட்டமன்ற துணை சபாநாயகர் பிரபாகர் ரெட்டி வருகிறார். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுச் செல்கிறார். ஜெகஜீவன்ராம் சென்னையில் என்ன பேசினார் என்பதை அன்று வந்திருந்த காலை நாளேடுகளிலிருந்து டாக்டர் சந்தோஷம் படிக்கத் தெரிந்துகொள்கிறார் ராஜ்நாராயண்.

11–15 மணி: குளித்துவிட்டு உடை மாற்றிக்கொண்டு பத்திரிகையாளர் கூட்டத்துக்குச் செல்கிறார்.

11–40: பத்திரிகையாளர் கூட்டம் ஆரம்பிக்கிறது. பல்வேறு விதமான கேள்விகள், பதில்கள். பத்திரிகையாளர்களின் இடைஞ்சலான கேள்விகளுக்கு ராஜ்நாராயணனின் பதில் ஒவ்வொன்றும் தன்னம்பிக்கையுடன் இருந்தது.

1–10 மணி: பத்திரிகையாளர் கூட்டம் முடிந்து திரும்பவும் அரசினர் விருந்தினர் மாளிகைக்குப் பகல் உணவு உட்கொள்ள வந்தார்.

1–20: கொய்யாப் பழம், ஆப்பிள், கொண்டைக் கடலை, ரொட்டியுடன் சேர்ந்த வெண்ணெய் இருந்தன. பின் வந்தன தோசை, இட்லி வகையறுக்கள். இந்தச் சமயத்திலும் அவரை விடவில்லை திரு அலந்த சாமி. சிறிது நேரம் அவர் ராஜ்நாராயணனுடன் பேசிக் கொண்டிருந்தார். இவர்தான்

ஹேமமாலினியின் முதல் படமெடுத்த தயாரிப்பாளர்.

1–40 மணி: அனந்தசாமி விடைபெற்றுச் சென்றார். இரண்டு மணிக்குத் தூக்கம் ஆரம்பித்தது. மூன்று மணிக்கு விழிப்புக் கொடுத்தது. திருவல்லிக் கேணியிலிருந்து அழைத்து வரப்பட்ட மசாஜ் கலையில் வல்லவர் உள்ளே நுழைந்தார், ராஜ்நாராயணனுக்கு மசாஜ் செய்ய.

3–45 மணி: யோகலக்ஷ்மி கல்யாண மண்டபத்துக்குச் செல்லத் தம்மைத் தயாரித்துக் கொண்டார். அங்கு ஜனதா(எஸ்) கிஸான் சம்மேளனம் இரண்டையும் துவக்கி வைத்துப் பேசினார்.

5–00 மணி: பல்வேறு தொண்டர்களுக்கும் ஒருசில தலைவர்களுக்கும் அவரைத் தனிமையில் சந்தித்து உரையாட ஹோட்டல் பிரஸிடெண்டில் அறை ஒதுக்கப்பட்டிருந்தது. அங்கு ராஜ்நாராயண் சென்றார்.

6-30: பார்த்தசாரதி கோவிலுக்கு வருகை. ஒவ்வொரு சன்னதியாகச் சென்று விவரங்களைக் கேட்டு, தாத்பரியங்களைத் தெரிந்து கொண்டார். கோயில் வழிபாடு சம்பந்தமாக நுணுக்கமான பல கேள்விகளைக் கேட்டார். ''கால் வலிக்கிறதப்பா. நீ ரொம்ப நடக்கவெச் சுட்டே!'' என்று கூறிக் கொண்டே காரி லேறினார். திரும்பவும் அரசினர் விருந்தினர் மாளிகைக்குச் சென்று முகம் கழுவி உடை மாற்றிக் கொண்டு கிளம்பினார் கடற்கரைக் கூட்டத்துக்கு.

7–35 மணி: மடை திறந்த வெள்ளம் போல் பேச்சு; ஆங்கிலத்தில்தான்! அதைத் தமிழாக்கம் செய்வதற்குத்தான் சரியான ஆட்கள் இல்லை. கோபமென்றால் உச்ச ஸ்தாயி; சாந்தமென்றால் கீழ் ஸ்தாயி. நடுநடுவே மக்களிடம் கேள்விகள்; அவர்கள் கோரஸாகப் பதில் சொல்வதைக் கேட்டு மேலும் பேச்சுத் தொடர்ந்தது.

9–15 மணி: அரசினர் விருந்தினர் மாளிகை வந்தடைந்தார்.

10–00 மணி: எம். ஜீ. ஆர். சந்திப்பு. எம். ஜீ. ஆரைச் சந்திக்கச் சென்ற இடத்தில் நாடாளு மன்ற உறுப்பினர் பாலா பழனூரும் இருக்கப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

11–15 மணி: ராஜ் நாராயணனுக்குப் பிடித்தமான உணவு வகைகளைத் தயாரித்து வைத்திருந்தனர். வெண்டைக்காய், பாகற்காய், சுக்கா ரொட்டி, கோவைக்காயைப் போலிருக்கும் பருவல் என்ற காய். கடலை மாவைக் கலந்த மோர்க் குழம்பு - இவை இவருக்கு மிகவும் பிடிக்கும். அவருக்குப் பிடிக்காதது கத்தரிக்காய். ஆனால் இவைகளை யெல்லாம் வேண்டாம் என்று சொல்லி விட்டு, ஒரு 'கப்' பால் மட்டும் அருந்திவிட்டுப் போய்ப் படுத்தார். மகாபாரதமும் ராமாயணமும் மனப்பாடமாகத் தெரிந்து வைத்திருக்கும் ராஜ் நாராயண்.

''அசோக் குமார்''

புகைப்படம்: **ஏ. பி. மாசிலாமணி**

வள்ளல்களுள் பெரு வள்ளல்!

வறுமையில் வாடும் ஓர் எழுத்தாள ருக்கு உதவ நிதி வசூல் செய்து கொண் டிருந்தேன். வள்ளல் ஒருவரை அணுகினேன்.

நூறு திரைப் படங்களுக்கு மேல் எடுத்துப் புகழ் பெற்றவர்; தேச பக்தர்; தேச பக்தி மட்டும் படங்களை எடுத்தவர்; பாரதி பாடல்களை நாட்டுடைமை ஆக்கியவர்; எத்தனையோ நற்பணிகளுக்கு உதவியவர். இத்தகையவர், நான் வந்த காரியத்தைச் சொன்னதும் ''ஏதாகிலும் அனுப்பி வைக்கிறேன், போய் வாருங்கள்'' என்றார்.



திரும்பி விட்டேன். சில நாட்கள் கழித்துத் தபாலில் கணிசமான தொகைக்குக் காசோலை ஒன்று வந்தது. ரசீது அனுப்பினேன்.

ஏமெட்டு வாரங்களுக்குப் பிறகு இன்னொரு காசோலை அதே தொகைக்கு அவரிட மிருந்தே வந்தது. 'ஏற்கனவே அனுப்பி விட்டாரே, மறதியாக மறுபடியும் அனுப்பி யிருக்கிறாரே' என்ற எண்ணத்தில் போன் செய்தேன். நான் கூறியதைக் கேட்டுக் கொண்ட அவர், காசோலையைத் திருப்பி அனுப்பி விடுவதாக நான் சொன்னதும், ''வேண்டாம்'' என்றார். ''மறதியாகத்தான் மறுமுறை அனுப்பி யிருக்கிறேன் என்றாலும் ஒரு நல்ல காரியத்துக்குக் கொடுத்த தொகையை நான் திரும்பப் பெற விரும்ப வில்லை; கணக்கில் சேர்த்து ரசீது அனுப் புங்கள்'' என்றார்.

அந்த வள்ளல் ஏ. வி. எம்.

எதிலும் முன்னின்றதால் 'ஏ'; வெற்றி பெற்றதால் 'வி'; 'எம்' என்பதோ அவர் ஈடு பட்டிருந்த திரைப்படத் தொழிலை (Motion Picture) மட்டுமின்றி அவரது பெருந்தன்மை யான உள்ளத்தையும் (Magnanimity) குறிப் பதாக அமைந்திருந்தது. —கி. ரா.

பூக்குழி

லக்ஷ்மி



1

அன்று செவ்வாய்க் கிழமை. வழக்கத்தை விடச் சற்று முன்னதாகவே அகல்யா விழித்துக் கொண்டு விட்டாள். மங்கலாக அறைக்குள் விடிவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. மெல்லத் திரும்பிப் பார்த்தாள். அந்தப் பெரிய நைஜாம் காலத்துத் தேக்கு மரக் கட்டிலின் மீது வாயைப் பிளந்து கொண்டு பஞ்சரத்தினம் விடியற்காலை வேளையின் இனிமை கலந்த உறக்கத்திலே லேசாகக் குறட்டை எழுப்பிக் கொண்டிருந்தான். சப்த மிடாது தனது படுக்கையைச் சுருட்டிப் பெஞ்சியின் ஓரத்தில் கவரை யொட்டினாற்போல் வைத்துவிட்டு மெல்ல நடந்து கதவருகே வந்தாள்.

அந்த வீடு அவளது கணவனது பாட்டன் காலத்தில் கட்டப்பட்ட அழுத்தமானதொரு காரைக் கட்டிடம். கோயில் அடைப்புக் கதவு போல வேலைப்பாடமைந்த தேக்கு மரத்தில் குறுக்குத் தண்டுகளின் மீது வெண்கலக் குமிழ்கள் பளபளத்தன. அந்தக் கதவின் தாழ்ப்பாளை நீக்கி மெல்லத் திறப்பதற்குள் அவள் தோள்பட்டையே கழன்றுவிடும் போன்ற கனம். வீட்டின் எல்லாக் கதவுகளுமே எக்கச்சக்கமானதொரு கனம். இருடன் இலேசில் உடைத்துவிட முடியாது. கோடாலி கொண்டு பிளந்து சுவரையே கட்டி விட்டுத்தான் உள்ளே நுழைய முடியும். அப்படி ஒரு பாதுகாப்பு.

முன்கட்டு, பின்கட்டு என்று பழையபாணியில் புழக்கடை வரை ஓடிய அந்தக் கட்டிடத்தில் தன் என்ஜினீயர் மூளையைச் செலவழித்துப் பல மாற்றங்கள் செய்திருந்தான் ராஜ்குமார். அனாவசியத் தடுப்புக்களை இடித்துத் தள்ளிவிட்டுப் பெரியதொரு ஹால்— அதற்கு எதிரும் புதிருமாக இரண்டு பெரிய அறைகள் — பின்னால் ஒரு தாழ்வாரம்— சமையலறை — பூஜையறை — சற்றுத் தள்ளிக் குளியலறை என்று வீட்டை மாற்றிச் சீராகக் கட்டிவிட்டிருந்தான். செங்கல் பாவிய தரை முழுவதையும் மொசைக்கினால் இழைத்து விட்டிருந்தான்.

தனக்குக் கல்யாணம் நிச்சயமானவுடன் உடனடியாகத் தங்கள் உபயோகத்துக்கென மொட்டையாக இருந்த மாடியில் ஒருசிறு முன்னறையும் குளியலறையை உள்ளடக்கிக் கொண்ட பெரியதொரு படுக்கையறையும் கட்டிவிட்டிருந்தான். கட்டில்கள் மேஜை நாற்காலிகள், சோபாக்கள், ஜன்னலுக்கு அழகான திரைச்சீலை என்று பட்டணத்துப் பணக்காரர் வீட்டைப் போல் அலங்கரித்து விட்டிருந்தான். ஆறு மாதம் தான் அவர்கள் அந்த அறையை உபயோகித்தனர். அதற்குப் பின்னர் அது பூட்டிக் கிடந்தது.

திருநல்லூர் கிராமத்துக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னமே மின்விசை அமைப்பு வந்து விட்டிருந்தது. அந்த வீட்டின் எந்தப் பகுதியிலும் அந்த வசதிக்குக் குறைவே இருக்கவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் காவேரி நீரைக் குழாய் இணைப்பு மூலம் குடிதண்ணீராக மக்களுக்குக் கிடைக்கும் வசதியும் வந்துவிட்டிருந்தது.

கணவன் ஊரில் அவளுடன் தங்கியிருந்த காலத்தில் அவள் கூடத் துணைக்கு வருவான். இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் ஓடிக் கொண்டிருந்த காவேரியில் தலை முழுகி குளித்து வரக் கருக்கலுடன் கிளம்புவார்கள். விடியற்கால வேளையில் துறையில் யாருமே இருக்க மாட்டார்கள். தண்ணீரும் வெது வெதுவென்று உடம்புக்கு இதமாக இருக்கும். ஆசை தீர முங்கி அவன் வெகு நேரம் நீரில் அளைந்து குளிப்பான். கீழ் வானத்திலே செம்மை கட்டிக் கொண்டு சூரியன் புறப்படத் தொடங்கியதும் மனமில்லாது தண்ணீரை விட்டு வருவான். ஒரு பாதிப் புடவையை இடுப்பில் சுற்றிக் கொண்டு மறு பாதியைத் துவைத்து அலசிப் பிழிந்து விட்டு அதை லாகவமாக உடலில் நன்றாக மூடி மறைத்துக் கட்டிக்கொண்டு மறு பாதியைத் துவைத்துப் பிழிந்து உடலைச் சுற்றி அவள் இறுக்கிக் கட்டிக்கொள்வதைக் காணாதது போல் அவன் கண்டு வியப்பான்.

இருள் பிரிந்து புது வெளிச்சம் பரவத் தொடங்கியதும் அங்கே குளிக்க ஊர் மக்கள் பலர் வந்து விடுவார்கள். அதற்குள் அவள் பொன்னாகத் தேய்த்துக் கழுவிய குடத்தில் நீரை மொண்டு கொண்டு கரை

ஏறிவிடுவாள். எல்லோருக்கும் முன் வீடு திரும்பிவிட வேண்டும் என்பது அவன் உத்தரவு. தன் அழகு மனைவியை நீர்த் துறையில் யாரும் வெறித்துப் பார்ப்பதை அவன் விரும்பியதில்லை. அவளுக்கும் அது பிடிக்காத விஷயமே.

ஊருக்குப் போகு முன் அவன் சொல்லி விட்டிருந்தான். 'நீ கால் வைச்ச வேளை. குழாயிலே காவிரித் தண்ணியே வீட்டுக்குள் வந்து கொட்டுது. துணை இல்லாம நீ கருக்கலில் காவேரிக்குப் புறப்படத் தேவையில்லை. ஆழந் தெரியாமல் இறங்கிட்டா உனக்கு என்னைப் போல் நீஞ்சக்கூடத் தெரியாது... பத்திரம்.'

'தன்னந் தனியாக அவர் இங்கு மட்டும் வெளியே போவதைக் கணவன் விரும்பவில்லை'. அவள் சட்டென்று புரிந்து கொண்டு விட்டாள். கெட்டிக்காரி!

''மாரியம்மன் கோவிலுக்கு வெள்ளி—செவ்வாய்களில் நம்ப தோட்டக்காரன் சிங்காரத்தைத் துணைக்குக் கூட்டிக்கிட்டுப் போய் வரத்தைப் பத்தி?''

''கோவிலுக்குப் போகக் கூடாதுன்னு சொல்வேன்? முத்துமாரி நம்ம குலதெய்வமாச்சே!'' என்று அவன் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளினான்.

விமானப் பையைத் தோள் மீது போட்டுக்கொண்டு பெட்டியைச் சிங்காரம் தூக்கிக் கொண்டு செல்ல — வாசலில் காத்திருந்த மாட்டு வண்டியில் ஏறி அவன் கிளம்பிச் சென்றது இப்போதுதான் நடந்தது போல் இருந்தது. வருஷம் ஒன்றரையாகி விட்டிருந்தது.

ஏனோ, அவளுக்கு அன்று காலை அவனது நினைவு நெஞ்சைக் கனமாக அழுத்தியது. மெல்லக் கதவை ஒருக்களித்துவிட்டு ஹால் விளக்கைப் போட்டுவிட்டுக் குளியலறைக்குள் புகுந்தாள்.

எப்பொழுதும் அவள் குளிர்ந்த நீரில் தான் முழுகுவது வழக்கம். அதுவும் இரண்டு நாட்களாக எரித்த வெய்யிலில் சில்லென்ற நீரைத் தலையில் ஊற்றிக்கொள்வது இனிமையாகத்தான் இருந்தது. ஈரம் போகத் தலையைத் துவட்டி முடியின் நுனியில் சிறு முடிச்சிட்டுக் கொண்டாள். கொடியில் கிடந்த மாற்றுப் புடவை உள் ஆடைகள் அனைத்தையும் எடுத்துப் பரபரப்பாக உடுத்திக் கொண்டாள்.

கண்ணாடியில் முகத்தைப் பார்த்து நெற்றி மீது குங்குமப் பொட்டை வைத்துச் சீராக்கிக் கொண்டு அவள் வெளியே வருவதற்குள் தோட்டத்துக் கதவு இலேசாகத் தட்டப்படும் ஓசை கேட்டது.

சிங்காரம் பல் துலக்கிக் குளித்துவிட்டுச் சுத்தமான காக்கிச் சட்டையும் வேட்டியும் அணிந்து நெற்றி நிறைய விபூதியும் கையிலே தடியுமாகத் தயாராக நின்று கொண்டிருந்தான். அவன் மனைவி பூரணியும் குளித்து முடித்து மஞ்சளும் குங்குமமுமாகப் பளிச்சென்று பூக்கூடையுடன் அவன் அருகே நின்று கொண்டிருந்தாள்.

சிங்காரம் தம்பதிகள் அவளது மாமனார் காலத்திலிருந்து தோட்ட வேலையும் வீட்டு வேலையும் செய்து கொண்டு தோட்டத்திலிருந்த ஒரு வீட்டில வசித்துக் கொண்டிருந்தனர். பேரன் பேத்திகள் எடுத்துவிட்டிருந்தவர். ஆனாலும் பழமான விசுவாசம். அந்த வீட்டையும் பெரிய அம்மாளையும் விட்டுப் போக மனமின்றி ஒட்டிக் கொண்டிருந்தனர்.

இருவரும் உள்ளே வந்தனர். அவள் பின் கதவை அடைத்தாள். ''பூரணி பெரிய அம்மாவைக் கவனிச்சுக்கோ. பால் கறந்து முனியாண்டி கொண்டு வந்து கொடுத்தா வாங்கி உள்ளே வை. சிங்காரத்தோட கோவிலுக்குப் போயிட்டுப் பத்து நிமிஷத்திலே வந்துடறேன்.'' உத்தரவிட்டபடி பூக் கூடையுடன் பூஜை அறைக்குள் நுழைந்தாள்; கழுவித் துடைத்துப் பொட்டிட்டு எண்ணெய் வார்த்துத் திரியிட்டுக் குத்துவிளக்கை ஏற்றினாள். கூடையிலிருந்த ரோஜா மலர் ஒன்றை அருகில் வைத்தாள். ஒரு பிடி மல்லிகை மலரை எடுத்துச் சலவைக் கல் மேடையிலிருந்த தெய்வங்களின் திருவுருவங்கள் மீது தூவினாள். மீத



மிருந்த பூவைத் தேங்காய் பழங்கள் வைத்திருந்த பித்தளைக் கூடைக்குள் கொட்டிக்கொண்டு தரையில் விழுந்து கும்பிட்டு விட்டு வெளியே வந்தாள்.

ஊருக்கு ஒதுக்குப்புறமான இடத்தில் ஆலமரங்கள் நெருக்கமாக வளர்ந்திருந்த முடக்குக்குச் சற்றுத் தள்ளிச் சிறிது தூரத்தில் தான் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவில் இருந்தது. அவர்கள் வீட்டிலிருந்து அது கொஞ்சதூரம்தான். பொடி நடையாக

வெய்யிலில் செருப்புமின்றி போய் வருவது சிரமமாகத் தெரியவில்லை. மேலும் வாரத்துக்கு இரு முறை தவறாது போய் வந்த பழக்கம். கோவில் தொலை தூரத்தில் இருப்பதாகவே தோன்றவில்லை.

தோளில் கிடந்த துண்டைக் காக்கிச் சட்டை மீது இறுக்கிக் கட்டிக் கொண்டு கையில் தடியுடன் சிங்காரம் முன் நடந்தான். தேங்காய் பழக் கூடையுடன் அவள் வேகமாகப் பின்னால் விரைந்தாள்.

கோவில் வெளிப் பிராகாரத்தில் ஒரு மூலையில் ஒரு சிறு கிணறு இருந்தது. தண்ணீரை வாளியில் சேந்திக் காலைக் கழுவிக் கொண்டாள். சிங்காரமும் அவ்வாறே செய்தான். பின்னர் அவன் கர்ப்பக்கிரகத்தின் முன்னால் வந்து நின்றபோது பார்த்தான். அவளையும் முந்திக்கொண்டு அங்கே சில பெண்கள் நின்று கொண்டிருந்தனர்.

அபிஷேக ஆராதனை முடிந்து அம்பிகை சந்தனக் காப்பு அணிந்து கனக சபை விட்டின் காணிக்கையான தங்கக் காசு மாலை அணிந்து அழகாக நின்று அருள் பொழிந்து கொண்டிருந்தாள். அகல்யா கொண்டுவந்த கூடையை வாங்கி, தேங்காய் உடைத்து அர்ச்சனை செய்து தீபாராதனை காட்டித் தட்டுடன் வெளியே வந்தார் அர்ச்சகர். கூடியிருந்த பெண்கள் ஜோதியை வணங்கிக் கும்பிட்டுப் பிரசாதம் பெற்றுக் கொண்டு கோவிலை வலம் வரப் புறப்பட்டனர்.

''பெரியம்மா எப்படி இருக்காங்க?''— கேட்டபடி கற்பூரத் தட்டை அவள் முன் நீட்டினார் அர்ச்சகர்.

''அப்படியேதான் இருக்காங்க. போன வருஷம் ஆபரேஷன் செய்த கண்ணில் 'இப்பப் பார்வையே இல்லை. இன்னொரு கண்ணிலும் காடராக்ட் ஆரம்பிச்சிடுச்சு: பழுக்கணும், உடனே ஆபரேஷன் செய்யணும்னு டாக்டர் சொல்லிட்டார். அவங்களைப் பார்க்க மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு.'' கூறிக் கொண்டே கையிலிருந்த சில்லறையைத் தட்டில் போட்டுக் கற்பூர ஜோதியை வணங்கினாள்.

''ஆத்தாளுக்குத் தங்கத்தாலே கண் அடக்கம் போடறதாக வேண்டிக்கிருங்க.''




''வேண்டிக்கிட்டிருக்கேனே!''

''அவர்.... உங்க வீட்டார் - அவர்எப்படி அம்மா இருக்கார்?''

''பிள்ளையைப் பத்தித்தான் அத்தைக்குச் சதா விசாரம். புலம்பிக்கிட்டே இருக்காங்க. அவங்களுக்கு ஏதாச்சும் ஆகுமுன் அவர் ஊர் வந்து சேர்ந்துட்டா நல்லதுன்னு ஆத்தாளை வேண்டிக் கொண்டிருக்கேன்.''

''வந்துடுவார். கவலைப்படாதீங்க!'' தீபாராதனைத் தட்டைச் சிங்காரத்தின் முன் நீட்டினார் அர்ச்சகர்.

''அவர் நல்லபடியா ஊர் வந்து சேர்ந்துட்டா அவர் கூட நானும் இந்த வருஷம் அம்மனுடைய பூக்குழியிலே இறங்கறதாக வேண்டுதலே.'' சொல்லி முடிக்கு முன் வார்த்தைகள் தடுமாறித் தழுதழுத்தன. விழிக்கடையில் அரும்பிய நீரில் அவள் கண்கள் பளபளப்பதைக் கண்டு அர்ச்சகர் நெஞ்சம் நெகிழ்ந்தது.



வந்தவர் :- நாதஸ்வரக்காரருக்கு ஏன் கோபம்?

ஒருவர் :- அவருக்கு டிராங்கால் வந்த போது யாரோ சார் உங்களுக்கு பீ.பீ. கால் வந்திருக்குன்னு சொன்னார்''. அதான் கோபம். —எஸ். சந்திரசேகர்

பெரியதனக்காரர் கனகசபை, 'அய்யாவின் மருமகளுக்கு எத்தனை பக்தி? பொறுமையான பொண்ணு! பஞ்சரத்தனம்மாள் கொடுத்து வச்சவுங்க...' தமக்குள்ளே எண்ணிக்கொண்டார்.

''சின்னவர் எப்ப வருவார்னு கடிதாசி போட்டிருக்கார்?''

''அத்தையோட உடம்பு நிலவரம் பத்தி விவரமா எழுதிப் போட்டிருக்கேன். அம்மான்னு அவருக்கு உயிராச்சே... புறப்பட்டு வந்துடுவார்.'' பிரசாதக் கூடையை வாங்கிக்கொண்டாள்.

'தங்கச் சிலை போல இந்த அழகு மனைவியை நினைத்துக் கொண்டாவது மனுஷன் பறந்து வரமாட்டான்? என்ன வேண்டியிருக்கு வெளியூர் உத்தியோகம்?' என்று எண்ணியபடி அர்ச்சகர் உள்ளே திரும்பினார். கோவிலை வலம் வந்துவிட்டு அவள் வீட்டுக்கு விரைந்தாள்.

பஞ்சரத்தினம் பூரணியின் உதவியுடன் தட்டுத் தடுமாறி எழுந்து பல் விளக்கு முகத்தைக் கழுவிக் கொண்டு ஊஞ்சலில் வந்து உட்கார்ந்திருந்தாள். செம்பு நிறைந்து வழிந்த பசும்பாலைப் பூரணி கொண்டு வந்து அடுப்பு அருகே மேடை மீது வைத்து விட்டிருந்தாள். உள்ளே நுழைந்து அவசரமாக அடுப்பை மூட்டிப் பாலைக் காய்ச்சிக் காப்பியைக் கலந்தாள். சர்க்கரைக்குப் பதில் செயற்கை இனிப்புச் சொட்டுகளைத் துளி ஊற்றிக் கொண்டு வந்து மாமியாருக்கு அருகே காப்பி டம்ளரை வைத்தாள். பூரணிக்கும் சிங்காரத்துக்கும் இரண்டு டம்ளர் நிறையக் காப்பியைச் சர்க்கரை போட்டுக் கலக்கிக் கொண்டு வந்து கொடுத்தாள். தனக்கும் ஒரு டம்ளர் எடுத்து வைத்துக் கொண்டாள்.

எவ்வளவோ யோசனையுடன் பஞ்சரத்தினம் காப்பியை ஒரே வாயாகப் பருகி முடித்தாள்.

அதற்குப் பின்னர் அகல்யாவுக்குத் தொடர்ந்து வேலைகள் இருந்தன. அவசரமாக அவளும் காப்பியை விழுங்கிவிட்டு மாமியாரைக் கையைப் பிடித்து அழைத்துக் குளியலறைக்குள் உட்கார வைத்தாள். இளம் சூடான வெந்நீரைப் பச்சைப் பிள்ளைக்குக் குளிப்பாட்டுவது போல் ஊற்றி பஞ்சரத்தினத்துக்கு குளிக்க உதவினாள்; வேறு உடுத்தச் செய்து நெற்றியில் திருநீரைக் கோடாக இட்டு மாமியாரைக் கைப்பிடியாக அழைத்து வந்து நாற்காலியில் உட்கார வைத்தாள்.

பின்னர் ஒரு சிறு கிண்ணத்தில் கொதிக்க வைத்துத் தயாராக வைத்திருந்த ஊசிக் குழாயில் வைத்தியர் கற்றுக் கொடுத்தபடி இன்சுலின் மருந்தை அளவோடு இழுத்து மாமியாருக்கு ஊசி ஏற்றினாள். கேழ்வரகு மாவில் தயாரித்த கஞ்சியை ஆறவைத்து எடுத்து வந்து சாப்பிடச் சொல்லி வற்புறுத்தினாள்.

''படுதா மறைச்சாப்பல கண்ணை என்னவோ மறைக்குது. ஒண்ணுமே தெரியலே'' என்று கிழவி புலம்பினாள், கஞ்சியைக் குடித்துவிட்டு.

''இந்தக் கண்ணை ஆபரேஷன் செய்தால் நல்ல பார்வை வந்துடும் அத்தே — நம்ப ஆத்தாளிடம் வேண்டிக் கொண்டிருக்கேன்... பூரணி உங்களோடு துணையா இருப்பா... நான் தென்னந் தோப்பு வரை சிங்காரத்தோட போயிட்டு வரேன். தென்னை இறக்க ஆளுங்க காத்துக்கிட்டு இருக்காங்க'' என்று கூறிவிட்டுக் கிளம்பினாள்.

சிங்காரம் காய் இறக்கும் ஆட்களை முதல் நாளே ஏற்பாடு செய்து விட்டிருந்தான். அவர்கள் திமுதிமுவென்று புழக்கடைப் பக்கம் வந்து நின்று கொண்டிருந்தனர். சிங்காரம் மேற்பார்வையில்தான் என்றாலும் எஜமானியின் கண்காணிப்பும் தேவையாயிற்றே? ஒரு மணி நேரத்துக்குள் பல நூறு காய்களை அவர்கள் இறக்கித் தள்ளி அவைகளைப் பின்னால் இருந்த அறைக்குள் கொண்டு குவித்து விட்டனர். அவர்களுக்குப் பேசிய கூலியைப் பட்டுவாடாச் செய்ய அவள் உள்ளே வந்து எதிர்ப்புறத்து அறைக்குள்ளிருந்த பெரிய இரும்புப் பீரோவைத்

திறந்தாள். வரிசையாக ஒரு பக்கத்தில் கம்பி யில் தொங்கிய பல சேலைகளின் சூழலில் அந்த நீல வண்ண ஷிபான் சேலை அவள் கண்களில் சட்டெனப் பட்டது.

புகை போல் அத்தனை மெல்லிய துணி. உடல் முழுவதும் வாரி இறைத்தாற்போல் ஊதா வண்ணப் பூக்கள். யாரோ பம்பாய் வரை வந்த நண்பரிடம் அந்தச் சேலையையும் ஒரு டப்பா லாவண்டர் பவுடரையும் அவள் கணவன் அவளுக்காக அனுப்பி யிருந்தான். இரண்டு மாதங்களுக்கு முன்னர் அவை அவள் பெயருக்குத் தபாலில் பம்பாயிலிருந்து வந்தன. புடவையை அவள் அணிந்து கொள்ளவேயில்லை. அவன் வந்த பிறகு உடுத்திக் கொள்வதாக உத்தேசித்திருந் தாள். புடவை புறுவின் அடிவயிற்றைத் தொட்டது போல் மிருதுவாகக் கைக்குள் அடங்கிவிடும் அளவுக்குப் புழுவாகத் துவண்டு கசங்காது இருந்ததை அவள் பல முறை சோதித்து வியந்திருக்கிறாள். இன்று அதைத்தொட்டபோது அந்தப் புடவை யைக் கடையில் வாங்க அவன் நின்றுகொண்டு யோசித்து வண்ணக் குவியல்களிடையே அதைத் தேர்ந்தெடுத்துப் புன்முறுவலிப்பது போன்றதொரு கற்பனை உள்ளத்திலே எழவே அவன் கைபட்ட அந்தச் சேலையைத் தன் முகத்தோடு அழுத்திக் கொண்டாள். நெஞ் சைப் பிரிவின் துன்பம் பாறையாக அழுத்தி யது. கண் கலங்கிப் போனாள்.

''அகல்யா!'' மாமியாரின் அதட்டல் குரல்.

விழிப்புற்று மேல் தட்டிலிருந்த பணத்தை எடுத்துக் கொண்டு விரைவாக வெளியில் வந்தாள். கூலி பட்டுவாடா செய்துவிட்டு அவள் உள்ளே வந்தபோது மாமியார் கேட்டாள்.

''ராஜூ கிட்டே யிருந்து கடிதாசி வந்து எத்தனை நாளாகுது?''

சுவரில் தொங்கிய காலண்டரில் அவள் கண்கள் பாவின. ''ஒரு மாசத்துக்கு மேல் ஆகிறது.''


''வாரத்துக்கு ஒரு முறை எழுதினவன் ஏன் இப்படிக் கம்முன்னு இருக்கான்?''

அதே கேள்விதான் அகல்யாவின் உள் ளத்திலும்... ஏன் கடிதமே காணவில்லை? ''ஊருக்குக் கிளம்பறத்துக்கு முந்தி வேலைகள் அதிகப்படியா இருக்கும் — கடிதாசி போட நேரமிருக்காது....அதனால்....''


''உன் புருசனுக்கு நல்லாச் சப்பைக் கட்டுக் கட்டிப் பேசறே... ராஜு இப்படி சோம் பேறியா இருக்கப்படாது. இங்கே நமக்கு என்ன இல்லே? கண் காணாத் தேசத்திலே போய் மண்டை வெடிக்கற வெய்யிலிலே வேலை பார்க்கணும்னு விதியா?'' என்று கிழவி முணு முணுத்தாள்.

அதற்கு மேல் கேட்டுக் கொண்டிருந்தால் அவளுக்கு அழுகையே வந்துவிடும் போன்ற துக்கம்.

தாய்க்குப் பிள்ளையைப் பிரிந்த தவிப்பு—தாரத்துக்கு ஆசைக் கணவனைப் பிரிந் திருக்கும் தாபம். (தொடரும்)



ரேஸ் முடிவு வேறுவித-
மாகவும் இருந்திருக்
கலாம்!
ஜனதா
ஜனதா (எஸ்)
பிற கட்சிகளின் ஆதரவு
விசேஷ
கோர்ட்
பார்லிமெண்டைக்
கலைக்காதீர்கள்!
ஜனாதிபதி
எம்.பி.க்கள்



கல்கி

1979 ஆகஸ்டு 26
சித்தார்த்தி ஆவணி 10
மலர்: 38 இதழ்: 4

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்மியடி பாப்பா - பாரதியார்

சரண்சிங்கைப் புரிந்துகொள்ளுங்கள்!

பாவம், சரண் சிங்கை யாருமே சரியாகப் புரிந்துகொள்ள மாட்டே னென்கிறார்கள்!

சென்ற ஆண்டு ஏப்ரல் இரண்டாம் தேதி பிரதமர் மொரார்ஜிக்கு அன்றைய உள்துறை அமைச்சர் சரண் சிங் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில் பகுகுணா மீது பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருக்கிறார். அவற்றில் முக்கியமானவை இரண்டு. பகுகுணா ஒரு லஞ்ச ஊழல் பேர்வழி என்பது ஒன்று. மற்றொன்று பகுகுணா ருஷ்யாவின் ஒற்றனாகச் செயல்படுகிறார் என்பது.

'இப்படிப் பயங்கரமான இரு குற்றச்சாட்டுக்களைச் சுமத்திவிட்டு, இன்று அவரையே நிதி அமைச்சராக்கி யிருக்கிறாரே, நியாயமா?' என்று பலர் கேட்கிறார்கள். ஒன்று, சரண் சிங் தாம் உள்துறை அமைச்சராக இருந்தபோது தவறு செய்ததாக ஒப்புக்கொள்ள வேண்டும்; அல்லது, பிரதமர் என்ற முறையில் இன்று தவறு இழைத்து விட்டதாக ஒப்புக்கொள்ள வேண்டும் என்று எதிர் பார்க்கிறார்கள்.

இந்த அறிவிலிகளுக்கு இன்றைய பிரதமரும் இன்றைய நிதி அமைச்சரும் பளிச்சென்று கரி பூசுகிற மாதிரி பதில் சொல்லி யிருக்கிறார்கள். 'ஏற்கெனவே நாங்கள் ஒருவரை யொருவர் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை; இன்று நன்றாகப் புரிந்து கொண்டு விட்டோம்' என்கிறார்கள். எவ்வளவு சத்தான, மறுக்க முடியாத வாதம் பாருங்கள்!

பாம்பின் கால் பாம்பு அறியும் என்பது போல ருஷ்ய ஒற்றனாக இருந்த பகுகுணாதான் இன்று தில்லியில் யார் யார் ருஷ்ய ஒற்றர்களாக விளங்கக் கூடும் என அறிந்து அவர்களிடமிருந்து இந்தத் தேசத்தைக் காப்பாற்ற முடியும்! அதே போல் லஞ்ச லாவண்யங்களில் ஊறித் திளைத்த பகுகுணாதான் லஞ்ச ஊழல் தலைநகரில் தலைவிரித்தாடாமல் கவனித்துக்கொண்டு நாட்டை ரட்சிக்க முடியும்! எனவே பகுகுணாவை இன்று பொறுப்புள்ள பதவியில் சரண் சிங் வைத்ததில் என்ன தவறு? ஏற்கெனவே பகுகுணா லஞ்ச ஊழல் பேர்வழியாக விளங்கி, ருஷ்ய ஏஜண்டாகவும் இருந்தாரென்றால் அதெல்லாம் இந்தக் காரியங்கள் எப்படி நடக்கின்றன என்பதை நேருக்கு நேராக அனுபவ ரீதியில் அறிந்து கொள்ளத்தான்! இப்போது தமது அனுபவ ஞானத்தைப் பயன்படுத்தித் தேசத்தைப் புனருத்தாரணம் பண்ணப் போகிறார்!

பகுகுணாவின் உள் நோக்கத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் சரண் சிங் அன்று அவசரப்பட்டு மொரார்ஜிக்கு எழுதிவிட்டார். இன்று நன்றாகப் புரிந்துகொண்டு பகுகுணாவை நிதி அமைச்சராக்கி விட்டார்! எனவேதான் அன்று பகுகுணா மொரார்ஜிக்கு எழுதிய கடிதத்தில் சரண் சிங்கின் மனம் விஷமாக இருப்பதாகக் குறிப்பிட்டாலும் இன்று சரண் சிங் உள்ளம் அமுதமாய் இருப்பதாக உணர்கிறார்!

இருவருக்குமே கிராமப்புற நகர்ப்புற ஏழைகளின் நிலை உயரப் பாடுபடவேண்டும் என்ற ஒரு நோக்கம்தானே யன்றிப் பதவி மோகம் என்பது கிஞ்சித்தும் கிடையாது! வாழ்க அவர்கள் நல்லிதயங்கள்!





நான் கண்ட ரஷ்யா


3. மாஸ்கோவில் தமிழ் – ஒலிம்பிக் – பயனீர் மாளிகை

அகிலன்

ஜூலை 22, அதிகாலை நாலு மணி.


மாஸ்கோவில் இப்போது பகல் நேரம் அதிகம். இரவு நேரம் குறைவு. நான்கு மணிக்கு முன்பே பொழுது விடிந்து இரவு பத்துப் பதினோரு மணிக்குத் தான் பொழுது சாயும். படுக்கைக்கு நேர் எதிரே கண்ணாடிச் சன்னல் வழியே எட்டிப் பார்த்துக் காலைச் சூரியன் என்னை நாலு மணிக்கெல்லாம் எழுப்பி விட்டது. முன்பு இரு முறை இங்கு வந்தபோதும் ஒரு நாள் ஒரு நிமிடம் கூட எனக்கு மாஸ்கோவில் கதிரவனின் தரிசனம் கிடைக்கவில்லை. ஒரே பனி மூட்டம்தான்.


18வது மாடியிலிருந்து சூரியன் ஒளியில் குளித்துக் கொண்டு கிடந்த மாஸ்கோவைப் பார்த்தபோது, இடையிடையே பூங்காக்களான மரகதக் கற்கள் பதித்த அழகிய சித்திரமாய் அது ஜொலித்தது. புகை மூட்டத்தைக் கக்கும் தொழிற்சாலைகள் நகரத்தை விட்டு நெடுந்தொலைவில் அமைக்கப்பட்டிருந்ததால் நகரம் மாசற்ற சூழலுடன் விளங்கியது. தெருக்களைக் கழுவி விடுவதற்கும், மரங்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கும் லாரிகள் கீழே இழைந்து கொண்டிருந்தன. நெருப்பாலோ, நீராலோ காற்றாலோ மண்ணாலோ, விண்ணாலோ நச்சுச் சூழ்நிலை ஏற்பட்டு, மக்கள் நோயால் அவதியுறக் கூடாது என்பதில் சோவியத் நாடு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.



அன்றைக்கு எங்களுக்கு நான்கைந்து நிகழ்ச்சிகள் இருந்தன. எல்லா நிகழ்ச்சிகளுமே நாங்கள் வந்தவுடன் பேசி ஏற்பாடு செய்யப் பெற்றவை. 'கண்டக்டட் டூர்' என்று சொல்கிறார்களே, அது இல்லை எங்கள் பயணம். எங்கள் விருப்பத்தை முன்னதாகக் கேட்டு அதன்படி அழைத்துச் செல்ல முயல்கிறார்கள்.

காலையில் எழுந்தவுடன் காப்பியோ தேநீரோ குடித்தால்தான் என்னால் சுறுசுறுப்பாக இயங்க முடியும். மாஸ்கோவாசிகள் மெதுவாகத்தான் எழுந்திருப்பார்கள்! ஓட்டல்களில் அங்கே எதையும் நம்முடைய அறைக்குக் கொண்டுவந்து பரிமாறும் வழக்கமில்லை. இத்தகைய வேலைகள் செய்வதற்கெல்லாம் அங்கே ஆட்களுக்குப் பஞ்சம். அங்கங்கே ஓட்டல்களுக்குள்ளேயே சில மாடிகளில் சிற்றுண்டிக் கடைகளும் சில மாடிகளில் சாப்பாட்டு விடுதிகளும் இருக்கும். மணிக் கணக்குப்படி திறந்து மூடிவிடுவார்கள். வேளா வேளைக்குச் சிற்றுண்டிக் கடைக்குப் போய் க்யூ வரிசையில் நின்று நமக்கு வேண்டியதை வாங்கிக் கொண்டு காசைக் கொடுக்க வேண்டும். பிறகு அருகில் சின்ன மேசைகளில் வைத்துச் சாப்பிட்டுவிட்டு வரவேண்டும். சாப்பிட்ட தட்டுகளை அவர்கள் எடுத்துச் சுத்தப்படுத்திக் கொள்வார்கள்.





1. மாஸ்கோ டெப்லெஸ்டான் பகுதியிலுள்ள விற்பனைப் பகுதி.
2. மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் லெனின் சமாதி.
3. மாஸ்கோ இளம் பயனீர் மாளிகையில் மாணவர் டெலிஸ்கோப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறார்.
4. மாஸ்கோ லெனின் நூலகம்.



ஆனால் சாப்பாட்டு விடுதியில் மட்டும் மேசைக்கு அவர்களே கொண்டு வந்து பரிமாறுவார்கள். குறைந்தபட்சம் ஒரு மணி நேரமாவது சாப்பாட்டுக்கென்று ஒதுக்க வேண்டும்.

அறையில் குழாயில் வரும் பச்சைத் தண்ணீர் சுத்தமானது. குடிப்பதற்கேற்றது. வெந்நீர் அப்படி இல்லை; குளிப்பதற்கு மட்டுமே பயன்படுத்தக் கூடியது. பச்சைத் தண்ணீரைக் காப்பியாக நினைத்துக்கொண்டு குடித்து வைத்தேன். இளஞ்சூட்டு வெந்நீரில் குளித்துவிட்டு உடை மாற்றிக் கொண்டு தயாரானேன்.

நண்பர் சந்திரகுப்த வித்யாலங்கார் அவருடைய அறையிலிருந்து போன் செய்தார். புறப்பட்டு வரச் சொன்னேன். இருவரும் சிற்றுண்டிச்சாலைக்குப் படையெடுத்தோம். காலை எட்டு மணிக்கெல்லாம் அங்கே ஏகப்பட்ட கூட்டம். வெளிநாட்டு உல்லாசப் பயணிகளால் ஓட்டல் நிரம்பி வழிந்தது. மரக்கறி உணவுக்காரனான எனக்கு அங்கே தேர்ந்தெடுத்துச் சாப்பிட வழியில்லை. ரொட்டித் துண்டு, வெண்ணெய், 'கேக்', தயிர், தேநீர் முதலியவைதான். காப்பியிலும், தேநீரிலும் அங்கு பால் கலக்க மாட்டார்கள்.

ரஷ்யாவில் ஓட்டல்கள் — கடைகண்ணிகள் முதலியவற்றில் வேலை பார்க்கும் பெண்களிடம் நம்முடைய ஆங்கிலம் செலாவணியாவதில்லை. கண்ணாடி அலமாரியிலுள்ள பொருள்களைச் சாடை காட்டி வாங்கிக் கொள்ளலாம். பிறகு பர்ஸைத் திறந்து காட்டினால் தேவையானதை மட்டும் எடுத்துக் கொள்வார்கள். சில்லறை கொடுக்க வேண்டியிருந்தால் கொடுப்பார்கள். இந்த விஷயத்தில் வெளி நாட்டுக் காரர்களுக்கு அவர்கள் முடிந்தவரையில் உதவி செய்வார்களே தவிர, அவர்களை ஏமாற்றும் நீசத்தனம் சிறிதும் அந்த நாட்டில் கிடையாது. நம்முடைய நாட்டில் வெளிநாட்டுக்காரர்களை ஏமாற்றுவதையே ஒரு கலையாகச் சிலர் கற்று வைத்திருக்கிறார்கள். இதற்கு ஒரு தனிச் சட்டமே

கொண்டுவந்து அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். ஒரு நாட்டின் நாணயத்தை அந்த நாட்டவர் வழி தெரியாத— மொழி தெரியாத — பழக்கமறியாத — அன்னியரிடம் நடந்து கொள்ளும் முறையில் தான் கணிக்க வேண்டும். இந்தப் பதினைந்து நாட்களில் நூற்றுக் கணக்கான சின்னஞ் சிறு உதவிகளை முன்பின் தெரியாத சோவியத் மக்கள் எனக்குச் செய்திருக்கிறார்கள்.

பகல் பதினொரு மணிக்கு நாங்கள் மாஸ்கோ பல்கலைக் கழகத்தின் இந்தியத் துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். பல்கலைக் கழகம் வளர்ந்து பெரிதாகி விட்டதால், நகரத்தின் பல பகுதிகளிலும் அதன் பிரிவுகள் இயங்குகின்றன. ஆசிய—ஆப்பிரிக்கப் பிரிவுக்கான ஒரு பெரிய மாடிக் கட்டிடத்தில் இந்தியத் துறை இயங்குகிறது. அதில் பணிபுரியும் பேராசிரியை எங்களை வரவேற்க ஏற்பாடு செய்திருந்தார்கள்.

இந்திய இலக்கியப் பகுதியின் தலைவியான பேராசிரியை திருமதி தவாநோவா தம்முடன் உழைக்கும் மற்ற பேராசிரியைகளை அறிமுகம் செய்து வைத்தார். பெரும்பாலோர் பெண்கள். தமிழில் சங்க இலக்கியத்தில் ஆய்வு செய்யும் திரு அலெக்ஸாண்டர் எனும் இளைஞரும் அங்கிருந்தார். அண்மையில்தான் சென்னை பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையில் பயிற்சி பெற்றுத் திரும்பியவர் அவர். திருமதி தவாநோவாவுக்கு இந்திய மொழிகளில் சம்ஸ்கிருதம், ஹிந்தி, உருது தெரியும். ஐரோப்பிய மொழிகளில் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்யன் தெரியும். மொத்தம் ஏழு மொழிகளை எழுதவும் பேசவும் கற்றுக்கொண்ட அவர், 'மன்னிக்க வேண்டும்; உங்கள் தந்தையர் மொழியான தமிழ் எனக்குத் தெரியாது: அதைக் கற்றுக் கொடுக்க வேறு ஆசிரியர் இருக்கிறார்'' என்றார். நாம் தாய் மொழி என்கிறோம்; அவர்கள் தந்தையர் மொழி என்கிறார்கள்.

அங்கே தமிழ், மலையாளம், ஹிந்தி, உருது, பஞ்சாபி, மராத்தி, நேபாளி முதலிய மொழிகள் கற்றுத் தரப்படுகின்றன. இந்த மொழிகளைப் பயிற்றுவிக்கும் ஆசிரியைகள் நம் நாட்டுக்கு வந்து அந்த மொழி பேசும் மாநிலங்களில் தங்கியிருந்து மொழி கற்றிருக்கிறார்கள். இந்தியத் துறைக்குப் பொதுவாக 50 முதல் 60 மாணவர்களை ஆண்டு தோறும் சேர்த்துக் கொள்கிறார்கள். ஐந்து ஆண்டுகள் படிக்க வேண்டும்.

வெளியில் நூல்களை மாணவர்கள் வாங்க முடியாது. ஆகவே அங்கு ஒரு பெரிய நூலகம் வைத்து, மாணவர்கள் படிக்க வேண்டிய நூல்களில் பல பிரதிகள் வாங்கிப் போடுகிறார்கள். நூலகத்தில் ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு பிரிவு இருக்கிறது. அந்தந்த நாட்டின் மொழிகள் இலக்கியங்கள், வரலாறு, சமூகம், அரசியல், பொருளாதாரம் இவ்வளவைப் பற்றியும் நூல்கள் உள்ளன. இவ்வளவு பிரிவுப் பாடங்களையும் இந்த ஐந்தாண்டுகளில் கற்றுத் தருகிறார்கள். நூலகத்தில் உள்ள பெரும்பாலான நூல்கள் ரஷ்ய மொழியிலும் மற்றவை ஐரோப்பிய மொழிகளிலும் உள்ளன.

தொன்மை வாய்ந்த மொழிகளுக்கான நிறுவனமும் (Oriental Languages Institute) பல்கலைக் கழகத்தின் ஒரு பிரிவுதான். அங்கே தமிழ்ப் புலமையில் வல்லவர்களான பேராசிரியர்கள் செனிஷெவ், ஆந்ரநேவ் ஆகியோர் உழைத்து வருகிறார்கள்.

இந்த நூலகத்தைப் பார்த்து வந்தபோது நான் முன்பு பார்வையிட்ட பிரும்மாண்டமான அந்நிய மொழிகளின் நூலகம் நினைவுக்கு வந்தது. உலகத்தில் உள்ள எல்லா மொழிகளின் நூல்களும், நாடு வாரியாக, மொழிவாரியாக அடுக்கப்பட்டுள்ளன. இந்தியப் பிரிவில் பழந்தமிழ் நூல்கள் சில, தமிழ்ப் பகுதியில் இருந்தன.


எட்டே மாதங்களில் ஒரு மொழியைப் பயிலும் குறுகிய காலப் பயிற்சித் திட்டத்தை நான் அந்த நூலகத்தில் பார்வையிட்டேன். படிப்பு, எழுத்து, டேப் ரிகார்டர் வழி உச்சரிப்பு, 'ஸ்லைடு' மூலம் கல்வி புகட்டுதல் என மிகவும் நவீன முறைகளை அவர்கள் கையாளுகிறார்கள்.

ஒரு மொழியைத் தெரிந்து கொள்வது அந்த மொழி பேசும் மக்கள் கூட்டத்தை நாம் நன்கு புரிந்து கொள்ள உதவுகிறது. நட்புறவைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பளிக்கிறது. பல்வேறு உலக மொழிகளையும் கற்கச் செய்து, அப்படிக் கற்றவர்களைக் கொண்டு, அந்தப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்து வரச் செய்து பல நூல்களை ரஷ்யனில் எழுதச் செய்கிறார்கள். உலகின் எந்தப் பகுதியைப் பற்றியும் எடுத்துச் சொல்லக் கூடிய நிபுணர்கள் கூட்டம் அவர்களிடம் எப்போதும் தயாராக இருக்கிறது.

அடுத்தாற்போல் மிக முக்கியமான ஓர் இடத்துக்குச் சென்றோம். 1980 ஜுலையில் தொடங்கி அகில உலக விளையாட்டுப் போட்டிகள் (Olympic Games) ரஷ்யாவில் நடைபெற இருக்கின்றன அல்லவா? அந்த ஏற்பாடுகளைக் கவனித்து வரும் தலைமையகத்துக்குச் சென்றோம். இப்போதிருந்தே

அவன்: உன் செப்பு வியாபாரம் எப்படியிருக்கு...?''
இவன்: ''வாரிவிட்டுடுச்சு... ஏகப்பட்ட நஷ்டம்!''
—உ.ராஜாஜி





எங்கு திரும்பினாலும் ரஷ்யாவில் இந்தப் பேச்சுத்தான். தபால் தலைகள், பேட்ஜுகள் பொம்மைகள், டைரிகள், வாசனைத் திரவியங்களின் மேல் அட்டைகள் எங்குமே இதுபற்றிய படங்கள்.

உடற் பயிற்சி சம்பந்தமான விளையாட்டுக்களின் தலைவர் தாங்கள் அதற்காகச் செய்து வரும் முன்னேற்பாடுகளை எங்களிடம் விவரித்தார்:

உலகின் எல்லா முக்கியமான நாடுகளும் போட்டியில் கலந்து கொள்வதால், போட்டியைச் சிறப்பாக நடத்துவதற்காகப் பெரிய அளவில் இப்போதிருந்தே ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெறுகின்றன. மாஸ்கோ நகரத்தைச் சுற்றிலும் பிரம்மாண்டமான 'ஸ்டேடியம்'கள் கட்டப்படுகின்றன. ஒரே சமயத்தில் பல இடங்களில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும்படியான விளையாட்டுத் திடல்கள் எழும்பி வருகின்றன. ஒரு லட்சம் பேர், அறுபதாயிரம் பேர், நாற்பதாயிரம் பேர் என்று அமர்ந்து பார்க்கக் கூடிய தனித் தனி அரங்குகள்!

வெளி நாடுகளிலிருந்து மூன்றரை லட்சம் பார்வையாளர்களையும் உள் நாட்டிலிருந்து மூன்றரை லட்சம் பார்வையாளர்களையும் எதிர்பார்க்கிறார்கள். பத்திரிகையாளர்கள் மட்டிலும் 11,100 பேர். பத்தாயிரம் பேர்கள் தங்கக் கூடிய புதிய ஓட்டல்கள் பல அங்கு உருவாகி வருகின்றன.

இந்தப் போட்டியில் கலந்து கொள்பவர்களைத் தேர்ந்தெடுக்கும் தேசியப் போட்டிகளில் அப்போது 10500 ரஷ்ய வீரர்கள் நாட்டின் பல பகுதிகளிலும் கலந்து கொண்டிருந்தனர். மாஸ்கோவின் புறநகர்ப் பகுதிகளில் எழும்பி வரும் சில விளையாட்டு அரங்குகளை மறுநாள் நண்பர் மணிவர்மா வீட்டு விருந்துக்குப் போய்த் திரும்பும் வழியில் கண்டு நான் பிரமித்தேன்.

ஆமாம், இவ்வளவு செலவையும் சிரமத்தையும் இரண்டு வாரங்களே நடைபெறப் போகும் விளையாட்டுத் திருவிழாவுக்காக மட்டும்தான் அவர்கள் செய்கிறார்களா? இல்லை. அதை நான் பிறகு பல நண்பர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன்.

ஓய்வு நேரத்தைச் செலவிடுவதற்காக இப்போதுள்ள நடன, நாடக, சர்க்கஸ் விளையாட்டு அரங்குகள் அந்த நாட்டு இளைஞர்களுக்குப் போதவில்லை. நகரில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகளுக்கு க்யூவில் காத்து நின்றாலும் இடம் கிடைப்பதில்லை. ஆகவே இந்த உலக விளையாட்டுப் போட்டியை ஒரு முகாந்திரமாகக் கொண்டு நாடெங்கிலும் உள்ள இளைஞர்களுக்கு நிரந்தரமான ஓய்வு நேர விளையாட்டு வசதிகள் செய்து கொடுக்க அவர்கள் முனைந்து விட்டார்கள்.

மாலை நாலு மணிக்கு இந்தியத் தூதரின் முதற் செயலாளர் டாக்டர் கே. எல். காந்தியைச் சந்திப்பதாகப் போன் செய்திருந்தேன். நண்பர்களோடு தூதரகத்துக்குப் புறப்பட்டோம். '77ம் ஆண்டே எனக்கு அவர் மாஸ்கோவில் அறிமுகமானவர். இரண்டு ஆண்டுகளாக அங்கு கலாசாரத் துறையைக் கவனித்து வருகிறார். பஞ்சாபி, ஹிந்தி, உருது, பார்ஷியன், ஆங்கிலம், ரஷ்யன் ஆகிய மொழிகளில் வல்லவர். டில்லியில் திட்டத் துறை அமைச்சகத்தில் முன்பு பணியாற்றியவர்.

''இந்த இரண்டு ஆண்டுகள் சோவியத் வாழ்க்கையில் உங்களை மிகவும் கவர்ந்த விஷயம் என்ன? எதை இவர்களுடைய சிறந்த திட்டம் என்று நினைக்கிறீர்கள்?'' என்று டாக்டர் காந்தியிடம் கேட்டேன்.

''குழந்தைகளை — இளைஞர்களை — மனிதர்களை இவர்கள் தேசத்தின் தலையாய சொத்து என்று மதிக்கிறார்கள். உடலால், உள்ளத்தால், அறிவால் அவர்கள் வளர்ச்சி பெறுவதற்கு எல்லா வாய்ப்புக்களையும் வசதிகளையும் செய்து கொடுக்கிறார்கள். நாட்டில் காகிதப் பஞ்சம் இருந்தும் கூட, குழந்தைகளுக்கான பாடப் புத்தகங்களுக்கும், பத்திரிகைகளுக்கும் கதைப் புத்தகங்களுக்கும் காகிதத்தைக் கொண்டு வந்து குவிக்கிறார்கள். குழந்தைகளுக்கான பெரும்பாலான பொருள்கள் குறைந்தபட்ச விலையில் விற்கப்படுகின்றன.''

டாக்டர் காந்தி சோவியத் நாட்டு வெற்றி ரகசியத்தின் ஆணிவேருக்கே போய்விட்டார். அவர் கூறியதுதான் முற்றிலும் உண்மை. ஒருசில மேலைநாட்டார் போல் ஆடம்பர வாழ்க்கைக்கான அளவற்ற செல்வச் சிறப்பில் சோவியத் மக்கள் மிதக்காமல் இருக்கலாம். ஆனால் அவர்கள் ஒழுங்கும் கட்டுப்பாடும் உடலுறுதியும் உள்ள உறுதியும் கல்வியறிவும் கலாசாரமும் பண்பாடும் கொண்ட வலிமையான மனிதர்கள். ஆற்றல் நிறைந்தவர்கள். ஆண்கள் ஒவ்வொருவருக்கும் அந்த நாட்டில் இரண்டு ஆண்டுகளுக்குக் கட்டாய ராணுவப் பயிற்சி உண்டு. நட்புக்காக அவர்கள் எதையும் செய்வார்கள். பகைவர்களுக்கு அவர்கள் பயங்கரமான எதிரிகள். இத்தகைய தேச பக்தி மிக்க ஒரு மனிதக் கூட்டத்தைத் தன்னகத்தே கொண்ட ஒரு நாட்டை உலகின் எந்தச் சக்தியாலும் வீழ்த்த முடியாது.

ஒழுங்கு படுத்தப்பட்ட தேசிய மனப்பான்மை கொண்ட மனித சக்தியின் வலிமை ஒன்றுதான் சோவியத் நாட்டின் அடிப்படை வலிமை. நண்பர் காந்தி மேலும் தொடர்ந்தார். என் ஆவலைத் தூண்டினார். (தொடரும்)

அனைவருக்கும்
மனநிறைவு தரும்
சுவைமிகு ஊறுகாய்!

டி.எஸ்.ஆர்
வெஜிடபிள்
ஊறுகாய்

டி. எஸ். ஆர். & கோ.,
'கோகுல் கார்டன்ஸ்'
கும்பகோணம்.



Criterion TSR 337 5 TM



வைரங்கள்

சுஜாதா

அத்தியாயம் 4
காதருக்குக் கிராக்கி!

ஒரு நல்ல வைரத்துக்கு நாலு 'சி' சொல்வார்கள்.

ஸியால், மாக்மா, மேண்டில் இவையெல்லாம் என்ன என்று தெரிய புரொபசர் சீனிவாச சர்மாவைக் கேட்கலாம். அறுபது வயசு அவருக்கு. ஜியாலஜி நன்றாகத்தான் ஞாபகமிருக்கிறது. புரொபஸர் பட்டம் அவருடைய ஆரம்ப காலங்களில் மைசூர் பல்கலைக் கழகத்தில் ஒட்டிக் கொண்டது. பின் அவர் மைசூர் — கருநாடக மாநிலத்தில் ஜியாலஜிஸ்டாக உத்தியோகம் பார்த்து, பதவி உயர்ந்து டிபார்ட்மெண்டின் தலைவராகி, ரிடையர் ஆகி கோயமுத்தூர் வந்து செட்டில் ஆன பிறகுகூட ப்ரொபசர்தான்.

சர்மா ஒரு தலைமுறையின் எடுத்துக்காட்டு. அரசாங்க உத்தியோகஸ்தராக பிரிட்டிஷ் ராஜ்யத்தில் தம் இளமைப் பிராயத்து மேலதிகாரி ஜான் பார்ட்டன் என்பவரை இன்னும் ஞாபகம் வைத்துக் கொண்டு அலமாரிக்கு மேல் படமாக மாட்டியிருக்கிறார். இரண்டு பையன்கள் ஒரு பெண். மூத்தவனும் ஜியாலஜி எம். எஸ்ஸி படித்து ஓ என் ஜி ஸி யில் டேராடூனில் இருக்கிறான். அடுத்தது பெண். அமெரிக்காவில் இருக்கிறாள். ப்ரின்ஸ்டனில் மாப்பிள்ளை அஸிஸ்டெண்ட் ப்ரொபஸர். பெண் வாரா வாரம் யு எஸ் ஏ என்று பெரிசாகப் போட்ட ஏரோகிராம் கடிதங்கள் அனுப்பி, சிரகப் பொடி எப்படிச் செய்வது என்று கேட்பாள். திடுதிப்பென்று பக்கத்து வீட்டுக்கு நட்ட நடு ராத்திரியில் ப்ரின்ஸ்டனிலிருந்து டெலிபோன் என்று வந்து கூப்பிடுவார்கள். மூன்றாவது பையன் ராதாகிருஷ்ணன்.

சர்மா ரிடையர் ஆன பிற்பாடு ராமாயண மகாபாரதத்தில் ஆழ்ந்தாலும் அவ்வப்போது ஹிந்துவுக்கு மகாபாரதத்தில் ஜியாலஜி பற்றிய சுலோகங்களைப் பற்றி 'டியர் சார்' என்று ஆரம்பித்துக் கடிதங்கள் எழுதுவார். சர்மாவைப் பற்றி மேல் விவரங்கள் கூறுவதற்குள் ராதாகிருஷ்ணன் வந்துவிட்டான். சர்மா படித்துக் கொண்டிருந்தார்.

பைக்குள்ளிருந்து அந்தக் காகிதப் பொட்டலத்தை எடுத்து அதைப் பிரித்து அந்தக் கல்லை எடுத்து, ''அண்ணா! இதைப் பாருங்கோ!'' என்றான்.

சர்மா அதைப் பார்த்தார்: முதல் பார்வைக்கு க்வார்ட்ஸ் போல் இருந்தது.

''பூஜை பண்றபோது ஆறுக்கே வந்து என்னடா இப்படி!'' என்றார். ஆனாலும் கண் பார்வை அந்தக் கல்லின் மேல் நின்றது. நிச்சயம் வித்தியாசமான கல். அதை வாங்கிப் பார்த்தார்.

''எங்கேடா பொறுக்கினே இதை?''

''பொறுக்கலை. என் ஃப்ரெண்ட் கொடுத்தான். இதைப் பார்த்தா எனக்கு என்னமோ சாதாரணக் கல்லாத் தெரியலை. உறுதியா இருக்கு.''

''சரி அதை அங்கே அலமாரியிலே வை. நான் பூஜை முடிச்சுட்டு வந்து நிதானமா பார்க்கறேன்.''

ராதாகிருஷ்ணன் அந்தக் கல்லை அலமாரியில் சுவாமி படங்களுக்கு அருகில் வைத்தான்.

''ஜன்மனா ப்ராம்மணே ஞேயஹ ஸம்ஸ்க்காரைரதி த்விஜ உச்யதே''

பிறப்பினால் பிராமணன் ஸம்ஸ்காரங்களினால் த்விஜன் எனப்படுகிறான்.

ராதாகிருஷ்ணன் வீட்டுக்கு வெளியே வந்து தெருக் கோடிக்கு நடந்து சிகரெட் பற்ற வைத்துக் கொண்டான்.

பக்தி புத்தகங்கள் படித்துவிட்டுக் கடகட வென்று முப்பது நிமிஷத்தில் ஸகஸ்ரநாமம் சொல்லிவிட்டு வாசல் பக்கம் வந்து வெளிச்





சத்தில் அந்தக் கல்லைப் பார்க்க உட்கார்ந்தார் சர்மா. அதைக் கட்டை விரலால் தடவிப் பார்த்தார். ஒரு படிமத்தில் வழ வழ என்றே இருந்தது. நிறைய அழுக்கு இன்னும் படிந்திருந்தது. ஒரே ஒரு பக்கத்தில் அழுக்கில்லாத ஒரு ஜன்னல் வழியாக உள்ளுக்குள் பார்க்க முடிந்தது. ஒரு சின்ன நெருப்புத் தெரிந்தது. வெண்மையான நெருப்பு. சர்மா நிமிர்ந்தார். இப்போது அவர் செயல்களில் சற்று அவசரம் தென்பட்டது. உள்ளே போய் ஒரு பூதக் கண்ணாடி போன்ற சமாசாரத்தை எடுத்து வந்து அதை ஒரு கண்ணில் பொருத்திக் கொண்டு கல்லைக் கூர்ந்து பார்த்தார். நிமிர்ந்து சற்று நேரம் யோசனை செய்தார். மறுபடியும் பார்த்தார்.

''கிருஷ்ணா! கிருஷ்ணா!''

''அவன் உள்ளே இல்லையாக்கும்.''

''எங்க போயிட்டான்?''

''எங்க போவான்? டி பி ஜி கடையிலே உக்காந்திருப்பான்.''

''என்ன அண்ணா'' என்று ராதாகிருஷ்ணனே வந்துவிட்டான். அசோகா பாக்கு மென்று கொண்டிருந்தாலும் சற்றுத் தன்



லியே நின்றான். குப்பென்று சிகரெட் புகை வாசனை அவனைச் சுற்றிலும் மூன்று மீட்டர் பரவியிருந்தது.

''சிகரெட்டா?'' என்றார்.

''ம்... இல்லை.... வந்து...'' என்று விழித்தான்.

''கான்ஸர் சாவிலே 75 சதவிகிதம் சிகரெட்டினால்; பல்மனரி டிஸீஸ்ல நாற்பது சதவிகிதம் சிகரெட்டினால்; எல்லா சாவு களிலேயும் இருபத்தி அஞ்சு சதவிகிதம் சிக ரெட்டினால் தெரியுமா?''

''ஸாரி அண்ணா. எப்பவாவது ஒண்ணு தான் பிடிக்கிறேன்!''

''இந்தக் கல்லை உன் ஃப்ரெண்டு எங்கே இருந்து எடுத்தான்?''

''தெரியாது அண்ணா ஏன்?''

''பார்த்தா வைரம் மாதிரி இருக்கு. நேக் கட் ஐயில ஃப்ளா எதுவுமே தெரியலை. மைக் ராஸ்கோப்பு வைக்கப் பார்க்கணும். உள்ளுக்குள்ளே ஸ்படமா துல்யமா இருக்கு. கலர் கலக்காத நல்ல வைர மாக்கும். எதுக்கும் மைக்ரா ஸ்கோப் பிலே போட்டுப் பார்த்தா கன்ஃ பார்ம் ஆயிடும்.''

''வைரமா? இத்தனை பெரிசா?''

''அதான் எனக்கு முதல்லே நம்ப முடியலை. அடிச்சுச் சொல்ல முடியலை. இருந்தாலும் இது ஸம்திங் அன் யூஷுவல். உன் சினேகிதனுக்கு எப் படிக் கிடைச்சது?''

''தெரியலை அண்ணா. என்கிட்ட இதை அலட்சியமாவே கொடுத்து 'உங்கப்பா கிட்ட காட்டு. நல்லதா இருந்தா சொல்லு. இல்லாட்டா தூக்கி எறி'ன்னு சொன்னான். என்ன விலை இருக்கும்? ஐயாயிரம் ரூபாய்?''

சர்மா சிரித்தார். அதைத் தோராய மாகக் கையில் எடை போட்டார்: ''ஆறு கிராம் இருக்கும். என்னதான் தீட்டறதுக்குச் சிதைச்சாலும் பாதியாக்கினால் கூட பத்துப் பதினைஞ்சு காரட் தேறும். நல்ல வைரமா இருந்தா காரட் ரேட் வைரத்தோட துல்லி யத்தைப் பொறுத்து எட்டாயிரத்திலிருந்து ஆரம்பிச்சு ஐம்பதினாயிரம் ஏன், ஒரு லட்சம் கூடப் போகும்!''

ராதாகிருஷ்ணன் மனக் கணக்குப் போட் டுப் பார்த்து, ''மை காட்! இந்தக் கல்லிலே லட்சக் கணக்கா மதிப்பு இருக்குங்கறே?'' என்று வியந்தான்.

''இருக்கலாம்கிறேன். இன்னும் பரிசோ தனை பண்ணிப் பார்க்கணும். எதுக்கும் உன் ஃப்ரெண்ட் கிட்டச் சொல்லிடு. யார் அவன்?''

''ப்ரேம் அண்ணா! சேட்டுப் பையன்!''

''அவனா? எப்படிக் கிடைச்சது அவ னுக்கு? அதை முதல்லே கேள்!''

''எப்படிக் கிடைச்சா என்ன அண்ணா? அவன்கிட்ட நாம் இதைச் சொல்லியே ஆகணுமோ? அவன் எனக்குத் தானமாத் தான் கொடுத்தான். நல்லா இல்லைன்னா விசிறிக் கடாசன்னான்!''

''கடாச வேண்டாம்னு சொல்லிடு!''

''அவன் கிட்டச் சொல்லாமலே இருந்துட்டா?''

''கிருஷ்ணா! அந்த விவகாரம் மட்டும் வேண்டாம். நான் எவ்வளவோ வைரங்களை என் லைஃப்ல பார்த்திருக்கேன். எவ்வளவோ வைரங்களைப் பத்தி நான் படிச்சிருக்கேன். கோஹினூர் ஹோப் டயமண்ட்.! வைரத்தால் துரதிர்ஷ்டம்தான் பீடைதான் வரும். அதுவும் பெரிய வைரமா இருந்தா அதனுடைய ஆக்ரோஷத்தை ஜாஜ்வல்யத்தை யாராலும் சமாளிக்க முடியாது! பாரு! ஆரம்பத்திலேயே உன்னைப் பொய் சொல்ல வைக்கிறது பார். ஆசை! பேராசை! வேண்டாம். நமக்கு வேண்டாம். உன் ஃப்ரெண்டு கிட்டத் திருப்பிக் கொடுத்திடு அதை! ஆனா எனக்கு ஒரு விவரம் மட்டும் வேணும். அது எங்கே கிடைச்சதுன்னு எனக்குத் தெரியணும்!''

ராதாகிருஷ்ணன் அந்த அழுக்கான கல்லைப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

''எங்க கிடைச்சதுன்னு தெரிஞ்சுக்கறதாலே என்னன்னு லாபம்?''

''லாபத்துக்காக இல்லே. நான் இந்தக் கோயமுத்தூர் ஜில்லாவிலே கிடையர் ஆனைப் புறம் நிறையச் சுத்தியிருக்கேன். ராக் ஃபார்மேஷன் எல்லாம் பார்த்திருக்கேன்.. ஜியாலாஜிகலா பல சுவாரஸ்யமான விஷயங்களை சொஸைட்டிக்கு ரிப்போர்ட் பண்ணியிருக்கேன். இரண்டு வருஷத்துக்கு முன்னாடி ஜர்னல்ல எழுதியிருக்கேன். பாலக்காடு போற வழியில, மலைப் பிரதேசத்திலே கார்னெட் ஸ்டோன்ஸ் பார்த்தேன். மெட்டமார்ஃபிக் ராக்ஸ். அப்புறம் கொஞ்சம் மேற்கே போனா ஹார்ன் ப்ளென்ட் ஆலிவின். தீவிரமா சர்வே பண்ணா டைமண்ட் கூடக் கிடைக்கலாம்னு அப்பவே எழுதிட்டேன்! எங்கே கிடைச்சதுன்னு கேட்டுண்டு வா. அதுதான் எனக்கு முக்கியமான தகவல்.''

ராதாகிருஷ்ணன் சைக்கிளை எடுத்துக் கொண்டு ப்ரேமைப் பார்க்கச் செல்கையில் அவன் மனத்தில் ஒரு விசீகரமான இட்டம் உருவாகியது. எதற்கு அவனிடம் சொல்ல வேண்டும்? முதலில் இடத்தைக் கண்டுபிடித்து அந்த இடத்தில் இது போன்ற நூற்றுக் கணக்கான கற்கள் கிடைத்தால், அடேயப்பா! 'எஸ். ஆர். டைமண்ட்ஸ்' என்ற ஸ்தாபனம் – புல்டோஸர்கள் எர்த் மூவர்ஸ் மைனிங் எக்விப்மெண்ட்!....

எஸ். ஆர். வைரங்கள்!

''மிஸ்டர் ராதாகிருஷ்ணன் யு மஸ்ட் கம் டு ஜோஹன்ஸ்பர்க் ஒன்ஸ்!''

சைக்கிளுக்கு ஸ்டாண்ட் இல்லாததால் அதைச் சுவரோரமாகச் சாத்திவிட்டு உள்ளே சென்று, ''ப்ரேம் ப்ரேம்'' என்று கூப்பிட்டான்.

''ப்ரேம் பாத் ரூம்லே இருக்கான். இப்ப வருது.''

''ஹலோ ஷீலா!''

''ஹலோ ராதா! நல்லா இருக்கியா?''

ஷீலா சட்டை பாண்ட் அணிந்திருந்தாள். செம்பட்டை மயிரை இரண்டு விநோதப் பின்னல்களாகப் பின்னியிருந்தாள். நெற்றியில் ஊசி முனைப் பொட்டு. கரு ரத்த நிறத்தில் லிப்ஸ்டிக். செக்கச் செவேல் என்று இருந்தாள்.

''ப்ரேம் நான் உன்கிட்ட இந்த ரகசியத்தைச் சொன்னதுக்கு எனக்கு ஒரே ஒரு உபகாரம் பண்ணணும்!''

''என்ன வேணுமானு கேளு ராதா!''

''உன் சிஸ்டர்...''

ப்ரேம் உடம்பு துடைத்துக் கொண்டு வந்தான். சின்னி ஒரு தட்டில் பழங்கள், டிபன் எல்லாம் கொண்டு வந்து வைக்க ''இன்னொரு தட்டு கொண்டுவா சின்னி'' என்றான்.

''ப்ரேம் நான் இப்பத்தான் சாப்பிட்டேன். வேண்டாம்.''

''பரவாயில்ல பிரதர் ஃப்ரூட்ஸ் சாப்பிடு. என்ன விஷயம்?''

''அந்தக் கல்லு ஒன்னு குடுத்த பாரு?''

''ஆமா!''

''அது எங்க கிடைச்சது உனக்கு?''

''ஏன்?''

''இல்லே, எங்க கிடைச்சதுன்னு கேட்டேன்!''

''ஏன்னு கேட்டேன்! உங்கப்பா என்ன சொன்னாரு?''

''அது ஏதோ சாதாரணக் கல்லுதான்னு சொன்னார். இருந்தாலும் ஜியலாஜிகலா கொஞ்சம் சுவாரஸ்யமான கல்லாம். அதனாலே அது எங்கே கிடைச்சதுன்னு உன்னைக் கேட்டுக்கிட்டு வரச் சொன்னார்.''

ராதாகிருஷ்ணன் மேஜையைப் பார்த்துக் கொண்டே பேசினான்.

ப்ரேம் புன்னகைத்தான். ''உங்க அப்பா தான் அப்படிச் சொன்னாரா?''

''ஆமா.''

''வா. போகலாம்.''

''எங்கே?''

''உங்கப்பாவைப் பார்த்துக் கேட்டுட்டு வரலாம்!''

''என் கிட்டச் சொல்லேன். அவர் பூஜையில் இருப்பார்!''


''கம் ஆன் யார், கட் இட் அவுட். நீ பொய்தானே சொல்றே? ஜுட் போல்தா தைறு யார்?''

அவன்? ''எங்க மானேஜர் ரொம்பக் கெட்டிக்காரர்டா!

இவன் : ''எப்படி சொல்றே?

அவன் : ''அழகில்லாத பெண் ஒருத்தி தப்புத்தப்பா டைப் செய்றான்னு அவளை வேறு பிராஞ்சுக்கு மாத்திட்டாரு. அந்த நாப்லே வந்த அழகான லேடிடைப்பிஸ்ட்டும் தப்புத்தப்பா டைப் செய்தா... டைப்ரைட்டிங் மிஷினை மாத்திட்டாரு !''

—உ. ராஜாஜி




''சேச்சே!''

''உன் கண்லயே தெரியுது. சொல்லு. அந்தக் கல்லு கொஞ்சம் பெரிய விஷயம் தானே?'' சொல்லு! இத டார் ராதா! நான் பிஸினஸ்லெ இருக்கறவன். கண்ணைப் பார்த்தே போய் கண்டு பிடுச்சிடுவேன்! ராதா நானும் நீயும் டியர் ஃப்ரெண்ட்ஸ். என் கிட்டப் போய் சொல்லிட்டன்னு இது நிச்சயம் விலை உயர்ந்தது!''

ராதாவின் கண்கள் சரிந்தன. ''ஸாரிடா! இந்தக் கல்லு நல்ல வைரமாம்!''

''இஸ் இட்? என்ன மதிப்புப் பெறுமாம்?''



''சரியாச் சொல்லலே! அதுக்கு இன்னும் டெஸ்ட் பண்ணணுமாம். எங்க கிடைச்சதுன்னு கேட்டுட்டு வரச் சொன்னாரு. அந்த இடத்துலே இது மாதிரி இன்னும் நிறைய வைரங்கள் இருக்கச் சான்ஸ் இருக்காம்.''

ப்ரேம் சாப்பிடுவதைப் பாதியில் நிறுத்தித் தட்டிலேயே கை அலம்பி விட்டான்.

''வா, போகலாம்'' என்று கிளம்பினான்.

''எங்கே?''

''உங்கப்பாவைப் பார்க்க!''

''நமஸ்காரம் ஸார்!'' என்று குனிந்து சர்மாவின் காலைத் தொட்டுக் கும்பிட்டான்.

''நீதான் ப்ரேமா?''

''ஆமா ஸார்.''

''எங்கய்யா புட்சே அந்தக் கல்லே?''

''அது தெரியாதுங்க! லாரி க்ளீனர் பையன் வெச்சிருந்தான். ஆறு கண்டு பிடிச்சுடுவேன். அது நல்ல வைரம் தானுங்களா?''

''என் அனுபவத்தின்படி என் ஞானத்தின்படி அதைப் பார்த்தா நல்ல வைரம் மாதிரி தோணுது. யூனிவர்ஸிட்டியில் போய்ப் பரிசோதிச்சுக் கன்ஃபர்ம் பண்ணிடலாம். எனக்கு அது எந்த இடத்துலே கிடைச்சது என்கிறதுதான் தெரியணும்.''

''தெரிஞ்சு அந்த இடத்தை நாம வாங்கிட்டா ப்ரைவேட்டா டைமன் பண்ணிக்கலாமா?''

''அதெப்படி? நீ டிபார்ட்மெண்டுக்குத் தகவல் தெரிவிக்கணும். ப்ரைவேட் மைனிங் இல் டைமண்ட் நாட் அலவ்ட்.''

''சொல்ல வேண்டாமே!''

''நீ எதுக்கும் ஒரு லாயரைப் பார்த்துக்க! அந்த எடம் என்னதுங்கறதைத் தெரிஞ்சுக்கறதுக்கு முன் நீ சுரங்கம் வெட்ட ஆரம்பிச்சுட்டியே! சரியான சேட்டுய்யா நீ!''

''மத்த தேசங்கள்ல எப்படி ஸார்?''

''மத்த தேசங்களில டி பீர்ஸ்னு ஒரு கம்பெனி இருக்குது. அதுதான் உலகத்தில வைர பிஸ்னஸ்ல என்பது சத விகிதத்தை கண்ட்ராக்ட் பண்ணுது.''

''ப்ரைவேட் கம்பெனி?''

''ஆமாம்.''

''பின்னே? இங்கயும் ஒரு ரிட் பெட்டிஷன் போட்டுற வேண்டியதுதானே? நீங்க சொல்றுப்பல அதை அப்புறம் பார்த்துக்கலாம். அதுக்கு முந்தி இடத்தைக் கண்டுபிடிக்கணும்!''

ப்ரேம் அந்தக் கல்லைப் பைக்குள் போட்டுக்கொண்டான். எஸ். ஆர். டைமண்ட்ஸ் போர்ட் அழிந்தது. ப்ரேம் தன் பைக்குள்ளிருந்து பர்ஸ் எடுத்து ஐந்து நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்து ''இந்தாங்க'' என்றான் சர்மாவிடம்.

''என்னது?''

''உங்க சிரமத்துக்கு என்னுடைய ப்ரஸெண்ட் மாதிரி வெச்சுக்கங்க!''

சர்மாவுக்குக் கோபம் வந்தது. ''யங்மேன், உனக்கு விவேகம் இல்லே. இனி என்கிட்ட இந்த மாதிரி நோட்டைக் காட்டாதே. எனக்கு ஞானத்தில்தான் இஷ்டம். பணத்தில் இல்லே. முப்பது வருஷம் சர்க்கார்ல நேர்மையா உத்தியோகம் பார்த்திருக்கேன். ஆயிரம் ரூபா பென்ஷன் வரது. என் கடமைகளை யெல்லாம் முடிச்சுட்டேன். இந்த வீடு என்னுது. எனக்கு வியாதி எதுவும் இல்லே. கண் நல்லாத் தெரியுது. பல்லெல்லாம் பத்திரமா இருக்கு. எனக்கு எதுக்குப் பணம்!''

''ரொம்ப ரொம்ப ஸாரி ஸார். சின்னப் பையன். தப்பா செஞ்சுட்டேன்! எனக்கு மாப் குடுத்துடுங்க!'' என்று மறுபடியும் காலைத் தொட்டான் ப்ரேம்.

''அடுத்த தடவை இந்த மாதிரி செய்யாதே, என்ன?''

''செய்ய மாட்டேன்! மாட்டேன்! ஒரே ஒரு ரிக்வெஸ்ட். நீங்க இந்த விஷயத்தை வேறே யார் கிட்டேயும் கொஞ்ச நாள் சொல்லாமல் இருந்தால் நல்லது.''

''இங்க யார் வரா?''

ப்ரேம் வெளியில் வந்து, ''என்ன லெக்சர் குடுக்கறார் உங்கப்பா!'' என்றான்.

''அவர் எப்போதும் அப்படித்தான்.''

''நீ வாங்கிக்க!'' என்று அவள் பைக்குள் அந்த நூறு ரூபாய் நோட்டுக்களைத் திணித்து விட்டுப் புறப்பட்டான் ப்ரேம்.

பட்டறைக்குச் சென்றான்.

''காஸ்! அன்னிக்கு ஒரு சோக்ராப் பையன் - க்ளீனர் இருந்தானே...''

''காதர்!''

''அவன் எங்கே? கூட்டிவா!''

(தொடரும்)



ஒரு தப்பத்தாளம் ஒரு சரியான ராகம்

ராஜேஷ்குமார்

படத் தயாரிப்பாளர் சந்திரபூஷணம் தனது அடுத்த கலர்ப் படத்துக்காக டைரக்டர் வசீகரனோடும், வசன கர்த்தா இனிய சக்கரவர்த்தியோடும் அந்த ஏர்க்கண்டிஷன் அறையில் டிஸ்கஷன் நடத்திக் கொண்டிருந்த போதுதான் — வெளியே காவலுக்கு இருந்த எடுபிடி ஏகாம்பரம் உள்ளே நுழைந்தான். பவ்யமாகச் சொன்னான்:

''ஸார்! உங்களைப் பார்த்துப் பேசணும்னு டூப் கிருஷ்ணன் வந்து உட்கார்ந்திருக்கான்.''

சந்திரபூஷணம் தன் நெற்றிப் புருவங்கள் மேலேற டைரக்டர் வசீகரனைப் பார்த்தார்.

''உள்ளார வரச் சொல்லுங்க...'' டைரக்டர் வசீகரன் முதல் படமே நூறு நாள் ஓடியதில் — கொஞ்சம் சந்தோஷத்தில் பருத்துப்போன தம் தொந்தியைச் செல்லமாய்த் தடவிக் கொண்டே சொன்னார்.

அடுத்த சில நிமிடங்களில்—

ஒரு ஹீரோவுக்கு உரிய உடற்கட்டும், முகவெட்டும் பொருந்திய அந்த இளைஞன் அந்த அறைக்குள் நுழைந்தான். மார்பின் குறுக்காகக் கைகளைக் குவித்து ஒரு கும்பிடு போட்டான்.

''வாப்பா... கிருஷ்ணன்... என்ன விஷயம்?'' — சந்திரபூஷணம் பல்லிடுக்கில் வார்த்தைகளை மென்று துப்பினார்.

கிருஷ்ணன் பணிச்சென்று சொன்னான்: ''போன படத்துக்குச் செஞ்ச வேலைக்கு இன்னமும் பணம் தரலியே ஸார்...''

கண்களை இடுக்கி அவனைக் கூர்மையாகப் பார்த்தார் சந்திரபூஷணம்.

''பதினைஞ்சு நாளைக்கு முன்னாடி முந்நூறு ரூபா மானேஜர் மூலமா குடுத்து அனுப்பிச்சேனே.... அவர் குடுக்கல்லியா?''

''அது படத்திலே நடிச்ச நாலைஞ்சு சீனுக்காகப் பேசின ரேட்டு ஸார். ஆனா படத்துல கடைசி சீன்லே ஹீரோ சாருக்குப் பதிலா அந்த மலையிலிருந்து கயித்தைக் கட்டிக்கிட்டு எதிர்த்தாப்பல இருக்கிற குன்றுக்குத் தாவுற காட்சியில நடிச்சதுக்கு இன்னமும் பணம் தரல்லே ஸார்....''

சந்திரபூஷணம் கேலியாகச் சிரித்தார். ''அதுக்கு வேறே தனியாப் பணமா? நீ என்னப்பா ரொம்பவும் பேராசைப்படறே?''

கிருஷ்ணன் அவர் பேச்சை இடைமறித்துச் சொன்னான்: ''அந்தக் கடைசிக் காட்சியில் ஹீரோ ஸாருக்கு டூப்பா நான் நடிச்சதை முதல் ஒப்பந்தம் பண்றப்ப நாம பேசிக்கலே ஸார்... கடைசியா அது முடிவு பண்ணினது. நீங்க குடுத்த முந்நூறு ரூபா படத்துல நாலைஞ்சு சீன் வந்ததுக்காக!... கடைசி சீன்லே உசிரைப் பணயம் வெச்சு... கஷ்டப்பட்டு நடிச்சேன் ஸார்...''

''சை!'' — கையிலிருந்த பால் பாயிண்ட் பேனாவை விசிறியடித்தார் சந்திரபூஷணம். ''இந்த மாதிரி சன்னை பிடிச்ச ஆசாமிங்களால்தான் நாங்களெல்லாம் போண்டியாகிறது.... முந்நூறு ரூபா பேசினதே உனக்கு அதிகம்னு நான் நினைச்சுக்கிட்டிருக்கேன்... நீ இப்ப வந்து இன்னமும் பணம் கேட்டா நான் எங்க போறது? தலையில துண்டைப் போட்டுக்கிட்டுப் பிச்சை எடுக்க வேண்டியதுதான்.''

டூப் கிருஷ்ணன் சிலிர்த்தான். ''ஸார்... நான் செஞ்ச வேலைக்கு நியாயமான கூலியைக் கேக்கத்தான் வந்தேன். உங்ககிட்ட பிச்சை கேக்க வரல்லே... உங்களுக்குப் பிரியம் இருந்தா எனக்குக் குடுங்க. இல்லாட்டி அந்தக் காசை நீங்களே சாப்பிடுங்க. நானும் என்னோட குடும்பமும் ரெண்டு நாள் பட்டினி கிடந்தா நாட்டிலே புரட்சியா வந்துடும்?''

சந்திரபூஷணமும் மற்றவர்களும் திகைத்துப்போய் அமர்ந்திருக்க—

அவன் கதவைத் திறந்து கொண்டு கோபமாய் வெளியேறினான்.

அன்று மாலை நான்கு மணி.

லுங்கி கட்டிக் கொண்டு கைக் குழந்தையோடு வேடிக்கை காட்ட வாசலுக்கு வந்து நின்ற டூப் கிருஷ்ணன் திகைத்துப் போனான்.

தன் வீட்டுக்கு முன்னால் வெட்டிய கேக் துண்டமாய் வந்து நின்ற 'பென்ஸ்' காரினின்றும் படத் தயாரிப்பாளர் சந்திரபூஷ

ணம், டைரக்டர் வசிகரன், இன்னும் இரண்டு பேர் இறங்கித் தன்னை நோக்கி வருவதைக் கண்டதும் புரியாமல் விழித்தான்.

''வாங்க ஸார்...''

''என்னப்பா கிருஷ்ணன்... என் மேலே கோபமா? காத்தாலே நான் பேசினதை மனசிலே ஒண்ணும் வைச்சுக்காதே. அடுத்த பட டிஸ்கஷன்ல மும்முரமா இருந்தப்ப நீ உள்ளார வந்துட்டே... அதான் கொஞ்சம் காரமாப் பேசிட்டேன். அது யாரு உன்னோட குழந்தையா?'' — படபடவென்று பேசிக் கொண்டே போனார் சந்திர பூஷணம்.

கிருஷ்ணன் அவர்களை உள்ளே அழைத்துப் போனான்.

சந்திர பூஷணம் தொண்டையைக் கனைத்துக்கொண்டு திரும்பவும் பேச ஆரம்பித்தார். ''ஒண்ணுமில்லே கிருஷ்ணன்... நம்ம ஊரிலே ஒரு நல்ல தியேட்டர் கட்டணும்னு ரொம்ப நாளாவே எனக்கு ஆசை. போன வருஷம் ஊருக்குப் போனப்ப ஒரு சைட்டைப் பார்த்து பேசி முடிவு பண்ணித் தியேட்டரையும் கட்ட அஸ்திவாரம் போட்டேன். மளமளன்னு தியேட்டர் உருவாயிடுச்சு. நாளைக்குத் திறப்பு விழா வச்சிருக்கேன்... இப்போ திறப்பு விழா அன்னிக்கே தியேட்டர் நிர்மூலமாயிடும் போலிருக்கு.''

''என்ன ஸார் சொல்றீங்க?'' கிருஷ்ணன் பதற்றத்தோடு கேட்டான். சந்திரபூஷணம் புதிதாக வந்த இருவரைக் காட்டிச் சொன்னார்: ''கிருஷ்ணன்! இவங்க ரெண்டு பேரும் என்னோட ஊர்க்காரங்கதான். ரெண்டு பேருமே என்னோட பார்ட்னர்ஸ்தான். அவங்க ரெண்டு பேரும் உனக்கு நிலைமையைப் புரிய வைப்பாங்க.''

புதிதாக வந்த இருவரில் ஒருவர் படபடப்பாகச் சொன்னார்: ''தம்பி... எங்க ஊர் பெரிய டவுனும் இல்லே சின்னக் கிராமமும் இல்லே. நடுத்தரமான ஊரு. தியேட்டரைக் கட்ட ஆசைப்பட்டோம். கட்டி முடிச்சோம். நம்ம சந்திரபூஷணத்தோட 'பச்சை ரோஜா' படத்தையும் முதல் படமா போட முடிவு செஞ்சோம். தியேட்டர் திறப்பு விழாவுக்காகப் பச்சை ரோஜா ஹீரோ ப்ரேம்குமாரைக் கேட்டோம். அவரும் தியேட்டரைத் திறந்து வைக்கச் சம்மதம் கொடுத்துட்டாரு. குத்துவிளக்கு ஏற்ற



நடிகை ஜயதாராவையும் ஏற்பாடு பண்ணிட்டோம். ஊர் முழுக்கப் போஸ்டர் ஒட்டி விளம்பரமும் பண்ணிட்டோம்... ஆனா இப்ப ஒரு சிக்கல்.... ஹீரோ பிரேம்குமார் இப்ப விழாவுக்கு வரக் கூடிய நிலையில் இல்லே. மனுஷன் எக்கச்சக்கமாக் குடிச்சுட்டு பாத்ரூம்லே விழுந்து மயக்கமாக் கிடக்கிறார். ஆஸ்பெட்டல்லே அட்மிட் பண்ற அளவுக்கு இருக்கு....''

''அப்போ விழாவைக் கான்ஸல் பண்ணிட வேண்டியதுதானே...''

சந்திரபூஷணம் இப்போது குறுக்கிட்டார். ''அது முடியாது கிருஷ்ணன். ஹீரோ பிரேம்குமார் வர்றதா விளம்பரம் பண்ணிட்டோம். கூட்டம் எக்கச்சக்கமாக வரும். இந்த நேரத்திலே போயி விழாவைக் கான்ஸல் பண்ணினா தியேட்டரோட அஸ்திவாரத்தைக் கூடப் பேர்த்திடுவானுக. தியேட்டரை அவங்க கோபத்திலிருந்து காப்பாத்தத்தான் உன்னோட உதவியைத் தேடி வந்தோம்.''

''என்னோட உதவியா? நானென்ன செய்ய முடியும் ஸார்?''

''முடியும் கிருஷ்ணன்'' — டைரக்டர் வசீகரன் மெதுவான குரலில் பேசினார். ''உன்னோட முகவெட்டும், உடம்புக் கட்டும் ஏறக் குறையப் பிரேம் குமார் மாதிரிதான் இருக்கு. ஹேர் ஸ்டைல் மட்டும் கொஞ்சம் மாறியிருக்கு. விக் வைச்சு அதையும் சரிப்படுத்திடலாம். மீசையைக் கொஞ்சம் சின்னதா வைச்சுக்கலாம். பிரேம்குமார் மாதிரியே மேக்கப் செஞ்சு கூலிங் கிளாஸை மாட்டிக்கிட்டா ஏறக் குறைய பிரேம் குமார் மாதிரியே ஆயிடுவே... காரிலே போய் இறங்கி தியேட்டர் வாசல்லே கட்டியிருக்கிற ரிப்பனைக் கட்பண்ணிட்டு தியேட்டர்க்குள்ளாற விறுவிறுன்னு போயிடலாம்.''

கிருஷ்ணன் தயக்கத்தோடு ஏதோ சொல்ல முயன்றான்.

சந்திரபூஷணம் சொன்னார்: ''நீ ஒண்ணும் மறுத்துப் பேசாதே கிருஷ்ணன். நீ கேக்கற பணத்தை நான் தர்றேன்.''

கிருஷ்ணன் கோணலாய்ப் புன்னகை செய்தான். ''எவ்வளவு தருவீங்க?''

''ஆயிரம்.''

கிருஷ்ணன் சிரித்தான். ''ஆயிரமா? ஏன் ஸார்... படத்துலே டூப்பா உயிரைப் பணயம் வைச்சு நடிக்கிறேன். அதே மாதிரி தான் இதுவும். அந்தக் கிராமத்து ஜனங்களுக்கு நான் பிரேம் குமார் இல்லேங்கிற உண்மை தெரிஞ்சா என்னோட நிலைமை என்னாகும்னு நீங்க யோசிச்சுப் பார்த்தீங்களா ஸார்?''

''சரி சரி. எவ்வளவு எதிர்பார்க்கிறே?''— சந்திரபூஷணம் ஆவலாய்க் கேட்டார்.

''பத்தாயிரம்'' — கிருஷ்ணன் அழுத்தமாய் உச்சரித்தான்.

''இது அதிகம் கிருஷ்ணன்'' — சந்திரபூஷணம் சொன்னார்.

''என்னை மன்னிச்சிடுங்க ஸார். பத்தாயிரம்னா நான் வர்றேன்... இல்லேன்னா வேற யாரையாவது ஏற்பாடு பண்ணிக்கங்க''— கிருஷ்ணன் மோவாய்க்கட்டையைத் தேய்த்தபடி சொன்னான்.

''கொஞ்சம் விட்டுக் கொடுப்பா கிருஷ்ணன்...''

''எதுக்கு ஸார் விட்டுத்தரணும்? நான் கேட்டது நியாயமான தொகை.''

''சரி ஸார். கிருஷ்ணன் கேட்ட தொகை பத்தாயிரத்தைக் குடுத்துடுங்க சந்திரபூஷணம்'' — டைரக்டர் வசீகரன் கிருஷ்ணனுக்கு ஆதரவாய்ப் பேசினார்.


சந்திரபூஷணம் கொழுத்த நூறு ரூபாய்க் கட்டு ஒன்றைக் கிருஷ்ணனிடம் நீட்டினார். பணத்தைப் பெற்றுக் கொண்ட கிருஷ்ணன் பெரிதாகக் கும்பிடு போட்டான்.

நான்கு பேரும் கைகூப்பி எழுந்து காரை நோக்கிப் போனார்கள்.

கிருஷ்ணன் தன் கையிலிருந்த பணக் கற்றையைக் கண்களில் ஒற்றிக் கொண்டு தன் மனைவியை அழைத்தான்.

''லட்சுமி! பணத்தைப் பீரோவிலே வை. இப்ப நான் வந்துடறேன்.''

மனைவியிடம் பணத்தைக் கொடுத்து விட்டு வீட்டை விட்டு வெளியே வந்தான்.



காதல் சிறப்பிதழ்

சுருக்கமாக வாழ்க்கை அனுபவங்கள், நகைச் சுவைத் துணுக்குகள், சுவையான தகவல் குறிப்புகள், பொன்மொழிகள் முதலியன அனுப்பக் கடைசித் தேதி ஆகஸ்டு 31உ. உறை மீது 'காதல் சிறப்பிதழ்' என்று குறிப்பிடவும். கடிதப்போக்கு வரத்துக் கிடையாது. பிரசுரத்துக்கு ஏற்கப்படாதவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது.

படம்: ரிஷிகபூர் நீதுசிங்



பங்களாவின் வாசலில் நின்றிருந்த கூர்க்கா கிருஷ்ணனைக் கண்டதும் சிநேக பாவத்தோடு சிரித்தான்.

கிருஷ்ணன் உள்ளே நுழைந்தான். ''வாப்பா கிருஷ்ணன்!'' — வரவேற்பறையின் குஷன் தைத்த காஷ்மீர நாற்காலி யொன்றில் சாய்ந்தபடி பிரேம்குமார் நின்றிருந்தார். வயது ஐம்பதை எட்டிக் கொண்டிருந்த அந்த நிலையில் முகம் மட்டும் சற்றே முதிர்ச்சியைக் காட்ட, கைகளும் கால்களும் உடம்பும் தின்னென்று ஓர் இருபத்தைந்து வயது வாலிபனை நினைவூட்டின.

''வணக்கம் ஸார்.''

''உட்கார்: என்ன, நான் சொன்னபடி சந்திரபூஷணம் வந்திருந்தாரா? பேரத்தைப் பத்தாயிரத்துக்குப் பேசி முடிச்சிட்டியா?''

''முடிச்சுட்டேன் ஸார்.''

''வெரி குட்.. நாளைக்கு அப்ப திறப்பு விழாவுக்குப் போயிட்டு வந்திடு. கஞ்சப்பயல் சந்திரபூஷணம் உன்னோட காரிலே மண்ணடிக்கப் பார்த்தான். இப்போ நோகாமெ பத்தாயிரத்தைத் தர்றான். ஜமாய் கிருஷ்ணன்.''

கண்களில் நீர் கசிய கிருஷ்ணன் பிரேம்குமாரின் காலில் விழுந்தான். ''ஐயா... நீங்க செஞ்ச இந்த உதவியை ஆயுசு உள்ளவரைக்கும் நான் மறக்க மாட்டேன்.''

''சீ! எழுந்திருப்பா கிருஷ்ணன். உன்னோட உழைப்புக்கு ஏத்த ஊதியத்தை நான் சுததி வாங்கித் தந்தேன்... தட்ஸ் ஆல்...! போப்பா. உள்ளார போய் வயிறாரச் சாப்பிட்டுட்டுப் போ. நாளைக்கு ஸ்டுடியோவிலே உன்னைப் பார்க்கிறேன்.''

கிருஷ்ணன் பங்களாவின் உள் பக்கமாக நடக்க — அவன் முதுகுப்புறத்தையே பார்த்துக் கொண்டிருந்த பிரேம் குமார் திடீரெனக் குலுங்கினார். மனசுக்குள் அழுதார்.

''செண்பகம்! இருபத்தஞ்சு வருஷங்களுக்கு முன்னாடி நான் படவுலகுக்கு வந்த சமயம் எக்ஸ்ட்ராவா இருந்த உம்மேலே ஆசைப்பட்டு உன்னைத் தொட்டேன். உன்னைத் தொட்ட நேரம் நான் உசந்தேன். பணம் குவிஞ்சப்ப என்னோட தாய்மையும் அவிஞ்சு போச்சு. உன்னை உதறிட்டு எங்க ஜாதியிலேயே பணக்காரப் பொண்ணாப் பார்த்துக் கட்டிக்கிட்டேன்: நீ நினைச்சிருந்தா என்னோட வாழ்க்கையிலே குறுக்கிட்டு என்னோட புகழையும் நிம்மதியையும் குலைச்சிருக்க முடியும். ஆனா நீ அப்படிச் செய்யல்லை. ஒதுங்கி நின்னு எம்மேலே உன்னோட நிழல்கூட விழாதபடி வாழ்ந்து காட்டினே. செண்பகம்! நீ இடைஞ்சு மறைஞ்சப்பக்கூட நான் இங்கே இல்லே. காஷ்மீர்ல கம்பளி அணைப்பிலே தூங்கிக் கிட்டிருந்தேன். நீ போனாலும் நம்ம மகனை நல்லபடியாத்தான் வளர்த்திருக்கே... உன்னோட சாயல் அவனுக்கு இருக்காம். அதனாலே அவனையே எனக்கு டூப்பா நடிக்க வைக்கிறாங்களாம்! அவன் உயிரைப் பணயம் வைச்சு மலைக்கு மலை தாவறப்ப, என்னோட மனசெல்லாம் ஆடுதம்மா... கிருஷ்ணன் என்னோட மகன்னு இப்பச் சொன்னா சினிமா உலகத்திலே நானும் அவனும் மத்தவங்க பரிகசிக்கிற கேலிப் பொருள்களாமாறிடுவோம்....

''எனக்கு அடுத்தவருஷம் வயசு அம்பது ஆகப்போகுது செண்பகம்!

''இனியும் பத்து வருஷத்துக்கு நான் ஹீரோவாத்தான் நடிப்பேன்.

''ஏன்னா, எனக்கு டூப்பா நடிக்க என் மகன் இருக்கானே!

''மகனோட நிழல்லே நான் நிஜமா வாழ்ந்துட்டிருக்கேன்.''

வாழ்க்கையிலேயே முதன் முதலாய் அசலாய் அழுதார் பிரேம்குமார்.

பண்பாடாவது பரங்கிக்காயாவது?

வட்டமேஜை



● ''பதினாறு வயதினிலே'' துணைத் தலையங்கம் படித்தேன். நெஞ்சை உருக்கும் இச் சம்பவத்தை வானொலியில் கேட்டேன். செய்தித் தாள்களிலும் படித்தேன். ஆனால் கல்கியில் தாங்கள் எழுதியுள்ளதைப் படிக்கும் போது மட்டுமே பண்பாட்டின் உயர்வைக் காண்கிறேன்.

நீடாமங்கலம் இ. சேதுரத்தினம்

● நமது பரம்பரைப் பண்பாட்டின் பெருமையை உணர்ந்தேன்: அண்மையில் நாத்துக்குடி அருகில் நிகழ்ந்த சினிமாக் கொட்டகை தீவிபத்தில் இரண்டு மூன்று பெண்கள் தங்கள் ஆடையைப் பறிகொடுத்து விட்டுத் தப்பிக்க வெளியே ஓடி வந்தனராம். வெளியே சில ஆண் மக்கள் இருப்பதைப் பார்த்துவிட்டுத் தங்கள் மானத்தை இழக்க விரும்பாமல் மறுபடியும் அவர்கள் எரியும் கொட்டகைக்குள் பாய்ந்து உயிர் மாய்ந்தனராம். ஜெயந்தி போன்று மானம் பெரிதெனப் பேணும் மங்கையர் மாண்பினை எண்ணி மெய் சிலிர்க்கிறது.

சென்னை-75 வி. ச. வாசுதேவன்

● உங்களைப் போல் பாரதப் பண்பாட்டைப் பற்றி நான் பெருமிதம் அடையவில்லை. அற்ப காரணத்துக்காக ஓர் அரிய உயிரை இழக்கச் செய்த இந்தச் சமுதாயத்தின் கேவலமான கொடிய கோட்பாடுகளை நினைத்துப் பொருமினேன்.

ஒரு பதினாறு வயதுப் பையன் இந்தக் காரணத்துக்காகத் தன் உயிரை விட்டிருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? மானத்தைக் காக்க உயிரை விட்டான் என்று நினைப்பீர்களா? முட்டாள் என்று ஏசுவீர்கள், இல்லையா?

சென்னை-4 பத்மினி கோபாலன்

● ஜெயந்தியின் வீட்டில் அவளை என்ன சொல்லி வீருப்பார்கள்? 'அடி சண்டாளி! பாவாடையை உதறிப் போடுவதற்கென்ன?' என்று மார்பிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டிருப்பார்கள். நாம் தான் மானம் பண்பாடு என்று பறைசாற்றுகிறோம். நமது மகளா ஜெயந்தி?

நமது கல்வித் திட்டத்தில் 'செக்ஸ்' போதனை செவ்வனே அளிக்கப்பட்டிருந்தால், ஜெயந்தி அநியாயமாகச் செத்திருக்க மாட்டாள். மெய்யான மானம், கூச்சம் என்பது 'எது' என்று நன்கு உணர்ந்திருப்பாள்.

சென்னை-5 இதயன்

● வாசகர்களுக்கு 'அதிர்ஷ்டப் பரிசுத் திட்டம்' பகுதியில் வெளியிடப்பட்டுள்ள கவிதை பாரதியார் எழுதியது அல்ல; பாரதி தாசனுடையது.

''கண்ணின் கடைப் பார்வை
  காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரருக்கு
  மாமலையும் ஓர்கடுகாம்''
—பாரதிதாசன்

விழுப்புரம் துறவி

(தவறு நேர்ந்ததற்கு வருந்துகிறோம். அதிர்ஷ்டப் பரிசுத் திட்டத்தில் கலந்து கொள்ள விரும்பும் நேயர்கள் தவறினைத் திருத்திக் கொள்ள வேண்டுகிறோம். அப்படி ஒரு வேளை அவர்கள் திருத்திக் கொள்ளாமல் பாரதிதாசன் என எழுதாது பாரதி என்றே குறிப்பிட்டார்களாயினும் அதனால் அவர்கள் பரிசு பெறும் வாய்ப்புப் பாதிக்கப்படாது எனத் தெரிவித்துக் கொள்கிறோம். — ஆர்.)

● ஜெயகாந்தனின் ''பாட்டிமார்களும் பேத்திமார்களும்'' படித்து முடித்ததும் ஓர் அருமையான நாவலைப் படித்த திருப்தி ஏற்பட்டது. ''செக்ஸ்'' ஒன்றையே பிரதானமாக வைத்து நாவல்களும் சிறுகதைகளும் வெளிவருகின்ற இக்காலத்தில், துளி கூட ஆபாசமின்றி ஓர் அருமையான நாவலைப் படைத்தளித்த ஜெயகாந்தனுக்கு நன்றி.

பெரியமதியாக்கடலூர் என். ரத்தினவேல்

● நகைச் சுவைத் துணுக்குகள் சிலவற்றைப் படித்துவிட்டு, ''இடி இடி என்று சிரியுங்கள்'' என்று வாசகர்களைக் கேட்டுக் கொண்டு இருக்கிறீர்கள்! கூடவே இடி அமீன் படத்தையும் போட்டுத் தொலைத்திருக்கிறீர்கள். எப்படி ஐயா சிரிப்பு வரும்? இடிந்து போய் உட்கார்ந்து விட்டேன்.

மேலழிஞ்சிப்பட்டு த. யோகநாயகன்

● ''சுதந்திர தேவிக்கு வரமருள்வோம்'' என்ற தங்கள் கட்டுரை அமர்க்களமாய் இருந்தது. தாங்கள் கூறியபடி ராஜ் நாராயண் பிரதம மந்திரி ஆகாமல் இருக்க எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டுவதைத் தவிர வேறு வழியில்லை!

திருச்சி-5 வி. ராதாகிருஷ்ணன்

● 'ஆதிரை'யின் கவிதை அருமையாக உள்ளது. திரு நா. மகாலிங்கம் அவர்களுடைய கருத்துக்கள் மிகவும் பயனுள்ள செய்திகளின் செறிவு.

சென்னை-33 கப்ர பாலன்

வனிதா ஒரு வணங்கா முடி

லீலாவதி

அர்ஜண்ட் மேட்டர் ஒன்றை வேகமாய் டைப் செய்து கொண்டிருந்தேன். வேலை சீக்கிரமாக முடிந்து 'ஆபீசர்' ஒப்பத்துக்கு அனுப்ப வேண்டியிருந்ததால் என் கவனத்தை இந்தப் பக்கம் அந்தப் பக்கம் திருப்ப முடியவில்லை. சப்ஜெக்ட் அஸிஸ்டெண்ட் வேறு பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டிருந்ததால், ட்ராப்டை, கண்கள் பார்க்கக் கைகள் துரித கதியில் இயங்கிக் கொண்டிருந்தன.

சுந்தர் வேறு அன்று லீவ் போட்டிருந்ததால் வேறு யாருடனும் பேசாமல் வேலையிலேயே கண்ணாயிருந்தேன். சுந்தர் ,சம்பத் இந்த இருவரோடுதான் எனக்கு செக்ஷனில் நெருங்கிய சிநேகிதம். நானும் சுந்தரும் டைப்பிஸ்ட்கள். சுந்தர் மட்டும் ஜூனியர் அஸிஸ்டெண்டாய் இருக்கிறான்.

''மேடம்! நான் நாளைக்குத் திருப்பதிக்குப் போறேன். உங்களுக்கு லட்டு ஏதாச்சும் வாங்கியாரணுமா?.... உண்டியல்ல போடப் பணம் ஏதாச்சும் தர்றீங்களா?'' என்ற வனிதாவின் குரல் கேட்டதும் சடாரென்று தலையைத் தூக்கிப் பார்த்தேன். என்ன அவசரத்தில் விழிகளை உயர்த்தினேனோ — அதே அவசரத்தில் வனிதாவும் என்னைப் பார்த்தாள். அந்தச் சமயத்தில் ஒன்றும் பேச முடியவில்லை. கையில் அவசர வேலை. 'ஆமாம் அவள் ஏன் திடுதிப்பென்று நாளை திருப்பதிக்குப் போக வேண்டும்....?' டைப்ரைட்டரில் வேகமாய் ஓடிக் கொண்டிருந்த என் கைகளை விடவும் மனக் குதிரை வேகமாய்—படு வேகமாய் ஓடிக் கொண்டிருந்தது.

ஷர்மிளா மேடமும் தன் பங்குக்கு, ''என்ன வனிதா..... திடீர் திருப்பதி விஜயம்....?'' என்று கண்களைச் சிமிட்டியபடியே கேட்டுவிட்டு, ''ஏழுமலையான் கிட்டே நல்ல வரனாக் கிடைக்கணும்னு வேண்டிக்கோ...'' என்று சொல்லிக் கொண்டே ஒரு பத்து ரூபாய் நோட்டை அவளிடம் தந்து ''அஞ்சு ரூபாயை உண்டியல்லே போட்டுடு. மீதிக்கு லட்டு வாங்கிட்டு வா'' என்றார்.

அவளது திருப்பதிப் பயணம் 'கன்ஃபர்ம்' ஆகிவிட்டதை அப்போது என்னால் உணர முடிந்தது. செக்ஷனில் எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு உண்டியலில் பணம் போடவும், லட்டு வாங்கப் பணம் வாங்கிக் கொண்டும் என்னிடம் வந்தாள்.

மெல்ல என்னை நெருங்கி வந்து, ''ஈஸ்வர்! திடீர்னு ப்ளான் சேஞ்ச் ஆயிடுத்து... நான் நாளைக்குத் திருப்பதி போறேன்... ஆனாலும் அடுத்த மாதம் நாம்ப எல்லோரும் ஒன்றா திருப்பதிக்குப் போறோம்... உங்களுக்கு லட்டு!...'' என்று இழுத்தாள்.

பேசாமல் இரண்டு ரூபாயை எடுத்து நீட்டினேன். ''லட்டு மட்டும்தானா? உண்டியல்ல போட....?''

''நான் போறப்போப் போட்டுக்குவேன்'' என்ற என் பதிலில் ''நீ ஒண்ணும் எனக்காக உண்டியலில் பணம் போட வேண்டாம்!'' என்ற பதிலும் தொக்கி நின்றதைப் புரிந்து கொண்டு மெல்ல ஒரு கள்ளப் புன்னகையை வீசியபடியே விடைபெற்றாள்.





வனிதா மதுரையிலிருந்து சென்னைக்கு வேலைக்கு வந்தவள். வந்த புதிதில் ஒரு ஹாஸ்டலில் தங்கியிருந்தாள். அங்கு போடப் படும் உணவு வகைகள் அவளுக்குப் பிடிக்காத தால், ரொம்பவும் கஷ்டப்பட்டுக் கொண் டிருந்தாள். அந்த உணவு வகைகளைப் பற்றி எங்களிடம் விமரிசனம் செய்தே எங்களிடம் அதிகம் நட்பானாள். எதையும் மனத்தில் வைத்துக் கொள்ளத் தெரியாதவள். எதை யும் பட்பட்டென்று கேட்டு விடுவாள். அவ ளின் கள்ளமில்லாக் குணம் எங்கள் மூவரை யும் கவர்ந்தது. துணிச்சல்காரியான அவள் அக்கிரமத்தைப் பொறுத்துக் கொள்ள மாட் டாள். ஒரு நாள் ஹாஸ்டலில் அப்படித் தான்.... அவள் ஹாஸ்டல் வார்டனுக்கும் அவளுக்கும் உணவு விஷயமாய்ப் பேச்சு முற்றி 'சரிதான் உன் ஹாஸ்டலுமாச்சு நீயுமாச்சு'' என்று சொல்லிவிட்டு, திருவல்லிக்கேணி ஒண்டுக் குடித்தனம் ஒன்றில் தனது தனிக் குடித்தனத்தை ஆரம்பித்தாள்.

சம்பத்தை அவள் அண்ணா என்று கூப் பிடுவாள். எது ஒன்றையும் எங்களைக் கேட் டுத்தான் செய்வாள். ஏதாவது அவசரம் ஆத்திரம் என்றால் என் வீட்டுக்கே வந்து விடுவாள். என் மனைவிக்கு ரொம்பவும் உயிர்த் தோழி. என்னை அண்ணா என்று கூப்பிடா விட்டாலும் தன் உடன் பிறந்த அண்ணனை விடவும் அதிகமாக மதித்தாள். இப்படி எங்களுள் ஒருத்தியாக — என் குடும்பத்தில் ஒருத்தியாய் இருந்தவள் திடீரென்று வந்து திருப்பதிக்குப் போகிறேன் என்றால் திடுக்கிடாமல் என்ன செய்வது...?

அதோடு மட்டுமல்ல....

போன வாரம்தான் அவள் திருப்பதிக் குப் போக வேண்டும் என்றபோது ''திடீ ரென்று சொன்னா எப்படிம்மா? எல்லார் சௌகரியமும் காக இருக்க வேண்டாமா? இப்போ தானே சொல்லி யிருக்கே? அடுத்த மாசம் செகண்ட் சாட்டர்டே, சண்டே வருகிற தல்லவா அப்போ கூட ஒரு நாள் லீவு போட்டுட்டு — என் ஒய்ஃப்பையும் சேர்த்து அஞ்சு பேரா ஜம்முனு போயிட்டு வரலாம்'' என்று சொன்னேன்.

சுந்தரும் சம்பத்தும் என் திட்டத்துக்கு ஒத்து வரவே, வனிதாவும் சரியென்று தலை யசைத்தாள். அப்படித் தலையசைத்த மறு வாரமே திடுதிப்பென்று என்கிட்டேயே 'நான் நாளைக்குத் திருப்பதிக்குப் போகிறேன்' என்றால் என் மனம் எப்படிக் குட்டிக்கரணம் அடித்திருக்கும்?

இந்தத் தருணத்தில் சுந்தர் இல்லையே என்றுதான் நான் வருத்தப்பட்டேன்.

அன்று மாலை என் மனைவி லீலாவிடம் விஷயத்தைச் சொல்லிக் கொண்டிருந்தேன். அப்போது சம்பத்தின் தம்பி ராஜா வந்தான். ''என்ன சவ்வர் ஸார்... விவாதம் பலமா இருக்கே.... நானும் கலந்துக்கலாமா?'' என்று கேட்டபடியே உள்ளே வந்தான்.

ராஜாவுக்கு விஷயத்தை விளக்கினேன். ராஜாவின் முகம் ஒரு மாதிரியாய்ப் போயிற்று.

''சுந்தர் கூட ஏதோ திருப்பதிக்குப் போறதா அண்ணன் சொன்னார்...'' என்ற ராஜா, ''இதுகூட எனக்கு எப்படித் தெரி யும்னு, பெரிய சூட் கேஸை எடுத்துத் துடைச்சுக்கிட்டு வெளியே கிளம்பினப்போ— எதுக்குன்னு கேட்டேன். அப்போ, சுந்தர் திருப்பதிக்குப் போறதாலே அவர் கிட்டக் குடுக்க இதை எடுத்துக்கிட்டுப் போறதாச் சொன்னார்.''

என் இதயம் டபுள் குட்டிக்கரணம் போட் டது. உண்மையில் எனக்கு மயக்கமே வரும் போல் இருந்தது. லீலாவின் முகம் போன போக்கைப் பார்த்ததுமே எனக்கு என்ன



யானையின் துதிக்கையில் 40,000 கசற்றுத்தசைகள் உள் ளன. இயற்கையிலேயே மிக வலிவான உறுப்பு யானை யின் துதிக்கை யானாலும், யானை இதை மிக எளிதில் சுழற்றும்.

★

ஆயிரம் அடி உயரத்தில் பறக் கும் ஒரு கழுகு தன் கூரிய தொலை நோக்குப் பார்வையால் தரையிலுள்ள புற்களிடையே பதுங்கியுள்ள முயலைக்கண்டு கொள்ளும். —அ. இ.



செய்வது — என்ன பேசுவது என்றே புரிய வில்லை.

சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு சம்பத் வீட்டுக்குக் கிளம்பினேன். சுந்தர் வீட்டுக்கே போயிருப்பேன்... ஆனால் அவன் வீடு ஆழ்வார் திருநகரில் இருந்ததால், சம்பத்தைச் சந்தித்தால் உண்மை விளங்கிவிடும் என்று பக்கத்தில் இருந்த அவன் வீட்டுக்கே கிளம்பினேன்.

எனக்கு வனிதாவைப் பற்றி நன்கு தெரியும் அவளுக்கு சுந்தர் மேல் ஒரு கண் உண்டு என்று. சுந்தருக்கு ஒரு குணம். அது, தன்னைச் சுற்றிப் பெண்கள் பேசிக்கொண்டே இருக்க வேண்டும்... அதைப் பார்த்து மற்றவர்கள் பொறாமைப்பட வேண்டும் என்று. நான் இப்படி யெல்லாம் பொறாமைப்படாததால்தான் சுந்தர் என்கூட மனம் விட்டுப் பழகினான். சுந்தரின் இதய மெல்லாம் மோகனாவிடம்தான் சரணாகதியடைந்துள்ளது என்று எண்ணினேன். மோகனாவும் அவன் மேல் உயிரையே வைத்திருந்தாள். இப்போது இந்தத் திருப்பதி விவகாரம் என்னைப் போட்டுக் குழப்போ குழப்பு என்று குழப்பி எடுத்துக் கொண்டிருந்தது.

சம்பத் வீட்டில் இருந்தான். என்னைக் கண்டதும் என்ன நினைத்துக் கொண்டானோ தெரியவில்லை. வெளியே கிளம்பத் தயாராய்ச் சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு என்னையும் வெளியே தள்ளிக் கொண்டு வந்தான்.

''டேய் சம்பத்! வனிதா கூட சுந்தரும் போயிருக்கான். அவுங்க போன விஷயம் உனக்கும் தெரியும். லே எஸ் ஆர் நோ...?'' என்று நறுக்குத் தெறித்தாற் போல் கேட்டதும், உண்மையில் அவன் ஆடித்தான் போய்விட்டான். அப்படி இப்படி என்று அவன் மழுப்பினாலும், அவனும் என்னிடம் துணிந்து முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முடியவில்லை.

''ஏண்டா ராஸ்கல்... உனக்கு மண்டையில மூளை -இல்லே... அவுங்க ரெண்டு பேரையும் ஒண்ணாச் சேர்த்துக் கண்காணாத பிரதேசத்துக்கு அனுப்பி இருக்கையே... ஏதாச்சும் 'ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆச்சின்னு என்ன செய்யறது?'' என் ஆத்திரத்தை மெல்லக் கொட்டலானேன்.

''சுவ்வர்... ஒனக்குச் 'சுந்தரைப் பத்தித் தெரியாதா? சாமி கும்பிடப் 'போற இடத்திலே தப்புத் தண்டா ஏதாச்சும் நடக்கும்னு நீ நெனைக்கிறையா? அதோட அவன் மோகனா மேலேதான் உயிரா இருக்கான்... நீ நெனைக்கிற மாதிரி யெல்லாம் ஒண்ணும் நடக்காது...''

''ஒண்ணும் நடக்காம இருந்தா ரொம்ப நல்லதுதான். அதைத்தான் நானும் கடவுள் கிட்டே வேண்டிக்கிறேன்.''

வெள்ளிக் கிழமை மாலை இங்கிருந்து கிளம்பியவர்கள் ஞாயிற்றுக் கிழமை இரவு தான் வீடு திரும்பினார்களாம். வனிதா ஆபீஸ் வந்திருந்தாள். சுந்தரும் வந்திருந்தான். நான் ஒன்றும் பேசவில்லை. வனிதா மிக சிரமப்பட்டுப் புன்னகைத்தாள்.



டைப்பிஸ்ட் :- டைப்ரைட்டரில் சில எழுத்துக்கள் தேய்ஞ்சு போச்சு சார் வேறே மாத்தணும்!

மானேஜர் :- எந்தெந்த எழுத்துக்கள் தேஞ்சு போச்சு

டைப்பிஸ்ட் :- I... L... O... V... E... Y...O...U...

ஆர். கோபாலகிருஷ்ணன்

அன்று மாலை....

என் வீட்டுக்கு வந்த வனிதா, ''சுவ்வர், ஸார்... என் மேலே கோபமா இருக்கீங்க போல இருக்கு... பக்கத்து வீட்டில திடீர்னு கிளம்பினாங்க. நானும் முன்னாடியே போகணும்னு சொல்லிக் கிட்டிருந்தேனா — இப்படிச் சந்தர்ப்பம் கிடைச்சதும் அவங்க கூடக் கிளம்பிட்டேன்... அதுக்காக ஒரேயடியாக் கோவிச்சுக்கிட்டா எப்படி...?''

''சரிம்மா... இதில எனக்கென்ன கோபம்? நீ போகணும்னு நெனைச்சே போயிட்டு வந்திட்டே. இதிலே கோவிச்சுக்க என்ன இருக்கு...'' என்று சொல்லிவிட்டு மேலே தொடராமல் நான் பேச்சை வெட்டிக் கொண்டேன்.

இவளாவது தானே வநது போய் சொல்லியாவது பேச்சுக் கொடுத்தாள். சுந்தர் கம்மென்று எதிலும் கலந்து கொள்ளாமல் இருந்தான். விஷயம் எனக்குத் தெரிந்து விட்டதே என்று சுந்தர் உள்ளேயே கனன்று கொண்டிருந்தான் போலும்.

சம்பத்திடம் நான் தனியே பேசிக்கொண்டிருந்தேன்.

''ஏண்டா சம்பத்! சுந்தர் கூடப் போனதை ஏன் மறைக்கணும்? நான் என்ன மூணும் மனுஷனா? அப்போ, அவ, சுந்தர்கூடப் போனதைத் தப்புன்னு ஃபீல் பண்றா அப்படித்தானே? ஏதோ ஆக்ஸிடெண்டலா சுந்தர் கூடத் திருப்பதிக்குப் போக வேண்டியதாப் போச்சுன்னு சொல்லி — வீட்டுக்கு வந்து பிரசாதம் குடுத்துட்டுப் போயிருந்தா ப்ராப்ளம் முடிஞ்சு போயிருக்குமே...''

''அவ உங்கிட்டப் போய் சொல்லியிருக்க வேண்டியதில்லே...'' என்று சம்பத் மெல்ல முணங்கினான்.

எனக்கு விஷயம் தெரிந்து போயிற்று என்று இரண்டு பேருமே தெரிந்து கொண்டார்கள். நானும் அவர்களிடம் நேரடியாகக் கேட்காமல் சுற்றி வளைத்துச் சொல்லம்புகளை எய்து கொண்டே இருந்தேன்.

வனிதா பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். அன்று மாலை தனியாய் என்னிடம்

வந்தாள். ''நாங்க ரெண்டு பேரும் சொல்லாமக் கொள்ளாமப் போனது தப்புதான்... அதை நீங்க நேரடியாவே கேட்டுக் கண்டிச்சு இருக்கலாம். அதை யெல்லாம் விட்டுட்டு இப்படிக் குத்திக் காட்டிக்கிட்டே இருக்கீங்க... நீங்ககூட இப்படி இவ்வளவு கீழ்த்தரமா 'பிஹேவ்' பண்ணுவீங்கன்னு நான் கனவில் கூட நெனைக்கலே'' என்றாள்.

''வனிதாம்மா... நல்லாச் சிந்திச்சுப் பேசணும். பொறுப்பில்லாமப் பேசக் கூடாது. நீ ரெண்டு நைட்., ரெண்டு பகல் கண்காணாத பிரதேசத்தில ஓர் அந்நிய வாலிபனோட தனியா இருந்திருக்கே... அந்த டைம்லே நீ பரிசுத்தமா இருந்தைதன்னு — என்னை விடச் சந்தோஷப்படறவன் வேறே யாருமே இருக்க முடியாது!.... ஆனா இதெல்லாம் உணர்ச்சி பூர்வமான விஷயங்கள்... ஓர் ஆணோ, ஒரு பெண்ணோ வழிதவறிப்போக ஒரு விநாடி நேரமே போதும். நீங்க தவறிப்போக பாஸிபிலிட்டீஸ் அதிகம் இருக்கு... அப்படி இருந்தும் நீ பரிசுத்தமா எம் முன்னாடி நிக்கறேன்னு நான் ரொம்பவும் சந்தோஷப்படுறேன்... இதே ஆபீஸ்ல வேற ஒரு பொண்ணு யாரு கூடவோ — எங்கேயோ போயிருக்கும் பட்சத்தில் — நண்பர்கள் என்ற முறையில் அவங்க போனதா என்னோட மனப்பான்மை எண்ணியிருக்கும்...

''ஆனா, நீ திருடியாட்டம் — சுந்தரத்தை வலுக்கட்டாயமா இழுத்துக்கிட்டுச் சொல்லாமக் கொள்ளாமத் திருப்பதிக்குப் போயிட்டு வந்திருக்கே — அடுத்த வீட்டுக்காரங்க கூடப் போனதாச் சொன்னே பார்த்தியா — அதுதான் உன் மனசிலே இருக்கிற கள்ளத்தனத்தை வெளிப்படுத்துது...'' என்று உள்ளத்தில் குமைந்து கொண்டிருந்த எண்ணங்களை யெல்லாம் வெளியே கொட்டி விட்டேன்.

இப்போது வனிதாவின் முகத்தில் சிலைத்தின் சாயல் பரவியது.

இதை அவள் ப்ரஸ்டீஜ் ஃபைட்டாக எடுத்துக்கொண்டாள். தான் போனது தவறு என்று ஒத்துக் கொண்டால் — தான் தவறிப் போய்விட்டோம் என்று ஒப்புக் கொள்வதாய் அவள் நினைத்தாள் போலும்.

அதே சமயம் அவள் சுந்தருடன் தனியாய்த் திருப்பதி சென்று வந்தது தவறு என்ற நிலையில் இருந்து நானும் இறங்கத் தயாராய் இல்லை.

''என்னோட பாயிண்ட் ஆஃப் வியூவிலே இருந்து பார்த்தா நான் எந்தத் தவறுமே செய்யலே... உங்க வ்யூ வேறே மாதிரி இருந்தா என்னாலே அதை மாத்த முடியும்னு தோணலே... அவ்வளவுதான் நான் சொல்ல முடியும்!'' — தனக்கு உண்டான கடுங்கோபத்தையும் அடக்கிக் கொண்டு மெதுவாய் இதைச் சொன்னாள்.

விஷயம் ஒரு முடிவுக்கு வருவதை நானும் உணர்ந்தேன். ''உன்னோட பிடிவாத குணம் எனக்குத் தெரியும்மா... பெண்களோட பிடிவாதம் சில சமயங்களில் நன்மையைக் கொடுக்கும்; சில சமயங்களில் பெரும் பாதகத்தை உண்டாக்கிடும்... நீ முரட்டுப் பிடிவாதத்தில் இந்தக் காரியத்தைச் செஞ்சிட்டே...உனக்கு அது ரைட்டாக் கூடத் தெரியலாம்... நான் இப்ப முடிவா என்ன சொல்றேன்னா... நீ செஞ்ச இந்த அசட்டுத் தனத்துக்காக உன் கூடப் பிறவாச் சகோதரனோட தூய சகோதர பாசத்தை இழக்கப் போறே... என்னோட ஆதரவை இழக்கப் போறே... ஒரு நல்ல நண்பனை இழக்கப் போறே...!'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே என் கண்களில் கண்ணீர் ததும்பியது. மேலும் தொடர்ந்தேன். ''நீ என்னோட நட்பை இழந்ததுக்குக் காரணம் உன்னோட முரட்டுப் பிடிவாதம்தான்னு உன் மனசிலே படணும். இந்தச் சகோதரனை இழந்ததுக்கு — இவ்வளவு பெரிய பின்னணி எப்பவும் உன் மனசிலே படமா ஓடிக்கிட்டிருக்கணும். இந்த இழப்பு பிற்காலத்தில் உன்னைச் சில தவறுகளிலேயிருந்து மீட்டுத் தரும்னு— என்னோட நட்பை இதோட முடிச்சுக்கறேம்மா...'' என்றபோது அவளும் அழுதே விட்டாள். அவள் அழுகையில் நானும் கரைந்து விட்டேன்.

மேலட்டை: ஒரு மோசடி!



இந்த இதழ் மேலட்டையில் காட்சி தரும் குமாரி கரிதாவுக்கு ரசாயனம் என்றாலே அலர்ஜி! ''புகைப்படக்காரர் உத்ரா கலர்ஃபுல் ஸப்ஜெக்ட் வேண்டும் என்றார். அதனால் வண்ண வண்ண நீர்களைத் தயாரித்தேன். அவ்வளவுதான் எனக்கு பிப்பெட்டுக்கும் பியூரெட்டுக்கும் வித்தியாசம் தெரியாது. ஆளை விடுங்கள்!'' என்கிறார் புன்னகையுடன். ''ஐ பிளீட் இல்டி'' என்று கூறிச்சிரிக்கிறார் உத்ரா!



பிள்ளையாரை ஸ்மரிப்பதில் ஒரு பெரிய விசேஷம், அவரை நினைக்கிறபோதே லோகத்தின் மாதா — பிதாக்களான பார்வதீ—பரமேச்வரர்களின் நினைவும் வந்துவிடுகிறது. எதற்கு மனுப் போடுவதாயிருந்தாலும் சரி, ''அப்ளிகேஷன் ஃபாரத்''தில் ஒருத்தன் பேரைப் போட்டவுடன், Father's Name என்று அப்பா பேரைத்தானே போட வேண்டியிருக்கிறது? இவருக்கோ பேரே ''பிள்ளையார்'' என்றிருப்பதால், உடனே, ''யார் பிள்ளை?'' என்ற ஞாபகம் வந்துவிடுகிறது. இவருடைய ஃபாதர் எப்படி இருக்கிறாரென்றால், அவர் உடம்பிலேயே பாதியாக 'மதரும்' இருக்கிறாள்! அதனால் இவரை ஸ்மரித்த மாத்திரத்தில் பார்வதீ பரமேச்வரர்களின் ஸ்மரணமும் ஏற்பட்டு விடுகிறது. ஈச்வரன் ஸத் ஸ்வரூபம்; அம்பாள் சித் (ஞான) ஸ்வரூபம்; மஹா கணபதி ஆனந்த ஸ்வரூபம். ஸச்சிதானந்தமான பரப் பிரம்மமே இப்படி மூன்று ரூபங்களாக இருக்கிறது.

ஆனந்த ரூபி பிள்ளையார். சிவலோகத்துக்குக் கைலாசம் என்றும், விஷ்ணு லோகத்துக்கு வைகுண்டம் என்றும் பேர் இருப்பது போல, பிள்ளையாருடைய லோகத்துக்கு என்ன பேர் என்றால், அதன் பேரே ''ஆனந்த புவனம்'' என்பதுதான்.

அவர் ஆனந்தமாயிருப்பதால் அவரை நினைக்கிற நம்மையும் ஆனந்தமாக்குகிறார். ஞானத்தோடு சேர்ந்த ஆனந்தத்துக்கு அடையாளமே ஆனை முகம். வேறெந்த மிருகத்தையும்விட ஆனையைத்தான் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அதுவும் குழந்தைகளுக்கு ஆனை என்றால், அசாத்திய சந்தோஷம். இங்கே மடத்து யானையைப் பார்க்கத்தான் குழந்தைகள் கூடிவிடுகின்றன; ''ஸ்வாமி கள்'' அதுகள் பார்க்கப் பண்ணுவதற்குத் தாயார் தகப்பனார் ரொம்பவும் பிரயாசைப் படவேண்டியதாகிறது! குழந்தையான யானை ஸ்வாமியைச் சுற்றியிருந்து ஸந்தோஷப்பட்டுக் கொண்டு நாமும் இப்படிக் குழந்தைகளாகிவிட வேண்டும்.


அவரைச் சுற்றி வலம் வர வேண்டும். விநாயக க்ஷேத்திரங்களில் ரொம்பவும் சிரேஷ்டமானது கும்பகோணத்துக்குப் பக்கத்தில் உள்ள திருவலஞ்சுழி. அங்கே சலவைக் கல்லில் வெள்ளை வெளேரென்று ச்வேத விநாயகராக இருக்கிறார். அவருடைய தும்பிக்கை வலப்பக்கமாகச் சுழித்துக்கொண்டிருப்பதால்தான் க்ஷேத்திரத்துக்கே திருவலஞ்சுழி என்று பேர் இருக்கிறது. அங்கே காவேரியும் வலப்பக்கமாக வளைந்து ஓடுவது இன்னொரு விசேஷம். காவேரிக்கும் விநாயகருக்கும் ரொம்ப சம்பந்தம் உண்டு. குடகு நாட்டில் ஸஹ்ய பர்வதத்தில் அகஸ்தியர் கமண்டலத்துக்குள் வைத்திருந்த காவேரியை, காக்காய் ரூபத்தில் வந்து கவிழ்த்து லோகோபகாரமாகப் புண்ணிய நதியாக ஓடவைத்தவரே விக்நேச்வரர்தான். 'ப்ரணவ ஸ்வரூப வக்ர துண்டம்' என்றபடி எங்கே அவர் ஓங்கார உருவமாகத் தும்பிக்கையை வலப்பக்கம் வளைத்துக்கொண்டு உட்கார்ந்தாரோ அங்கேயே காவேரியும் வலமாகச் சுழித்துக் கொண்டு ஓட ஆரம்பித்து விட்டாள். அவரை நாமும் வலம் வந்து, நெற்றிப் பொட்டில் ஐந்து முறை கொட்டிக் கொண்டு, முட்டிக்கால் தோப்புக்கரணம் போடவேண்டும்.

''தோர்பி: கர்ணம்'' என்பதே தோப்புக் கரணம். 'தோர்பி:' என்றால் 'கைகளால்' 'கர்ணம்' என்றால் 'காது'. கைகளால் காதைப் பிடித்துக்கொண்டு போடும் 'தோர்பி: கர்ணம்' தான் தோப்புக்கரணமாகி விட்டது. இதிலே ஒரு வேடிக்கை: ஸம்ஸ்கிருதத்தில் ஒருமை (Singular) பன்மை (Plural) மட்டுமில்லாமல் இருமை (த்விவசனம் — dual) என்று ஒன்று உண்டு. நமக்கெல்லாம் இரண்டு கைகள்தானே இருக்கின்றன? அதனால் த்விவசனப்படி 'தோர்ப்யாம் கர்ணம்' என்றுதான் இருக்க வேண்டும். 'தோர்பி:' என்றால் இரண்டுக்கு மேற்பட்ட

மனைவி : டிரைவர் எல்லப்பன் நம் காரை மரத்தில் மோதிட்டான்!

கணவன் : ''அவன் எல்லப்பனா? Lலப்பனா?''

—க. ராஜாஜி



Pluralல் பல கைகளைக் குறிக்கும். ஏன் இப்படி இருக்கிறது என்றால், ஆதியில் முதல் தோப்புக்கரணம் போட்டவர் நம் மாதிரி இரட்டைக் கை ஆசாமி இல்லை; சதுர்புஜ ரான (நான்கு கரம் கொண்ட) மஹாவிஷ்ணு தான் அவர்! ஒரு சமயம் அவர் தங்கை அகத்துக்கு வந்து மருமானோடு கொஞ்சி விளையாடினார். விகட விநாயகரான மரு மான் அவருடைய சக்கரத்தை எடுத்து வாயில் அடக்கிக்கொண்டு, நயமாகவும் பயமாகவும் எத்தனை சொன்னாலும் அதை வெளியிட முடியாது என்று விஷமம் பண்ணினார். அப் போதுதான் சாக்ஷாத் நாராயணமூர்த்தி தம் முடைய நாலு கைகளாலும் காதைப் பிடித்துக்கொண்டு உட்காருவதும் எழுந்திருப்பது மாக ஆட்டம் போட்டார். அதைப் பார்த்துக் குழந்தை ஸ்வாமி சந்தோஷம் தாங்காமல் கடகடவென்று சிரிக்க, அவர் வாயிலிருந்த சக்கரம் வெளியே வந்து விழுந்துவிட்டது. அதிலிருந்துதான் விக்நேச்வரப் பிரீதிக் காகத் தோப்புக்கரணம் ஏற்பட்டு, அதிலே விஷ்ணு சம்பந்தம் மறக்காமலிருக்கும்படியாக இரண்டுக்கு மேற்பட்ட கைகளைக் குறிக்கும் 'தோர்பி:' என்ற வார்த்தை அமைந்தது.

ஆதிக்கையைச் சுழித்துக் கொண்டிருக் கிறவரைத்தான் நாமும் பிள்ளையார் ''சுழி'' என்றே போட்டு எதை எழுதுவதானாலும் அவரைத் துணைக்குக் கூப்பிட்டுக்கொள் கிறோம். எடுத்த காரியத்தில் நாம் ''சுழிக் காமல்'' இருப்பதற்குப் பிள்ளையார் சுழியே ரக்ஷையாக இருக்கிறது. நம்முடைய தலைச் சுழி தீர்வதற்காக ஸர்வலோக ஜனன-ஜனனி களின் தலைப் பிள்ளையான அவரை ஆனந்த மாக ஸ்மரித்து வணங்குவோம்.

கல்லூரி மாணவன்: எங்க அண்ணு எனக்கு எப்போது மணி ஆர்டர் அனுப் புவான் தெரியுமா?
அவன்: எப்போ?....?''
க. மாணவன்: மன்னி ஆர்டர் போட வுடன்!

●

அவன்: நம்ம பாபு பட்டணம் போன பிறகு பெயரை மாற்றி கெஜட் நோட் டிபிகேஷன் கொடுத்திட்டானும்!
இவன்: புதுப் பெயரா என்ன வச்சக்கிட் டான்?
அவன்: 'city' பாபு! உ. ராஜாஜ்

●



படம்: ராக்கி என்ற குத்துச்சண்டை வீரன் பற்றிய ஆங்கிலத் திரைப்படத்தில் ஒரு காட்சி. அரங்கில் குத்துச் சண்டை போட்டாலும் காத லில் கூச்ச ஸ்வபாவமுடையவன் ராக்கி. பல போராட்டங்களுக்குப் பிறகு உலகப் புகழ் பெற்ற வீரனுடன் அவன் மோதி வெற்றி பெறுவது பற்றிய கதை. —த. மு. ரா.

'நாக் அவுட்' சிரிப்பு!

''இந்த வாரம் வெளிவந்த உங்க சிறுகதை ரொம்ப ஜூலங்கா இருந்தது சார்.''

''இருக்காதா பின்னே? மொனைப் போன்டில் அனுப்பினதாச்சே!''

—செல்வ பாண்டியன்

●

''ஏன் சார், வீட்டுல ஏதோ தலைக்கு மேலே வேலை இருக்குன்னு சொன்னீங் களே, அதென்ன வேலை?''

''ஒட்டடை அடிக்கிற வேலைதான்!''

—வ. தேனப்பன்

●

கோபு: நேற்று நாடகத்திலே கலாட்டா வாமே?
பாபு: ஆமாம். கண்ணகியா நடிக்கிறவா விரிச்ச கூந்தலோடு கையில் சிலம்பை எடுத்துகிட்டு மேடைக்கு வந்துட்டா.
கோபு: அப்படித்தானே வரணும்?
பாபு: அப்படித்தான் வரணும். ஆனு அவ சேலை கட்டாமே, பெல் பாட்டம்ஒ போட்டுக்கிட்டு வந்து நின்னு!

—ஆர். கோபாலகிருஷ்ணன்

●

''சே... அந்தப் படத்திலே பச்சை பச்சையான வசனமய்யா...''

''அட...! பிளாக் அண்ட் ஒயிட் படத்திலே இப்படிப் பச்சை பச்சையான வசனம் இருந்தா கலர்ப் படத்திலே எப்படி இருக்கும்?'' —அப்துல் காதர்



அத்தியாயம் 4

மரக்கால் மனிதன்

அப்பொழுது சிந்து துர்க்கக் கடல் பகுதியிலிருந்து காலைப் பனி அநேகமாக விலகி விட்டதால் ஒளி விட்ட சூர்யரச்மிகள் இந்திரஜித் அனந்தின் முகத்துக்குப் புது சோபையை அளித்திருந்ததன் விளைவாக அவன் முகத்தில் விரிந்த பயங்கரப் புன்முறுவலை அதிக பயங்கரமாக அடித்திருந்ததை அவனுடன் எழுந்திருந்த கடல் ராணி கவனிக்கவே செய்தாள். அத்தனை அபாயத்திலும் சிறிதும் சலனமடையாத அவன் உறக்கக் கண்கள் பாதி திறந்த மாதிரி இருந்தாலும், அந்தத் திறந்த பாதியும் கதிரவன் கிரணங்களில் மிகப் பயங்கரமாகப் பளிச்சிட்டதையும் ராணியின் அழகிய விழிகள் கண்டன. அவன் எதற்காக எழுந்து நின்றான், எதற்காக எந்தச் செயலிலும் ஈடுபடாமல் நடுக் கடலில் நடுப் படகில் குத்துக்கல் மாதிரி நிற்கிறான் என்பதை ராணியால் அறிய முடியவில்லையாகையால், தான் ஏதாவது செயல்பட முடியுமா என்பதை அறியச் சுற்று முற்றும் நோக்கினாள். அவள் கண்கள் சுழன்றதை எதிரிப் படகிலிருந்தவனும் கவனித்திருக்க வேண்டும். ''ராணி! உன்னையும் நாங்கள் அறிவோம். உனக்கு எந்த விதத் தீங்கும் செய்ய நாங்கள் விரும்பவில்லை. ஆனால் இந்த இந்திரஜித் அனந்தைக் காப்பாற்ற நீ எந்தவித முயற்சி எடுத்தாலும் பெண்ணான உன்னைச் சுட்டுப் பொசுக்கவும் நாங்கள் தயங்கமாட்டோம்'' என்று அவன் அறிவித்தான் கையிலிருந்த துப்பாக்கியின் குறியை அனந்தின் முகத்திலிருந்து இம்மிகூட அகற்றாமலே.

அதுவரை சாந்தமாயிருந்த ராணியின் அழகிய விழிகளில் சினம் துளிர்த்தது. ''அத்தனை துணிவு உண்டா உனக்கு?'' என்று சீற்றம் நிரம்பிய குரலில் வினவினாள் ராணி.

இந்திரஜித் அனந்த் ராணியை நோக்கி மெல்ல முகத்தைத் திருப்பித் தனது கண்களை அகல விரித்து அவளைப் பார்த்தான். ''ராணி! இந்தத் தலைமுறையின் பெரிய கடல் வீரனைப் பார்க்கிறாய் நீ முதன் முதலாக. ஆகையால் தான் அவன் துணிவைப் பற்றிச் சந்தேகப்படுகிறாய். இவன் எதையும் சாதிக்க வல்லவன், எதையும் செய்யக் கூடியவன். ஆனால் பெண்ணான உன்னைக் கொன்றுவிடுவதாகக் கூறுவதை மட்டும் நம்பாதே. எட்வர்ட் இங்கலண்ட் பெண்களையும் குழந்தைகளையும் நிராயுதபாணிகளையும் தொட்டது கூடக் கிடையாது. இவன் காப்டன் டெய்லரைப் போன்றவன் அல்ல'' என்றும் சொன்னான். அவன் சொற்களில் எதிரியைப் பற்றிய மரியாதை நிரம்பிக் கிடந்தது.

ராணி ஒரு விநாடி தன் கமல விழிகளை இந்திரஜித் அனந்தின் கண்களோடு கலக்க விட்டாள். பிறகு பார்வையை எதிரி வீரன் மீது திருப்பினாள்.

''யூ ஆர், இங்கலண்ட்!'' என்று ஆங்கிலத்தில் வினவினாள் மிதமிஞ்சிய வியப்புக் குரலில் நிரம்பி வழிய.

மடகாஸ்கரில் தளம் அமைத்துக்கொண்டு அரபிக் கடலை ஆட்டி வந்த கடற் கொள்ளைக்காரனான காப்டன் இங்கலண்ட் துப்பாக்கியைத் தாழ்த்தாமல், தலையை மட்டும் ஒரு பக்கம் ஒருக்களித்து ''அட் யுவர் சர்வீஸ் மிஸ்'' என்றான் ஏதோ பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தால் ''ஸர்'' பட்டம் பெற்ற கண்ணியமான கனவானைப் போல.

ராணி மேலும் பேச்சை வளர்த்த முற்பட்டு. ''காப்டன்! ஐ ஹாவ் ஹேர்ட் அப் யூ அண்ட் யுவர் ஃபேமஸ் எக்ஸ்ப்ளாயிட்ஸ் (காப்டன், நான் உங்களைப் பற்றியும் உங்களுடைய மகோன்னத சாதனைகளைப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறேன்)'' என்று கூறினாள். ''எஸ், ஐ ஹாவ் ஹேர்ட் ஆப் காப்டன் டெய்லர் டூ. ஹி இஸ் எ வெரி க்ரூயல் மான். (நான் கேப்டன் டெய்லரைப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறேன். அவன் மிகக் கொடிய மனிதன்.)'' என்றும் தனது கருத்தைச் சந்தேகத்துக்கு இடமின்றித் தெரிவித்தாள்.

காப்டன் இங்கலண்டின் உதடுகளில் புன்னகை விரிந்தது. அவன் ஆங்கிலத்தில் பேசுவதை விட்டு மகாராஷ்டிர மொழியிலேயே பேச ஆரம்பித்தான். ''ராணி! என்னைப் பற்றி நீ அறிந்திருப்பதைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். உன் சாதனைகளைப் பற்றியும் நான் பல சொல்ல முடியும். ஆனால் நான் பாராட்டுக்களைப் பெறவோ இருப்

பலோ வரவில்லை. என் எதிரியைப் பிடிக்க வந்திருக்கிறேன். முடிந்தால் உயிருடன் அழைத்துப் போகிறேன். இல்லாவிட்டால்..'' என்ற அந்தக் கொள்ளைக்காரன் வார்த்தைகளை முடிப்பதற்குப் பதிலாகத் தனது துப்பாக்கியின் குதிரையைக் 'கிளிக்' என்று சத்தப்படுத்தினான். அத்துடன் அனந்தை நோக்கிக் கேட்டான்: ''உயிருடன் வருகிறாயா அல்லது உன்னைப் பிணமாகத் தான் தூக்கிச் செல்ல வேண்டுமா?'' என்று.

அனந்தின் புன்முறுவல் அதிகமாக விரிந்தது அவன் வதனத்தில். ''காப்டன்! எத்தனை நாளாக உனக்குப் பிணம் தூக்கும் வேலை



வந்தது?'' என்று கேட்டான். அத்துடன் தொடர்ந்து. ''காப்டன் இங்க்லண்ட்! நிராயுதபாணிகளைச் சுட்டு உனக்கு வழக்கம் கிடையாது. அப்படிப் பழக்கம் இருந்திருந்தால் உன்னைப் பிடிக்க வந்த காப்டன் மக்ரேயைக் கொன்றிருக்கலாம். அல்லது கொல்ல முயன்ற டெய்லரை அனுமதித்திருக்கலாம். இரண்டையும் ஏன் செய்யவில்லை?'' என்று வினவினான்.

இதைக் கேட்ட காப்டன் இங்க்லண்ட் முகத்தில் அதுவரை காணப்படாத பிரமிப்பு விரிந்தது. ''வாட் டூ யூ நோ அபௌட் மக்ரே? (மக்ரேயைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?)'' இப்படிப் பேசிய இங்க்லண்ட் அதிகமாகப் பேசிவிட்டதை உணர்ந்து சட்டென்று வாசகத்தை முடிக்காமல் நிறுத்தினான்.

காப்டன் இங்க்லண்டின் பலவீனத்தைத் தான் தொட்டுவிட்டதை உணர்ந்த அனந்த சொன்னான்: ''காஸண்ட்ரா கப்பலைப் பற்றியும் தெரியும். நடந்த விவரங்களும் தெரியும். என்னுடன் வந்தால் உங்கள் இதய நண்பனைக் காட்டுகிறேன்'' என்று.

காப்டன் இங்க்லண்ட் அதுவரை காட்டிய நிதானத்தைக் காற்றில் பறக்க விட்டான். ''உன்னுடன் வருவதா! அதைவிட நானாகவே என்னைச் சுட்டுக் கொள்ளலாமே'' என்றான் உஷ்ணம் அதிகமாகத் தொனித்த குரலில்.

''தற்கொலையை கிறிஸ்து மதம் அனுமதிக்கவில்லை'' என்றான் அனந்த்.

''நான் ஹரிந்து அல்ல'' என்றான் இங்க்லண்ட்.

''அதற்காகத் தற்கொலை அவசியமில்லை.''

''ஏன்?''

''ஏனென்றால்....''

''சொல்.''

''நான் சொல்வதை விட நீ பார்ப்பது நல்லது'' என்று சொன்ன இந்திரஜித் அனந்தின் குரலில் ஒரு விபரீத ஒலி இருந்ததைக் கவனித்த காப்டன் இங்க்லண்ட் இன்னொன்றையும் கவனித்தான். இந்தத் தர்க்கத்தின் ஊடே, காலண்ட்ராவைப் பற்றிச் சொன்ன விவரங்களால் தான் அயர்ந்துவிட்ட ஒரு விநாடியில்



அனந்தின் இடதுகை சரே லேசச் சரிந்து அவன் கச்சையில் சொருகப்பட்டிருந்த கைத்துப்பாக்கிகளில் ஒன்றைச் சற்றே நிமிர்த்திவிட்டதையும், அப்படி நிமிர்த்தப்பட்ட துப்பாக்கி தன் வயிற்றை நோக்குவதையும் கண்ட இங்க்லண்ட், கண்ணிமைக்கும் நேரத்தில் நிலைமை தலைகீழாக மாறிவிட்டதை உணர்ந்தான். அதை உணர்ந்தும் முகத்தில் சிறிதளவு அதிர்ச்சியையோ அச்சத்தையோ காட்டாமல், ''வாட் டூ யூ ப்ரபோஸ் டு டூ (என்ன செய்ய உத்தேசிக்கிறாய்?)'' என்று மட்டும் வினவினான்.

இந்த்ரஜித் அனந்தின் முகத்தில் பழைய சோம்பேறிக் களை விரிந்தது. ''காப்டன் இங்க்லண்ட்! இப்பொழுது உன்னை நான் சுட்டுவிட முடியும். ஆனால் நீ இறக்கு முன்பு என்னையும் சுட்டுவிட்டு இறக்க முடியும். இருவரும் சாவதால் யாருக்கும் பயனில்லை. இருவரும் பிழைப்பதால் பயன் உண்டு'' என்று உறுதி நிரம்பிய குரலில் கூறிய 'காப்டன் ட்ராப் யுவர் கன். ...ங்கா பாக் டு யுவர் ஷிப் (காப்டன்! ...ன துப்பாக்கியைக் கீழே போடு. இவை உன் கப்பலுக்குத் திரும்பிச் செல்லட்டும்)'' என்றும் சொல்லி மற்ற எதிரிப் படகுகளைக் காட்டினான்.

காப்டன் இங்க்லண்ட் துப்பாக்கியைக் கீழே போடவில்லை. தனது மற்ற வீரர்களையும் போடச் சொல்லவில்லை. ஆனால் மற்ற மூன்று படகுகளையும் திரும்பிச் செல்லுமாறு சைகை காட்டினான். அவை திரும்பிச் சென்றதும் ''ஆல் ரைட் அனந்த்! ஐ வில் கம் வித் யூ. லெட் யுவர் போட் ப்ரஸீட் மைன் (சரி அனந்த் வருகிறேன். ஆனால் உன் படகு என் படகுக்கு முன்னால் செல்லட்டும்)'' என்றான்.

அவன் எண்ணத்தை அனந்த் மட்டுமின்றி ராணியும் உணர்ந்தாள். படகிலிருந்த ஸ்டாண்டன், ஸ்மித் இருவரும் கூட உணர்ந்து கொண்டார்கள். தங்கள் படகு முன் சென்றால் பின்னால் வரும் படகிலுள்ள இங்க்லண்ட் மற்றும் மூவரும் தங்கள் முதுகுக்குத் துப்பாக்கிகளைக் குறி வைத்து வருவார்கள் என்பதும் ஏதாவது மோசடி நடந்தால் உடனடியாகத் தாங்கள் கொல்லப்படுவது நிச்சயம் என்பதையும் புரிந்து கொண்டாலும் பாண்டவர் கோட்டைக்குச் சென்றதும் அங்குள்ள பீரங்கிகள் இங்க்லண்டின் மீது திருப்பப்பட்டால் அவன் கதி என்னவென்பதையும் எண்ணிப் பார்த்தார்கள். விளைவு அவர்களுக்குப் புரிந்து

தாணிருந்தது. அவர்களுக்கு மட்டுமின்றி இங்க்லண்டின் படகிலிருந்த வெள்ளையருக்கும் புரிந்ததால் அவர்களில் ஒருவன் இங்க்லண்டைக் கேட்டான்: ''எதிரே தென்படும் கோட்டையில் பீரங்கிகள் இருக்குமே?'' என்று.

''இருக்கும்'' அலட்சியமாகப் பதில் வந்தது இங்க்லண்டிடமிருந்து.

''பீரங்கிகள் இயங்கினால்...?'' என்று வினவினான் இன்னொரு வெள்ளையன்.

''தே ஒண்ட்'' இங்க்லண்டின் பதிலில் திட்டமாக இருந்தது.

''யூ பிலீவ் திஸ் அனந்த்? (இந்த அனந்தை நம்புகிறீர்களா?)''

''எஸ்.''

''டு வாட் எக்ஸ்டண்ட் யூ கான் பிலீவ் ஹிம்? (எந்த அளவுக்கு நம்ப முடியும்?)''

''எனி எக்ஸ்டண்ட் (எந்த அளவுக்கும் நம்ப முடியும்)'' என்ற இங்க்லண்ட் ''டோண்ட் ஆஸ்க் ஸில்லி கொஸ்சன்ஸ். ஃபாலோ த போட் (முட்டாள்தனமாகக் கேள்வி கேட்காதீர்கள். அந்தப் படகைத் தொடர்ந்து செல்லுங்கள்)'' என்று உத்தரவும் இட இரண்டு படகுகளும் ஒன்றன் பின்னால் ஒன்றைத் தொடர்ந்து பாண்டவர் கோட்டையை நோக்கிச் சென்றன.

சிந்து துர்க்கம், பாண்டவர் கோட்டை ஆகிய இரண்டு கோட்டைத் தீவுகளுக்கும் இடையே அரை மைல் தூரம் இருந்ததால் படகுகள் இரண்டும் பாண்டவர் கோட்டையின் கரையை அடையச் சுமார் இரண்டு நாழிகைகளுக்கு மேல் பிடித்ததன் விளைவாகக் கரையின் ஓரத்துக்குப் பல வீரர்கள் கோட்டையிலிருந்து ஓடிவந்து அப்படகுகளை எதிர்கொள்ளத் தயாராய் நின்று கொண்டிருந்தார்கள். முதலில் தனது படகை மணலில் செலுத்தித் தரையில் குதித்த அனந்த், ராணியையும் இறங்கச் சொல்லி, ''ராணி! உனது வீரர்களை விலகி நிற்கச் சொல். இந்த எச்சரிக்கைக்கோ எதிர்ப்புக்கோ அவசியமில்லை' என்றான்.

ராணி கடல் வழி நெடுகத் தீவிர சிந்தனையிலிருந்தாளாகையால் வீரர்களை விலகி நிற்கச் சைகை காட்டவே வீரர்கள் படகுத் துறையிலிருந்து விலகிக் கோட்டைப் படகுகள் பிணைக்கப்பட்டிருந்த தளைகளை நோக்கிச் சென்றார்கள். அவர்கள் விலகியதும் அனந்த் சொன்னான்: ''ராணி! காப்டன் ஸ்டாண்டனையும் ஸ்மித்தையும் காவலில் வை. ஸ்டாண்டனின் கையிலிருந்த ரவையை எடுக்க ஏற்பாடு செய். நான் இங்க்லண்டை அழைத்து வருகிறேன். அவன் என்னுடனேயே தங்குவான்'' என்று.

ராணி அவன் மீது மீண்டும் தன் விழிகளை நாட்டினாள். அவள் புருவங்கள் இரண்டும் கேள்வி கேட்கும் பாவனையில் சற்றே உயர்ந்தன. ''ஆம் ராணி! நேற்றிரவு நான் இங்கு தான் தங்கினேன். கோட்டையில் நுழைந்ததும் இடது புறமிருக்கும் மாலுமிகளின் பெரிய விடுதியில் ஓர் அறையை எனக்கு ஒழித்து விட்டார்கள். அதில் இப்பொழுது கூட எனது நண்பன் இருக்கிறான்'' என்று விளக்கினான்.

அது விளக்கமே அல்லவென்பதையும், இரண்டு துர்க்கங்களுக்கும் அதிபதியான தனக்குத் தெரியாமலேயே சென்ற இரவில் பல நிகழ்ச்சிகள் பாண்டவ கட்டில் ஏற்பட்டிருப்பதையும் உணர்ந்தாளானாலும், அதைப் பற்றி எந்தக் கேள்வியும் கேட்காமல் எட்ட நின்றிருந்த தனது வீரர்களில் இருவரை அழைத்து, ''இந்த இருவரையும் அழைத்துச் சென்று இவர்கள் காயங்களுக்குச் சிகிச்சை செய்யுங்கள்'' என்று உத்தரவிட்டு எதிரே தெரிந்த மணற்பாங்கிலிருந்த தென்னஞ் சோலையை நோக்கி நடந்தாள் கடல் ராணி.

அவள் நடையைப் பார்த்துக் கொண்டு அதில் லயித்துவிட்ட இந்திரஜித் அனந்தை இங்க்லண்டின் சொற்கள் இந்த உலகத்துக்குக் கொண்டு வந்தன. ''மை காட்! அனந்த்! யுவர் ஹால் சஸ் வெரி பிரெட்டி! (அனந்த் உன் கடற் கொள்ளை மிக அழகாயிருக்கிறது) என்ற இங்க்லண்டின் வார்த்தைகளைக் கேட்டுத் திரும்பிய அனந்த ''யூ ஆர் ராங் காப்டன். ஷீ இஸ் பிரெட்டி பட் நோ ஹால் ஆப் மைன் (அவள் அழகிதான் காப்டன். ஆனால் என் கொள்ளையில் சிக்கவில்லை)'' என்று விடையளித்துவிட்டு, ''கமான்'' என்று கூறிக் கொள்ளைக்கார காப்டனையும் அவன் சகாக்கள் மூவரையும் அழைத்துக் கொண்டு ராணி சென்ற தென்னஞ் சோலையை நோக்கிச் சென்றான். தென்னஞ் சோலையின் பசுமையை அடுத்துப் பாண்டவர் கோட்டையின் மதிலும், அதன் நடுவே திறந்து கிடந்த பெரிய வாயிலும் தெரியவே அந்த வாயிலில் நுழைந்து அதை அடுத்துத் தென்புறமிருந்த ஒரு பெரிய விடுதியை நோக்கி நடந்தான் அனந்த்.

அந்த விடுதியை அடைந்ததும் ''இங்க்லண்ட்! நேற்று நாங்கள் இங்குதான் தங்கினோம்'' என்று கூறிய அனந்த் அவனை உள்ளே அழைத்துச் சென்றான். அந்தப் பெரிய விடுதியின் உட்புறம் மிக அலங்கோலமாயிருந்தது. பல நாட்டு மாலுமிகள்

''என்ன சார், உங்க மகன் உங்கள் எதிரிலேயே சிகரெட் பிடிக்கறானே, கொஞ்சம் கேட்கக் கூடாதா?''

''கேட்டால் அவன் கொடுக்க மாட்டான் சார்!'' — எம். ஏ. அப்துல் காதர்



எங்கும் நிறைந்திருந்தார்கள். சிலர் உட்கார்ந்து புகை குடித்துக் கொண்டிருந்தார்கள். சிலர் நடமாடிய வண்ணம் ஏதோ அலுவல்களைச் செய்து கொண்டிருந்தார்கள். இருவர் ஹூக்கா குடித்துப் புகையை இழுப்பதும் விடுவதுமே சொர்க்கானுபவம் என்பதை உணர்ந்து கண்களை இறுக மூடிக் கொண்டிருந்தார்கள். சில மாளுமிகள் தங்களை ஆந்தைகளாக நினைத்துக் கொண்டு பகல் வந்துவிட்டதால் படுத்துக் கண்களை மூடி உறங்கிக் கொண்டிருந்தார்கள். இவர்களையெல்லாம் தாண்டி மாளுமி விடுதியின் கடைசிக் கட்டுக்கு வந்த அனந்த் அங்கிருந்த ஓர் அறையை லேசாகத் தட்டினான்.

உள்ளிருந்து "ஹூ' ஈஸ் இட்? (யாரது?)" என்று கரகரத்த கடுமையான குரல் எழுந்தது.

அந்தக் குரலைக் கேட்டதும் இங்க்லண்ட் எல்லை யில்லாப் பிரமிப்பை அடைந்து அனந்தை நோக்கினான். அனந்த் பதிலுக்குத் தலையை அசைத்தான். பிறகு உரக்கச் சொன்னான், "நான்தான் அனந்த்" என்று.

உள்ளேயிருந்து மீண்டும் பதில் வந்தது. "கதவு திறந்திருக்கிறது" என்று.

கதவை மெள்ளத் திறந்தான் அனந்த். அறைக் கோடியில் ஒரு நாற்காலியில் நல்ல உயரமுள்ள ஒரு வெள்ளைக்காரன் சாய்ந்து கொண்டிருந்தான். அவன் இடுப்பு பெல்ட்டில் நான்கு கைத்துப்பாக்கிகள் சொருகப்பட்டிருந்தன. ஒன்று மட்டும் உள்ளே வந்தவர்களை நோக்கி நீட்டப்பட்டிருந்தது. உள்ளே அனந்துக்குப் பின்னால் வந்தவனைப் பார்த்ததும் அந்த மனிதன் பெரிதாகக் கூவினான், "யூ ராஸ்கல் இங்க்லண்ட்! ஹௌ டிட் யூ கம் ஹியர்? (அட ராஸ்கல் இங்க்லண்ட்! இங்கு எப்படி வந்து சேர்ந்தாய்?)" என்று.



கோபு: அவர் ஒரு சங்கோஜப் பேர்வழிங்க!
பாபு:- அப்படியா?
கோபு:- ஆமாம், நேற்று எங்க வீட்டில் சாப்பிட வந்தார் 34 இட்லி சாப்பிட்டுட்டு மேலே ஒரு இட்லி வைச்சா சங்கோஜப் பட்டுக்கிட்டு எழுந்து போய் விட்டார்!

— ஆர். கோபாலகிருஷ்ணன்

இங்க்லண்ட் பேச நா எழாமல் நின்றான். அவர்களுக்குப் பின்னால் பூனை போல் நுழைந்த ராணியும் அந்த மனிதனைப் பார்த்துப் பிரமித்தாள். "யூ மஸ்ட் பி ஸில்வர்! யூ ஹாவ் ஒன்லி ஒன் லெக். தி அதர் ஈஸ் மேட் ஆப் உட் (நீ ஸில்வர் என்பவனாயிருக்க வேண்டும். உனக்கு ஒரு கால் தான் உண்டு. இன்னொரு கால் மரத்தால் செய்யப்பட்டது)" என்றாள் ராணி.

பதிலுக்கு அந்த மரக்கால் மனிதன் பேய்ச் சிரிப்புச் சிரித்தான். (தொடரும்)



பல நூற்றாண்டு காலமாக நமது சௌகரியம், வேடிக்கை, உணவு போன்றவைகளுக்காக மிருகங்கள் வேட்டையாடப்பட்டு வருகின்றன. அவை திருப்பித் தாக்கத் தீர்மானித்தால்....?

நமக்கு ஒளிவதற்குக்கூட இடம் இருக்காது!-- இப்படிக் கற்பனையாக ஓர் எச்சரிக்கை விடுத்து அதன் மூலம் மிருகங்களைத் தாறுமாறாகக் கொன்று பலி வாங்குவது எவ்வளவு தவறு என உணர்த்துகிறது இந்தப் படம்.

சுற்றுலா வந்த குழு ஒன்றுக்கு ஒரே நாளில் பல பயங்கரங்கள் நிகழுகின்றன. பறவைகள், மிருகங்கள், ஜந்துக்கள் எல்லாமே பகுதி பகுதியாக அவர்களைச் சூழ்ந்து கொண்டு சிலரை மரணவாயிலில் தள்ளிவிடுகின்றன. பின்னர் ஒரு கட்டத்தில், நகரத்தை விட்டே மக்கள் ஓட்டம் பிடிக்கின்றனர். இப்படி வளர்கிறது கதை.

இன்றைய சினிமா ரசிகர்களை அட்டையில் செய்த மிருகங்களைக் காட்டித் திருப்திப்படுத்த முடியாது! எனவே நிஜமான மிருகங்களை நடிக்க வைத்து இப்படத்தை எடுத்திருக்கிறார்கள். 70 விஷமுள்ள பாம்புகளும் 200 மிருகங்களும் இப்படத்தில் நடித்துள்ளன. லிஸ்லன் பாக்லினி இப்படத்தில் ஒரு பருந்தினால் பயங்கரமாகத் தாக்கப்படுகிறார். விளம்பர அதிகாரியாக வரும் பால் ஜென்சன், மிருகங்கள் தன்னைத் தாக்கும்போது மனித மிருகமாக மாறுகிறார். எனினும் இறுதியில் கரடிக்கு அவர் பலியாகிறார். இந்தக் கட்டங்கள் நம்மைப் பயங்கர உணர்வில் ஆழ்த்துகின்றன.

-டி.எம்.ஆர்.



பெண் மனம்

"கிரிஜா"

நேற்றுவரை தன்னிகரற்று நிமிர்ந்து நின்ற சியாமளாவின் உள்ளம், இன்று மிகவும் துவண்டுவிட்டது. இன்றுவரை அவள் எண்ணியே பார்க்காத எண்ணங்கள் யாவும் அவள் உள்ளத்தில் புயலாகப் புகுந்து, துவளச் செய்துவிட்டது. அவளது நண்பர் சந்திரன் நிலைமையை எவ்வளவு அழகாக, ஆழமாகச் சொல்லிவிட்டார்!

''...சியாமள் நம் அன்பு, நட்பு முறையோடு நிற்கட்டும். அதற்கு மேல் ஆசை கொள்வது இனிமேல் சரியல்ல'' என்று அவளது நண்பர் சந்திரன் கூறியதும் சியாமளா திடுக்கிட்டுத் திகைத்து விட்டாள். அவளது திகைப்பைக் கண்டு மெள்ளச் சிரித்தார் சந்திரன்.

''சியாமள், நீயே நினைத்துப் பார்! உனக்கு வயது முப்பத்தாறு: எனக்கு வயது நாற்பத்தாறு. இதற்கு மேல் நாம் தாம்பத்யம் நடத்தப் புகுந்தால் அதன் விளைவுகளை எதிர் கொள்ள நமக்குப் பல சௌகரியங்கள் வேண்டும். குழந்தைகள், என்ற பிரச்னை ஏற்பட்டால், அவைகளை வளர்க்கும் பொறுப்பு நமக்குப் பாரமாகத் தோன்றும். குழந்தைகள் எப்படியோ வளர்ந்து, தக்க வயதை அடைந்து, கல்யாணம், வேலை என்று நம் உதவியைப் பெரிதும் எதிர்பார்த்து நிற்கும்போது நாம் எப்படி இருப்போம்? முதுமையில் அடி வைத்து அவர்கள் ஆதரவைத் தேடி நிற்போம்...'' இப்படிப் பல பிரச்னைகளைக் கண்முன் கொண்டு வந்து சந்திரன் காட்டியதும்தான் சியாமளா அசந்து துவண்டு விட்டாள்.

''சேச்சே! மிக உறுதியாக லட்சியப் பாதையில் நின்று கொண்டிருந்தவள் அதை விட்டு இறங்கி இப்படி ஓர் ஆசைக்கு மனத்தில் ஏன் இடம் கொடுத்தோம்? பெண் மனத்தின் கோளாறு?'' என்று எண்ணித் தன்னையே நொந்து கொண்டாள் சியாமளா.

ஆனாலும் அவளுள் வளர்ந்து விட்ட புதுக் கனவுகள் நினைவானால்...? என்ற எண்ணம் சுழன்று 'லட்சியம்' என்ற ஒரே நினைவில் மனத்தைச் செலுத்தி வாழ்வை வீணடித்துக் கொண்டு விட்டோமோ? என்ற கேள்வியும் மனத்துள் குடைய, சியாமளாவின் மனம் மெல்லப் பழைய நினைவுகளில் ஆழ்ந்தது.

மூத்த குழந்தையின் மூக்கைத் துடைத்து, ஈரமாக்கிக் கொண்ட கைக் குழந்தையைத் துடைத்து எடுத்துக் கொண்டு, 'ஏய் வனஜ்! துண்டு, துண்டு?' என்று தலையிலிருந்து சொட்டும் தண்ணீரோடு நிற்கும் அத்திம்பேருக்கு 'இதோ கொண்டு வருகிறேன்' என்றபடி இடக்கை அணைப்பில் குழந்தையும், வலக்கையில் டவலுமாக ஓடிவரும் வனஜாவைப் பார்க்கும் சியாமளாவுக்குப் பாவமாக இருக்கும்: அடுத்து அவளுள் ஆத்திரமும் கோபமும் எழும்.



''சேச்சே! இதுவென்ன தலைவேதனை பிடித்த வாழ்க்கை! வேண்டவே வேண்டாம் இந்த வாழ்க்கை! பெண்களுக்கு இந்தக் கல்யாணம்மூலம் என்பது ஒரு பெரிய விலங்கு! அதில் போய் மாட்டிக் கொள்ளலாமோ? கணவனுக்குப் பயந்து, பயந்து, பணிவிடைகள் செய்து, குழந்தைகளோடு போராடி, மாமியார், நாத்தனார் என்று பயந்து, அடங்கித் தாழ்ந்து... அப்பப்பா! எனக்கு வேண்டாம் இந்த வாழ்க்கை. நான் படித்துப் பட்டங்கள் பெற்று, என் வேலையும் ஏற்றுப் புதுமைப் பெண்ணாக நிற்பேன்...'' இப்படிலட்சியக் கனவுகளை வளர்த்துக் கொண்டாள்.

முனைந்து படித்து ஒரு ஸ்திர லட்சியத்துடன் முன்னேறிய சியாமளாவுக்கு 'ஸ்காலர்ஷிப்' வேறு கை கொடுக்கவே அவளது உற்சாகத்துக்கு ஓர் எல்லை இல்லை. உற்சாகமாக முனைந்து, நிமிர்ந்து நின்று தன் லட்சியத்தை அடைய முயன்றவளுக்கு அவள் படித்த கல்லூரியிலேயே வேலையும் கிடைத்துவிட்டது.

'லட்சியத்தை அடைந்து விட்டோம்!' என்ற உற்சாக மிதப்பில் பதினைந்து ஆண்டுகள் உருண்டோடி விட்டன. சென்ற சில ஆண்டுகளாகத்தான் சியாமளாவின் மனத்தில் ஒரு தேக்கம். மாறுதல் இல்லாத வாழ்க்கையில் குதூகலம் மறைந்து, அலுப்பு எல்லை மீறி வளர்ந்தது.

அலுப்பில் உழன்ற சியாமளாவின் மனம் மாறுதலை வேண்டி ஏங்கிய சமயத்தில்தான், நெருங்கி வந்த சந்திரனுடைய நேசம் மனத்துக்கு ஒரு வித இதத்தைக் கொடுத்ததுடன், இன்பக் கனவுகளையும் வளர்த்தது.

அழைப்பு மணியின் ஒலியால் திடுக்கிட்டுத் தன் நினைவுகளிலிருந்து மீண்ட சியாமளா மெல்ல எழுந்து, கதவுத் தாழ்ப்பாளை விலக்கிக் கதவைத் திறந்ததும் அவளது விழிகள் வியப்பால் விரிந்தன. தன் மாணவமணிகளில் ஒருத்தியை எதிர்பார்த்துத் திறந்தவளுக்கு அங்கே அழகிய பெண்ணுடன் ஒரு தம்பதியரும் நிற்கவே அவள் திகைத்தாள்.

''என்ன சியாமளி, சௌக்கியமா? என்னைக் கண்டதும் திகைப்பாக இருக்கிறதா?'' என்று கேட்டபடி உள்ளே நுழைந்தார் சியாமளாவின் அத்தான். சட்டெனத் தன்னைச் சமாளித்துக் கொண்ட சியாமளா, அவர்களை வரவேற்று உட்காரச் செய்தாள்.

அழகுச் சிலையாக அமர்ந்திருக்கும் அந்தச் சின்னஞ்சிறு பெண்ணின் கண்களைக் கண்டு வியந்தாள் சியாமளா. துரு துருவென்று அறையெங்கும் அலைபாயும் அந்தக் கண்களில்தான் என்ன அப்படியொரு ஜ்வலிப்பு!

''சியாமள்! நீ ஒறாயாக அப்படியே இருக்கிறாய்! என்னைப் பார்! இரண்டு பையன்களுக்கும் ஒரு பெண்ணுக்கும் 'அப்பா!' இந்த அழகான பெண்ணுக்குக் கணவன்; தொல்லைப்பட வேறு என்ன வேண்டும்?'' என்று சொல்லிவிட்டுக் கடகடவென்று சிரித்தார். வாழ்க்கையைச் சிரித்தே ரசிப்பவர் சியாமளாவின் அத்தான்.

வெகு நாள்வரை அத்தையும் அத்தானும் இவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தது பளிச்சென அவள் நினைவுக்கு வரவும், தன்னையும் மீறிய உணர்வுடன் அந்தப் பெண்ணின் மீது பார்வையைப் பதித்தாள். 'இந்தப் பெண்ணுக்குத் தாயாகும் மகத்தான பாக்கியம் தனக்கிருந்தும், அதை உதறிவிட்டோமோ? லட்சியம் என்று தன் வாழ்வையே பாழ்செய்து கொண்டு விட்டோமோ? சட்டெனத் தன் மனத்தை உலுக்கிய எண்ணங்களை உதறிய சியாமளா, ''அத்தான், சற்று உட்கார்ந்து இருங்கள். ஒரு நொடியில் காப்பி

தயாரித்து எடுத்து வருகிறேன்'' என்றபடி எழுந்தாள். எழுந்த சியாமளாவை மீண்டும் உட்காரச் செய்தாள் ராஜி. ''அக்கா நீங்கள் இவருடன் பேசிக் கொண்டிருங்கள். நான் காப்பி தயாரித்து எடுத்து வருகிறேன்''— அடுத்த நிமிடம் அங்கு நிற்கவில்லை அவள்.

பேச்சுக்குப் பேச்சு மனைவியைப் புகழும் அத்தானைப் பார்த்தபோது சியாமளாவுக்குப் பெரும் வியப்பாக இருந்தது. இருந்தும் அதில் உள்ள உண்மை அவள் மனத்தைத் தொடத்தான் செய்தது.

சற்றைக்கெல்லாம் காப்பி டம்ளருடன் வெளிவந்தாள் ராஜி. காப்பியை எல்லோரிடமும் கொடுத்தவள், ''நீங்களே சொல் லுங்கள் அக்கா: நம் உடம்பில் திடம் இருக் கும்போதே, காலா காலத்தில் பெண்ணை ஒருவரிடம் ஒப்படைத்து, இரண்டு குழந்தை களுக்குத் தாயாகும் வரை நம் கடமைகளைச் செய்து, ஒரு குடும்பத்தின் தலைவியாக்கிக் காணும்போதுதான் ஒரு தாயின் கடமை பூர்த்தியாகிறது. இதைச் செய்யாதவரை தாயாருக்கு நிம்மதி ஏது அக்கா?'' என்றாள்.



''பக்கத்து ஆபீசுக்குப்போய், முப்பதுகுண்டூசி, நாலுஜெம்கிளிப்பு இரண்டு கார்பன், ஒரு ரிப்பன், அந்த ரப்பர் பாண்டு கடன் வாங்கிட்டு வாங்க. முதல் தேதி திருப்பிக் கொடுத்துடலாம்!''

''கதர்ஸன்''

சியாமளாவின் முகம் 'குப்'பென்று சிவந்து வியர்த்தது. அதை மறைக்க அவள் காப் பியைப் பருகத் தொடங்கினாள். பிறகு வியப்போடு நிமிர்ந்து ராஜியைப் பார்த்தாள். சியாமளா. அந்த மதி முகத்தில் ஒளிவிட்டு ஆகர்ஷிக்கும் அழகு. தாய்மையின் பூரிப்பா? தலைவியின் கம்பீரமா? கணவனின் பிரியை என்ற கர்வத்தின் தனிமையா? ஒட்டி உற வாடும் 'அக்கா!' என்ற அழைப்பின் அருமை! பழகிய இடம் போல் காப்பி தயாரித்துக் கொண்டு வந்த நேர்த்தி! காப்பியின் ருசி!.... சந்திரன் கட்டியது போல் தனக்கும் இந்த வாருக்கும் வெகு தூரம்தான்....

''என்ன அக்கா பேச்சையே காணோம்! நான் சொன்னதில் தவறு இருந்தால் சொல் லுங்கள். பெண்களுக்குப் படிப்பு வேண்டியது தான்; அதைவிட முக்கியம் நம் கடமையும் அவர்கள் இல்வாழ்க்கையும் என்றுதான் எனக்குப் படுகிறது'' என்ற ராஜி, சியா மளாவின் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள்.

''இல்லே ராஜி, காப்பியின் ருசியையும், உங்கள் பேச்சின் இனிமையையும் எண்ணி வியந்தபடி இருந்தேன். உம்; உங்கள் இரு வரது அபிப்பிராயத்தையும் சொல்லிவிட் டீர்கள். ஸரோஜியின் அபிப்பிராயம்? அதை யும் தெரிந்து கொள்வது நல்லதுதானே?'' என்ற சியாமளா அந்தப் பெண்ணின் முகத்தை ஆவலாகப் பார்த்தாள்.

''எனக்கு மேலே படிக்கத்தான் ரொம்ப வும் ஆசை ஆன்டி! இருந்தாலும், அம்மா சொல்வது போல் படிப்பை எப்பொழுது வேண்டுமானாலும் தொடரலாம்; வாழ்க்கை அப்படியல்லவே? அம்மா, அப்பா ஆதர வுடன் தக்க வயதில், தக்க சமயத்தில் அமைத்துக் கொண்டால்தான் நல்லது என் றும் தோன்றுகிறது ஆன்டி'' என்றாள் அச் சிறு பெண் சிரித்தபடி.

ராஜியின் காதில் அமிர்த தாரையாக விழுந்த அதே வார்த்தைகள், உருக்கிய ஈயமாக விழுந்தன சியாமளாவின் காதில்; சாட்டையால் அடிபட்டது போல் உடம்பு நடுங்க, முகம் பதற ரேகத்தைத் தாழ்த்திக் கொண்டாள்.

இதற்கு மேல் அவர்கள் பேசிய எதுவும் சியாமளாவின் செவியில் ஏறவில்லை. ஒப்புக்கு 'உம்' கொட்டிக் கொண்டிருந்தாள்.

அத்தான் தம்பதியர் வந்து போன பிறகு சியாமளாவுக்கு இரவு நல்ல தூக்கமே போய்விட்டது. தாய்மையும், தலைமையும் கொடுக்கும் பூரிப்பில் உயர்ந்து நிற்கும் ராஜியின் முகம் அவளது அகத்தில் நன்றாகப் பதிந்து விட்டது. அன்று சியா மளா விரும்பி யிருந்தால் ராஜியின் உயர்ந்த வாழ்வு இன்று தனதாக இருந்திருக்கும். இந்த எண்ணத்தின் ஊடே ஸரோஜியின் வார்த்தைகளும் வந்து அவள் நினைவில் மோதியது. 'தக்க வயதில் தக்க சமயத்தில் அமைத்துக் கொண்டால்தான்...' ஆழம் கொண்ட வார்த்தைகள்!... அப்படி அந்தப் பெண் மனத்தைப் பொன்னாக வளர்த்தவள் தாய் ராஜி! என் அம்மாவும் அன்று...? இப்படிப் பல வித எண்ணங்கள் சியாமளா வின் மனத்தைத் துளைத்தெடுத்தன.

அன்று அழும் பெண்களைக் 'கோழை' என்று எள்ளி நகைக்கும் சியாமளாவுக்கு இன்று தன் மனப் புழுக்கம் தீர, ''கோ'' வென்று கதறி அழவேண்டும் போலிருந்தது.

மிகவும் சலித்து நொந்த மனத்துக்கு ஓர் ஆறுதல் தர விரும்பினாள் சியாமளா. இதுவரை தன் உன்னத உயர்வில் மயங்கிக் கிடந்தவளுக்கு உறவினர் ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. இன்று அக்கா வனஜாவின் நினைவு வரவே புறப்பட்டு விட்டாள்.

''அடேடே! என்னம்மா அதிசயம்! வா, வனஜ், சாந்தி, இங்கே வந்து பாருங்கள்!

அதிசயம்! ஆச்சரியம்!'' என்று மிகக் குதூகலமாக வரவேற்றார், சியாமளாவை, அவளது அக்காவின் கணவர். கண்ணெதிரே தங்கை சியாமளாவைக் கண்டும் நம்ப முடியாமல் திகைத்தாள் வனஜா.

அன்று மூக்கு ஒழுக, அழுகையின் அவதாரமாக நின்ற மூத்த குமாரன் முரளி, இன்று ஓர் இன்ஜினியர். சிரிக்கச் சிரிக்க முரளி பேசும் பேச்சும் அம்மாவுக்குப் புரியாத விஷயங்களை விளக்கிச் சொல்லிப் புரிய வைக்கும் அவன் சாதுர்யமும், முகம் முழுவதும் கண்களும் மூக்கும் விரிந்து சோபிக்கும் அவனது மௌனப் புரிப்பும் கம்பீரமும் சியாமளாவின் பார்வையை நிலைக்க வைத்தன. அன்று அவள் தூக்கவே அருவருப்புப்பட்ட குழந்தை சாந்தி, எம். ஏ. சியாமளாவே அள்ளி அணைக்க ஆவல்கொள்ளும் அழகிய யுவதியாக நின்றாள். கன்னம் பளபளக்க, கண்களில் குறும்பு துள்ள நிற்கும் சாந்தியை இழுத்துத் தன் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டாள் சியாமளா.

இதோ, இது என்ன? அக்காவுக்குப் பின்னால் ஒரு குட்டிச் சந்திரோதயம்! கரு கருவென்று நெற்றியில் புரளும் மயிர் கருள்களும், சிரிக்கும் கரு விழிகளுமாக....!


''என்னடியம்மா திகைப்பு? இவன்தான் எங்கள் கடைக்குட்டி. கண்ணன்'' என்று அவனை முன்னால் இழுத்து அறிமுகம் செய்தாள் வனஜா.

அக்கா, அத்திம்பேரின் அழகை அள்ளிக் கொண்டு நிற்கும் அந்தக் கடைசிப் பையன் கண்ணனைக் கண் கொட்டவும் மறந்து பார்த்துக்கொண்டிருந்தாள், சியாமளா. உவகையால் பூரித்த அவள் உள்ளத்திலே ஆசையும் பாசமும் அமிர்த ஊற்றுகச் சுரந்தன. சலித்திருந்த அவள் மனத்திலே மெல்ல ஒரு தீர்மானம் முளைவிட்டது. 'அக்காவுக்கு முரளியும் சாந்தியும்தான் இருக்கிறார்களே, இந்தக் கண்ணனை எனக்குத் தரட்டுமே, நண்பர் சந்திரன் வியக்க....' என்று சியாமளாவின் மனத்தில் முளைவிட்ட மனக்கோட்டை மளமளவென்று வளர்ந்தது.

வனஜாவின் இல்லத்தில் தினம் சாப்பாட்டுக்குப் பின்னர், மொட்டை மாடியில் சிறு 'மீட்டிங்' நடக்கும். அதில் அவர்கள் குடும்ப விஷயங்கள் யாவும் பேசி முடிவெடுக்கப்படும். சியாமளா அதில் மிகக் குதூகலமாகக் கலந்து கொள்வாள்.

அன்று சிறு தலைவலியால் கண்ணயர்ந்து விட்டாள் சியாமளா. விழிப்பு வந்ததும் அவசரமாகக் கிளம்பினுள் மொட்டை மாடிக்கு. அவள் பாதிப் படி ஏறியதும் நின்றுவிட்டாள். காரணம், அங்கு சுவாரஸ்யமாக நடந்து கொண்டிருந்த சம்பாஷணை அவளது மனக்கோட்டையை ஒட்டியதாக இருந்ததே.

''....கிண்டி இன்ஜினியரிங் காலேஜில் கண்டிப்பாகக் கண்ணனுக்கு இடம் கிடைக்கும்; சியாமளா சித்தியும் பார்த்துக் கொள்வாள். அங்கு கண்ணன் படிப்பது பல விதத்துக்கும் நல்லது. மேலே எம். பி. ஏ. படிக்கவும்



ஒருத்தி பாதிரியாரிடம், ''பாதர், நான் ஒரு பாவம் செய்துவிட்டேன் தாங்கள்தாம் மன்னிப்பு பெற்றுத் தர வேண்டும்'' என்றாள்.

''என்ன பாவம் செய்தாய்?'' - பாதர்

''எனக்குக் கர்வம் ஏற்பட்டு விட்டது. கர்வம் கொள்வது பாவமில்லையா, பாதர்?''

''பாவம் தான். எப்படி ஏற்பட்டது உனக்கு?''

''ஒவ்வொரு நாள் காலையிலும் நான் கண்ணாடியை ப்பார்க்கும்போது, 'நாம் எத்தனை அழகாக இருக்கிறோம்' என்றும் எண்ணம் தோன்றி விடுகிறது பாதர்.''

''நோ சைல்ட், அது பாவமல்ல; பிழை!''

('படியுங்கள், சுவையுங்கள்' புத்தகத்திலிருந்து) —டி. ராஜேந்திரன்

சௌகர்யம்...'' என்று அடித்துச் சொல்லிக் கொண்டிருந்தான் முரளி.

சியாமளாவின் மனம் பூரித்து விம்மியது. அப்படியே திகைத்து நின்று விட்டாள்.

''சித்திக்குக் கண்ணனை ரொம்பவும் பிடித்து விட்டது. சித்தி சந்தோஷமாகக் கண்ணனுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுப்பாள். இங்கு அம்மாவுக்கும்தான் முடியவில்லை'' என்று சொல்லி முரளியின் பேச்சை ஆமோதித்தாள் சாந்தி.

''நல்ல யோசனை. சியாமளாவுக்கும் சந்தோஷமாக இருக்கும். என்ன வனஜ்? உன் அபிப்பிராயம்?''

இப்படி அத்திம்பேரும் ஆமோதித்துவிடவே, சியாமளாவுக்குச் சந்தோஷம் மூச்சு முட்டியது. அதே சமயம் கண்ணன் குரல்... காதைத் தீட்டிக் கொண்டாள்.

''எல்லா இன்ஜினீரிங் காலேஜும் ஒன்று தானே அப்பா? நான் இங்கேயே படித்துக் கொள்கிறேன்.''

''எனக்குத் தெரியுமே! இது பெரிய 'அம்மாக் கோண்டு' என்று. போடா மண்டு! உனக்குக் காலேஜ்களைப் பற்றி என்னடா தெரியும்? முட்டாள்'' என்று கண்ணனை அடிக்கவே கையை ஓங்கிவிட்டான் முரளி.

அவ்வளவுதான். கண்ணன் அம்மாவின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மத் தொடங்கி விட்டான்.

''ஏண்டா, குழந்தையை வதைக்கிறீர்கள்? எனக்கே முதலில் அவனைப் பிரிய முடியாது'' என்றபடி வனஜா கண்ணனை அணைத்துக் கொண்டாள்.

எப்படியோ படிகளைக் கடந்து இறங்கிய சியாமளா படுக்கையில் வந்து விழுந்து முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அன்று வனஜாவின் வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கிய சியாமளாவின் பெண் மனம் இன்று அந்த வாழ்க்கைக்காக ஏங்கி விம்மியது. கண்ணனது விம்மல் தாயின் அணைப்பில் குறைந்து விட்டது. சியாமளாவின் விம்மலோ...?

9

தோட்டத்தில் முனிசாமி ரோஜாச் செடியைக் கிளறிக் கொண்டிருந்தான்.

வாசலில் ஒரு டாக்ஸி நிற்கும் ஓசை கேட்டது. அவன் சட்டென்று நிமிர்ந்து பார்த்தான். ஒரு பெரிய சூட்கேஸைத் தூக்கிக் கொண்டு நளினி இறங்கினாள். அவன் ஆச்சரியத்துடன் விரைந்தான். அவளைப் பார்க்கும்போதெல்லாம் மனசை நிறைக்கும் சந்தோஷம் இப்பவும் ஏற்பட்டது பெட்டியை வாங்கிக் கொண்டு ''வாங்கம்மா'' என்றான் வாய் நிறையச் சிரித்துக்கொண்டு.

நளினி உள்ளே நுழையும்போது மைதிலி வரவேற்பறையில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தாள். நளினியையும் அவள் பின்னால் முனிசாமி பெட்டியைத் தூக்கிக் கொண்டு நிற்பதையும் பார்த்துத் திடுக்கிட்டாள். அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல், ''வாம்மா'' என்றாள்.

''மம்மி, நான் மாடிக்குப் போய் நேரே படுத்துக்கப் போறேன்.'' மனசிலிருந்த சோகத்தை மறைக்க முயன்ற மாதிரி நளினி லேசாகச் சிரித்தாள்.

''ரொம்ப டயர்டா இருக்கு.''

அந்தக் குரலில் தெரிந்த சோகமும் ஆயாசமும் மைதிலிக்கு வயிற்றைக் கலக்கியது.

''ஓ! படுத்துக்கோம்மா'' என்றாள் அவசரமாக நளினியின் பின்னாலேயே மெள்ளப் போனாள். நளினி தன் அறைக்குச் சென்று செருப்பைக் கழற்றிவிட்டுக் கட்டிலில் படுத்துக் கொண்டாள். ஒருவித ஆயாசத்துடன் கூரையைப் பார்த்தபடி சொன்னாள்:

''மம்மி, இனிமே எனக்கு இதுதான் நிரந்தரமான இடம்.'' மைதிலி அதிர்ந்து போனாள். சில விநாடி நேரம் நம்ப முடியாத மாதிரி நளினியைப் பார்த்தாள். கழுத்தில் எலும்பு குத்திக் கொண்டு நின்றது மதர்ப்புடன் இருந்த மார்பகங்கள் அடங்கித் தெரிந்தன. கண்கள் பெரிதாக ஆழமாகக் கருவட்டங்களோடு — அவசரமும் துடிப்பும் சிரிப்புமாக இருந்தவள் இவள் என்று நம்புவது கஷ்டமாக இருந்தது. அவள் மெதுவாகச் சொன்னாள்:

''என்னவாக இருந்தாலும் நிதானமாகச் சொல்லு நளினி. அவசரமில்லே. இப்பத் தூங்கும்மா....'

''ஓ மம்மி நான் தூங்கி எத்தனையோ நாளாச்சு.''

மைதிலி ஒன்றும் சொல்லாமல் கட்டில் மேல் வந்து உட்கார்ந்தாள். நளினியின் தலையைக் கோதி விட்டாள். அதற்கு மேல் தன்னால் தாங்க முடியாது என்று நினைத்த மாதிரி அவள் மடியில் முகத்தைப் புதைத்து நளினி விசித்து விசித்து அழுதாள்.

நளினி பிறகு மெள்ளச் சொன்னாள்: அசோக்கைப் பற்றி.... அவன் உண்மைச் சொரூபம் தெரியாமல் தான் ஏமாந்துபோனதைப் பற்றி... தான் ஒழுங்கில்லாமல் இருந்து கொண்டு அவளை அபாண்டமாக நடத்தை கெட்டவள் என்று சொன்னதைப் பற்றி....

மைதிலி அதிர்ந்து போனாள், நடந்த கதையே மறுபடியும் நடப்பதைப் பார்த்து. பட்சி மாதிரி இருக்க இந்தப் பெண்ணுக்கும் இந்தக் கதியா என்று நினைத்து. இந்த இரண்டு மாதங்களாகத் தினமும் சொல்லிக்கொண்டிருக்கிறாள். ''நளினி அவசரப் படாதே. பொறுமையா இரு. அசோக் மனசு மாறினாலும் மாறுவான். தப்பை உணருவான். அநியாயமாய் வாழ்க்கையை நாசமாக்கிக்காதே.'' அவளுடைய வார்த்தைகளுக்கு எந்த விதப் பலனும் இருந்ததாகத் தெரியவில்லை. நளினி பிடிவாதமாக இருந்தாள். 'பண்பில்லாத அந்த மனுஷனோடு இருக்க மாட்டேன். அவன் மாற மாட்டான்' என்று அவள் தீவிரமாகச் சொல்வதைப் பார்க்கையில் திகைப்பாக இருந்தது. அவளுடைய பிடிவாதத்தைப் பார்க்கையில் அவள் சொன்ன காரணங்களை விட ஏதோ ஒரு பலமான காரணம் இருக்க வேண்டும் என்றுமைதிலி நினைத்துக் கொண்டாள். அது என்ன என்று கேட்கப் பல தடவை முயன்றும் கேட்க முடியவில்லை. அதற்கு என்ன பதில் வருமோ அதை நம்மால் தாங்க முடியுமோ என்றிருந்தது. நீ காதலித்துத் தானே கல்யாணம் செய்து கொண்டாய். இப்பொழுது அந்தக் காதல் எங்கே போயிற்று என்று கேட்க வேண்டும் போல் இருந்தது. ஆனால் அவள் எதையுமே கேட்கவில்லை. பூவாய் இருந்த மனசு அதிர்ச்சியில் வாடியே போய்விட்டதுஎன்கிற உணர்வில்,.... தன்னை மாதிரியே மகளும் ஒரு சோகத்தைத் தனியாக ஆயுசு முழுவதும் சுமக்கப் போகிறாள் என்கிற உணர்வில்... திரும்பத் திரும்ப அவளால் ஒன்றுதான் சொல்ல முடிந்தது.



''நளினி நீ பொறுமையாய் இருக்கணும்.''
''மம்மி என்னாலே முடியாது. வேஷம் கூடப் போட முடியாது. நான் ஏன் வேஷமும் போடணும்? எனக்கு யோசனை பண்ற சக்தி இருக்கு. ஏன்னு கேட்க உரிமை இருக்கு. புருஷன் அநியாயமா நடந்தா கேள்வி கேட்பேன். நியாயம் கேட்பேன்.''

எரிமலையாய் வெடிக்கும் அந்தக் கோபத்தைப் பார்த்து மைதிலிக்குப் பயமாகக்கூட இருந்தது. ''உனக்கும் எனக்கும் நிறைய வித்தியாஸமிருக்கு மம்மி. உன் யுகமே வேறே. என் யுகமே வேறே. என் மனசைத் தற்கொலை பண்ணிண்டு அவனோட வாழ முடியாது.''

''அவன் மாற மாட்டானா? தான் சொன்னது தப்புன்னு மன்னிப்புக் கேட்டானா?''

''மாட்டான்.''

மைதிலிக்குச் சட்டென்று பரமேச்வரனின் நினைவு வந்தது. செத்துப் போவதற்கு முன் அவர் கண்களிலிருந்து பெருகிய நீர் ஞாபகத்துக்குவந்தது. அதைப் பற்றி நளினியிடம் சொன்னால் அவள் நம்பக்கூட மாட்டாள் என்று தோன்றிற்று.

காலம் மாறித்தான் போய்விட்டது என்று அவள் நினைத்துக் கொண்டாள். அப்பொழுதெல்லாம் எத்தனை கஷ்டப்பட்டாலும் ஏச்சுக்கள் கேட்டாலும் வீட்டை விட்டுக் கிளம்பி விடவேண்டும் என்கிற எண்ணமே ஏற்பட்டதில்லை. மனசை ஜடமாக்கிக் கொண்டால் தான் அது சாத்தியம் என்று அவள் நினைத்துக்கொண்டாள். நளினியால் அந்த மாதிரி ஒரு ஜடத் தன்மையோடு இருப்பது சாத்



BURNING PROBLEM



மலாதியான் அவசியமா?

சென்னை கார்ப்பரேஷன் மலேரியாவைப் போக்க ''மலாதியான்'' என்ற கிருமி நாசினியை அறிமுகப்படுத்தப் போகிறார்கள். இதன் பின் விளைவுகள் குறித்து அனுபவம் மிக்க டாக்டர் க. சௌரிராஜன் கூறுகிறார்:

''ஆங்கிலேயர் காலத்திலிருந்தே மலேரியா ஒழிப்புத் திட்டம் இருந்து வருகிறது. சுமார் இருபது வருடங்களாக மலேரியா இல்லாம லிருந்தது. திடீரென்று கடந்த ஒரு வருடமாக மலேரியா அதிகமாகப் பரவியுள்ளது. ஒரு வகைக் கொசு தான் மலேரியா பரவக்காரணம்.

கொசு ஒழிப்புக்குப் பலவிதமான திட்டங்களைக் கையாண்டு பலனில்லாமல் கடைசியில் இப்போது 'மலாதியான்' என்ற கிருமி நாசினியை 'டீசல்' எண்ணெயுடன் கலந்து காற்றில் தெளிக்கப் போகிறார்கள். இதனால் மலேரியா கொசு ஒழியும் என்ற நினைப்பில் உள்ளார்கள். இதைச் சுவாசிக்கும் மக்களுக்கும இந்த மருந்து பல இடையூறுகளை விளைவிக்கும் என்பது உண்மை.

ஏற்கெனவே நாம் சுவாசிக்கும் காற்றில் தொழிற்சாலையி லிருந்து வரும் வாயுப் பொருட்கள் கலந்து காற்றை அசுத்தம் ஆக்குகின்றன. மக்களது சுகாதாரத்தைக் கெடுக் கின்றன. போக்கு வரத்து அதிகமாக இருப்பதால் வாகனங் களிலிருந்து வெளிவரும் புகையாலும் காற்று விஷமாகிறது.

இந்த லட்சணத்தில் இந்த மலாதி யானும் சேர்ந்தால் பின் விளைவுகளை எண்ணிப் பார்க்கும்போது ரொம்பவும் பயமாக இருக்கிறது.

இந்த மாதிரி விஷப் பொருள்கள் காற்றில் கலப்பதால் அதைச் சுவாசிக்கும் சுவாசப்பையில் புற்று நோய் கூட வரலாம். இந்தப் பைத்தியக்கார முயற்சியில் ஈடுபடு வதைவிட நகர சுகாதாரத்தைச் சரிப்படுத்த அரசு பணத்தைச் செலவழிக்கலாம். மலாதியானை அறிமுகப்படுத்து வதற்குப் பதிலாக ஏற்கனவே உள்ள நடவடிக்கைகளைத் தீவிரமாக அமுலாக்க வேண்டும். கழிவு நீர் தேங்காமல் தடுப் பது, பாதாளச் சாக்கடை அடைபட்டுப் போகாமல், துப்புரவாக வைப்பது, குப்பை கூளங்கள் சேராமல் கவனித்துக் கொள்வது, கிணற்றில் மீன் விட்டு அவை கொசு முட்டைகளைச் சாப்பிட்டுவிடச் செய்வது, பிரிதியம் (*Pyrithrium*) எண்ணெயைச் சாக்கடையில் தெளிப்பது, ஆகியவற்றில் அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

மலாதியான் அறிமுகம் மக்களுக்கு நல்லதல்ல.

பேட்டி: ''**ஜிக்கி**''


சியமா? நளினி சொல்கிற மாதிரி அது அவனுக்கு அவசியமும் இல்லையோ?

அவள் குல்மொஹர் மரத்தை அண்ணாந்து பார்த்தாள். இப்பொழுது பூவே இல்லாமல் இலையே இல்லாமல் அது மொட்டையாக நின்றது. உன் சோகத்தை நானும் புரிந்து கொண்டேன் என்கிற மாதிரி. மாமரத்தின் அடர்ந்த கிளைகளில் பட்சிகளின் ஆரவாரம் கேட்க ஆரம்பித்து விட்டது. நல்லவேளை நாங்கள் மனிதர்களாய்ப் பிறக்கவில்லை என்று சந்தோஷப்படுகிற மாதிரி....

''ஸ்வாமிக்கு விளக்கேத்தியாச்சு'' என்று சொல்லியபடி கஸ்தூரி தோட்டப் படிக் குறட்டில் உட்கார்ந்து கொண்டாள். தனக் கும் கஸ்தூரிக்கும் இந்த சுவாமிக்கு விளக் கேற்றுவதுதான் ஒரு பெரிய ஊன்றுகோல் என்று நினைக்கையில் அவளுக்குச் சிரிப்பு வந்தது.

முதலில் கொஞ்ச நாட்களுக்கு அசோக் வருவான். சமாதானப்படுத்தி நளினியை அழைத்துச் செல்வான் என்று அவள் எதிர் பார்த்தாள். அவன் வரவேயில்லை. உண் மையிலேயே அவனுக்கு ஆணவம் ஜாஸ்தி தான் என்று தோன்றிற்று. நளினி அவனைப் பற்றி நினைக்கக் கூட மாட்டேன் என்று ஒரு பிடிவாதத்தில் இருந்தாள். இவர்களுக்கெல் லாம் பிரியம் ஏற்பட்டாலும் கட்டுப்படுத் திக்கொள்ளத் தெரியாது. கோபம் வந்தா லும் கட்டுப்படுத்திக் கொள்ளத் தெரியாது என்று மைதிலி நினைத்துக் கொண்டாள். இந்தப் பெண் தனி மரமாகத்தான் நிற்கப் போகிறாள் என்று மனசில் ஐயம் தோன்றும் போதெல்லாம் ஒரு கலவரம் மனத்தை வியாபிக்கும். இவ்வளவு சீக்கிரமாக இவ ளுடைய தாம்பத்தியம் இப்படிப் பிசுபிசுத் துப் போனதில் இவள் மனசில் வெறுப்பும் விரக்தியும் இத்தனை சின்ன வயசில் ஏற்பட்டு விடுமே என்று யோசனையாக இருக்கும். நாளா வட்டத்தில் தான் இந்த மாதிரி யெல்லாம் யோசனை செய்து ஏதும் லாப மில்லை என்று தோன்றிற்று. வயசுக்கு வந்த பெண், யோசிக்கும் திறனுடைய பெண், தானாக வாழ்க்கையில் தீர்மானங்களைச் செய் யும்போது அதன் விளைவுகளுக்கும் தயாராக இருப்பாள் என்று புரிந்தது. ஊர் உலகம் என்ன சொல்லும் என்கிற கவலையும் அவள் படமாட்டாள் என்று மைதிலி இத்தனை நாட் களில் தெரிந்து கொண்டிருந்தாள்.

ஒரு நாளைக்கு ராஜூ வெகு அக்கறையாக வந்து விசாரித்தார். ''நான் அப்பவே



பால் வளம் பெருகிட
ஐ.ஓ.பி-யின் சிறப்புத் திட்டம்

சிறு உழவர், விவசாயத் தொழிலாளர் போன்றோரின் வருமானம் அதிகரிக்கவும், கிராமப்-புறங்களில் பால் உற்பத்தி பெருகிடவும் ஐ.ஓ.பி.-யின் பால் பண்ணைத் திட்டம் உதவுகிறது.

- கலப்பின அல்லது உயர்ரக கறவை மாடுகள் வாங்கவும்
- அவற்றைச் செம்மையாகப் பராமரிக்கவும்
- உயர் இனக் கன்றுகள் வளர்க்கவும்
- கிடைக்கும் பாலை நியாய விலைக்கு விற்பனை செய்யவும் தேவையான உதவிகளைச் செய்கிறோம்.

படித்த இளைஞர்களும் பால் பண்ணைகள் அமைத்து சுய வேலை வாய்ப்பினை பெருக்கிட வழிகள் பல உண்டு.

மேலும் கோழிப் பண்ணை, ஆடு வளர்ப்பு, மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு, போன்ற பல துறைகட்கும் உதவும் சிறப்புத் திட்டங்கள் எம்மிடம் உள்ளன.


உங்களிடம் நாங்கள் வேண்டுவதெல்லாம், கடின உழைப்பு, தளராத முயற்சி, நவீன முறைகளைக் கற்றுக் கொள்ளும் ஆர்வம்.

அருகேயுள்ள எமது கிளைக்கு வருக —
வாழ்வு மலர வழிகாட்டும் அரிய பல திட்டங்களைப் பெறுக.

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்

உங்கள் வளர்ச்சிக்கோர் உத்தம நண்பன்.

IOB/90A/79 Tam



சொன்னேனே மைதிலி, தீர விசாரிச்சுக் கல்யாணத்துக்குச் சம்மதின்னு. இப்ப எப்படியாயிடுத்து பார்த்தியா? காதலாவது கல்யாணமாவது!''

''எந்த விதமான கல்யாணமானாலும் அது ஒரு லாட்டரி மாதிரின்னு சொன்னேனே நானும்? ரெண்டிலேயும் வெற்றியும் தோல்வியும் இருக்கும். மனசு ஒத்துப் போகாம இருக்கிறதுங்கறது ரெண்டிலேயும் இருக்கும்.''

''மனசு ஒத்துக்காமல் இருக்கலாம். ஆனா இப்படியா ஒரேயடியா முறிஞ்சுண்டு...!''

''ராஜு, யுகத்துக்கு யுகம் பார்வையும் கண்ணோட்டமும் மாறுகிறது. நம்ம எண்ணங்கள், பயங்கள், சந்தேகங்கள் எல்லாம் நம்ம குழந்தைகளுக்கும் இருக்கும்னு நாம ஆசைப்படறோம். அவா வித்தியாசமா நினைச்சா நமக்கு அதிர்ச்சி ஏற்படறது. குழந்தைகளுக்கு இப்பல்லாம் ரோசம் ஜாஸ்தி ராஜு.''

''ரோசக்காரர்களுக்குக் கஷ்டமும் ஜாஸ்தி.''

அவள் சோகமாய்ச் சிரித்தாள்.

''கஷ்டப்பட்டா விவேகமும் வரும்.''

ராஜு எழுந்தார்.

''என்னவோ போ. பாலம், உன்னை நினைச்சாத்தான் எனக்கு ரொம்ப வருத்தமாய் இருக்கு. உன் கஷ்டத்துக்கு முடிவேயில்லைன்னு தோன்றது.''

அவள் மறுபடியும் சிரித்தாள்.

''கஷ்டம்னு எதையுமே நான் நினைச்சாத்தானே? நான் அப்படி நினைக்கவேயில்லையே?''

அவளுடைய தோளின் மேல் ராஜுவின் கை இறங்கியது.

''நான் அன்னிக்கே சொன்னேனே, யு ஆர் எ ப்ரேவ் வுமன்.''

அவர் கிளம்பிப் போன பிறகும் தோளில் அவருடைய கையின் கதகதப்பு இருந்தது.

உனக்கு எந்த யுகத்தில் விவேகம் வரப் போகிறது என்று அவள் நினைத்துக் கொண்டாள். தன் இடத்தில் நளினி இருந்திருந்தால் ஓர் அறை விட்டிருப்பாள். தனக்கு ஏன் அவருடைய அசட்டுத்தனத்தைக் கண்டு சிரிக்கத் தோன்றுகிறது?

கொஞ்ச நாளிலேயே நளினியும் சிரிக்கக் கற்றுக் கொண்டு விடுவாள் என்று அவள் நினைத்துக் கொண்டாள். இப்பொழுது இருக்கும் ஆத்திரத்தில் படபடப்பும் கோபமும் அடங்கிக் கொஞ்ச நாளிலேயே புன்னகை பூக்க ஆரம்பிப்பாள். ஞானப் புன்னகை. என் மனத்துக்கு விழுந்த அடியும் அவமானமும் என்னைப் பாதிக்காது. என் ஆன்மாவைப் பாதிக்காது என்கிற புன்னகை. நான் பரிசுத்தமானவன் என்று நீ நம்பாவிட்டாலும் நான் நம்பினால் போதும் என்கிற புன்னகை. உயிர் போகிற தருணத்தில் நம்பாதவனின் கண்களிலிருந்து நீரை வரவழைக்கிற புன்னகை....

இருள் சரசரவென்று விழுந்திருந்தது. பட்சிகளின் ஆரவாரம் அடங்கி விட்டது. எதற்கோ சமாதானமாகி விட்ட மாதிரி.

கேட் திறக்கும் ஓசை கேட்டது. நளினி உள்ளே நுழைந்தாள். ஒரு மாதமாக டீச்சர் ட்ரெயினிங் காலேஜுக்குப் போய் வருகிறாள். நடையில் முன் மாதிரி வேகமும் துள்ளலும் இல்லை; ஒரு நிதானம் தெரிந்தது. கம்பீரமும் தெரிந்தது. அவளைப் பார்த்ததும்,

''என்ன மம்மி இருட்டிலே உட்கார்ந்திருக்கே?'' என்றாள்.

''உனக்காகக் காத்தின்டிருந்தேன்.''

நளினி அவள் இடையைச் சுற்றிக் கையால் அணைத்தபடி நடந்தாள்.

''காத்திரு. ஆனா கவலைப்படக் கூடாது; நான் இப்பல்லாம் ஜீன்ஸ் போட்டுக்கறதில்லே. லுக் அட் மீங்கற டீ ஷர்ட் போட்டுக்கறதில்லே — கவனிச்சியோ?''

மைதிலி திடுக்கிட்டு அவளை நிமிர்ந்து பார்த்தாள். அவள் எதிர்பார்த்த கண்ணீர் நளினியின் கண்களில் இல்லை. பார்வை நிர்மலமாயிருந்தது. இலேசாய்ச் சிரித்தது.

இனிமேல் இவளைத் தோழியாகத்தான் பாவிக்க வேண்டும் என்று அவளுள் பிரமை ஏற்பட்டது.

(முற்றும்)

உளங்கனிந்த நன்றி



உலகம் சுற்றிப் பார்த்து அந்நிய நாடுகளின் அழகை ரசிக்கவும் அதே சமயம் தொழில் வளர்ச்சி விஷயமாக வியாபார நுணுக்கங்களைக் கண்டறியவும் சமீபத்தில் குடும்பத்தாருடன் கோலாலம்பூர், ஹாங்காங், மணிலா, பாங்காக், சிங்கப்பூர் ஆகிய கிழக்காசிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற் கொண்ட போது எங்களை அன்புடன் வழியனுப்பி வைக்க விமான நிலையத்துக்கு வருகை தந்து வாழ்த்தி விடை கொடுத்தனர், ஏராளமான நண்பர்களும் அன்பர்களும். அதே போல சுற்றுலாவை வெற்றியுடன் முடித்துக் கொண்டு திரும்பிய போது மாலையணிவித்து மகிழ்ச்சியோடு கரவொலி எழுப்பிக் கோலாகலமாக வரவேற்றனர் நண்பர்களும் உறவினர்களும் அன்பர்களும். நாங்கள் சென்ற நாட்டிலெல்லாம் எங்களுக்கு உற்சாக வரவேற்பளித்து உபசரித்து மகிழ்ந்தனர் நம் தாயகத்தைச் சேர்ந்த சகோதரர்கள். இவர்கள் எல்லாருக்கும் எனது இதயங்கனிந்த நன்றியையும் மகிழ்ச்சியையும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

S. அப்பாசாமி

அப்பா ஸ்வாமி ரியல் எஸ்டேட் — ஸ்ரீ சக்தி ஃபைனான்ஸ் — ஸ்ரீ மீனாட்சி டிரஸ்ட் — ஸ்ரீனிவாசா ரியல் எஸ்டேட் — ரவி ஐஸ்கிரீம் பார்லர் — சப்தகிரி புக்ஷாப்

3, மங்கேஷ் தெரு, தி. நகர், சென்னை-600017

Use SRI GANESHRAM'S 777 BRAND TRIPLE SEVEN FOOD PRODUCTS · MADRAS-1 · S. INDIA

TAM-EX
SPICED
TAMARIND EXTRACT

டாம் — எக்ஸ் மசாலா சேர்ந்த புளி — சத்து

புளிக்குப் பதிலாக உபயோகிக்கலாம்

புளியினின்று எடுக்கப்பட்ட சத்துடன் பெருங்காயம், மஞ்சள், கருவேப்பிலை, கடுகு போன்ற மசாலா சாமான்களும் சேர்க்கப்பட்டுள்ளது. புளி சேர்க்கவேண்டியதில் எல்லாம் இந்த சத்தையே உபயோகித்து சாம்பார், ரசம், வத்தல் குழம்பு, மிளகு ரசம், கொத்சு, புளியோதரை, புளி இஞ்சி முதலியவற்றை விரைவில், சுலபமாகத் தயாரித்து விடலாம். மசாலா சாமான்கள் அனைத்தும் சேர்ந்துள்ளதால் வேறு எந்த சாமானும் தேவை இல்லை. அதி சிக்கனமானதும்கூட!

ஸ்ரீ கணேஷ்ராம் & கோ.,

ப. நெ. 46 — பு. நெ. 193, தம்புசெட்டி தெரு சென்னை - 600 001.

போன்: 20401 & 20402 தந்தி: "COCHUTNI" & "DHIDEEREX"

தயாரிப்பு முறையை உருவாக்கி, தர உயர்வை நிர்ணயிப்பவர்கள்:

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ் அனலிடிக்கல் லாபரெட்டரீஸ்

நிறங்களின் மனங்கள்

அரவிந்தன்



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி
ரூ 250/- மூன்றாம் பரிசுக்கதை-1

அந்தக் கடிதத்தைப் பதினொருவது தடவையாக மீண்டும் ஒருமுறை படித்தாள் கல்யாணி.

பல ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் வாஷிங்டனில் இருக்கும் தன் பெண் நித்யாவின் ஏக்கங்களும் – மாப்பிள்ளை தியாகுவின் குற்றச்சாட்டுகளும் எல்லாமே உண்மைதான் என்று அவள் மனமும் ஆமோதித்தது.

தன் கணவர் சிவராமனின் அலட்சியப் போக்கும் அவருடைய மௌனமும் அவளுக்கே எரிச்சலை ஊட்டிக் கொண்டுதான் இருந்தன.

''நமக்கு இல்லாத பணமா? அதுவும் நாம் என்ன நாலைந்தா பெற்று வைத்துக் கொண்டு இருக்கிறோம்? நமக்கு இருப்பதோ ஒரே பெண். அவளும் தன் பிள்ளைக்குப் பூநூல் போடணும்னு லெட்டர் போட்டு நாலு மாசம் ஆச்சு. மூணு லெட்டரைத் திரும்பத் திரும்பக் கேட்டுண்டே இருக்காள். இப்படி ஒரு பதிலையும் சொல்லாம இடிச்ச புளி மாதிரி இருந்தா என்ன அர்த்தம்?'' என்று கல்யாணியும் சிவராமனிடம் கேட்டுக் கேட்டு அலுத்துப் போய்விட்டாள்.

சிவராமன் வாயே திறக்க மாட்டார். அவர் பார்வை கல்யாணியை ஊடுருவும்! அவள் அறியாமையை எண்ணி அவளைக் கேலி செய்கிற மாதிரியும் இல்லாமல் —அவளுக்காக அனுதாபப்படுகிற மாதிரியும் இல்லாமல் சிவராமனின் இதழ்க்கடையில் ஒரு சிரிப்புத் தோன்றும்.

இதன் அர்த்தம் என்ன என்று கல்யாணிக்குப் புரிந்ததே இல்லை இன்று வரை!

இந்த விஷயத்தில் சிவராமனின் போக்கு அவளுக்கும் மிக ஆச்சரியமாகவே இருந்தது. இப்போது மட்டும்தான் என்று இல்லை, நித்யாவின் கல்யாணம் முடிந்து அவள் தியாகுவுடன் வாஷிங்டன் கிளம்பிச் சென்றதில் இருந்தே சிவராமன் படிப்படியாகத் தன் பாசத்தைக் குறைத்துக் கொண்டே வந்திருப்பதாகக் கல்யாணிக்குத் தோன்றியது.

இதற்கும் காரணம் இல்லாமல் போகவில்லை.

சிவராமன் இந்தக் கல்யாணத்துக்கே அரை மனதோடுதான் சம்மதித்தார். பெண்ணுக்குப் பெண்ணாய்—கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்த ஒரே செல்லப் பெண்ணை, கண்காணாத சீமையில் கல்யாணம் பண்ணிக் கொடுப்பதில் அவருக்குக் கொஞ்சமும் இஷ்டமிருக்கவில்லை.

அதே சமயம் கல்யாணியின் பிடிவாதத்துக்கு முன்னாலும் அவரால் எதுவும் செய்து விட முடியாது. இது அவருக்கும் நன்றாகவே தெரியும். மௌனமாக ஒதுங்கி விட்டார். ஒரு மூன்றாம் மனிதனைப் போல் நடப்பவைகளை வேடிக்கை பார்த்தார்.

அவருக்கும் சேர்த்து உற்சாகமும் பெருமையுமாய்க் கல்யாணி அந்தக் கல்யாணத்தில் பம்பரமாய்ச் சுழன்றாள்.

கல்யாணம் முடிந்து நித்யா தியாகுவுடன் மேல் நாடு கிளம்பிச் சென்றதில் இருந்து, சிவராமனின் மனத்தில் தாயைப் பிரிந்த பிள்ளையின் ஏக்கமாய் ஓர் ஊமைச் சோகம் நிரந்தரமாகப் படிந்து விட்டது.

ஆனால்—

கல்யாணி மிகவும் பெருமையோடு அக்கம் பக்கத்துக்காரர்களிடம் நிறையவே பேசினாள்; ஆள்கூட ஒரு சற்றுப் பருத்துப் போயிருந்தாள். நித்யாவிடமிருந்து வந்த லெட்டர்களை அவர்களிடம் காட்டி ''வீட்டைப் பெருக்க மிஷினாம். பாத்திரம் அலம்ப மிஷினாம். படம் தெரியற ரேடியோவாம். கலர்ப் படமா வேறே தெரியறதாம். மாப்பிள்ளை புதுசாக் கார் வாங்கியிருக்காராம். அங்கே இப்போ எல்லாம் அசாத்திய பனியாம். இதோ – நித்யா அந்தப் பனியிலே நனைஞ்சுண்டு நிக்கிற போட்டோ. மாப்பிள்ளையே எடுத்தாராம்'' – என்றெல்லாம் வாய் ஓயாமல் பெருமைப்பட்டுக் கொண்டே இருந்தாள்.

ஆரம்ப நாட்களில் சிவராமனின் மனத்தில் தங்கள் பெண்ணை விட்டு நீண்ட தூரம் பிரிந்து இருக்கிற வேதனை மட்டுமே இருந்தது.

இந்த வேதனைக்கு அவசியம் இல்லாதபடி அவர்கள் வருஷம் ஒருமுறை வந்தார்கள். ஒரு மாதத்துக்குக் குறையாமல் தங்கினார்கள். மீண்டும் பதினொரு மாதங்கள் பொறுத்திருந்தால் அடுத்த முறை அவர்கள் வந்துவிடுவார்கள் என்கிற அளவுக்கு அவர்கள் பிரிவு அதிக துயரமில்லாமல் ஆயிற்று.

ஆகவே இப்போது எல்லாம் அவர் இந்தப் பிரிவை நினைத்து ஏங்குவதை விட்டுவிட்டார்;

அதை விட ஆழமாகவும் அதை விட அதிக மாகவும் பல விஷயங்கள் அவர் மனத்துக்குள் நுழைந்து அவரை வருத்தப்படச் செய்கின்றன. அவைகளை அவர் யாரோடும் பகிர்ந்து கொள்ள முடியாமல் அந்தரங்கமாகவே வேதனைப்படுவதுதான் இப்போது நடந்து கொண்டிருந்தது. அதனாலேயே அவர் பெரும்பாலும் மௌனமாகவே இருப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார்.

வந்துவிட்டுப் போன இரண்டு மூன்று முறைகளில் அவர்கள் மன நிலைகளிலும், வாழ்க்கை அமைப்பிலும் தங்கள் இயல்பை விட்டு வெகு தூரம் அந்நியத்தனம் கலந்திருப்பதை அவர் கவனித்தார்.

நித்யா — நியாகுவைப் போலவே பேண்ட்: ஷர்ட் என்று அணிந்து கொண்டாள். அதுவே சௌகரியமாக இருப்பதாகச் சொன்னாள்.

அவர்களின் நடை உடை பாவனைகள் எல்லாவற்றிலுமே மேல்நாட்டின் சாயல்!

சிவராமனுக்கு இவை யெல்லாம் அந்தரங்க வேதனையாக இருந்தன.

சில நிலைகளில் இந்த மாற்றம் தவிர்க்க முடியாதது என்றும் இதற்காக வருந்துவது பேதமை என்றும் அவர் அறிவார்.

அவர் வேதம் படித்தவர்.

தம் அளவில் மிகவும் உத்தமமான மனிதராக இருப்பவர். தம்முடைய ஆசாரங்கள் மற்றவர்களுக்கு ஒரு சுமையாகிவிடக் கூடாது என்பதற்காக மௌனமாகவே தம் அதிர்ச்சியைத் தாங்கிக் கொண்டார்.

அந்த ஊரையும் அக்கிரகாரத் தெருவையும் சேரியிலேயும் தவிர வேறு எதுவுமே தெரியாமல் வளர்ந்த கல்யாணி கூட இவைகளைச் சம்மதித்து — அனுசரித்துப் போகி



ருளே! அதுமட்டுமல்லாமல், இதற்காகப் பரிந்து வேறு பேசுகிருளே! என்று நினைத்த போது மவுத்தனவில் தான் மட்டும் இவர்களிடமிருந்து தனித்து ஒரு 'தீவு' போல் விலகி நிற்கிற உணர்வே மிஞ்சியது சிவராமனின் மனத்தில்!

கல்யாணியைப் போல் தானும் விட்டுக் கொடுத்து அனுசரித்துப் போவது முடியாத காரியம் என்று சிவராமன் தீர்மானமாக உணர்ந்து கொண்டார்!

இந்த நிலையில் மௌனமாக ஒதுங்கி விடுவதே அவரால் செய்யக் கூடியதாக இருந்தது.

சிவராமன் ஒதுங்கி விட்டார்.

நித்யா — தியாகுவின் பிள்ளை ரமேஷ் கூட வாஷிங்டனில்தான் பிறந்தான்.

அதன் பிறகுதான் சிவராமனின் மௌனமும், அவர் விலகி இருக்கும் போக்கும் கல்யாணிக்கு நன்ருகப் புரியத் தொடங்கின.

ரமேஷுக்கு இரண்டு வயது முடிந்தபோது இந்தியா வந்திருந்த தியாகுவும் நித்யாவும் அவனுக்குக் குருவாயூரில் 'அன்னப் பிராசனம்' செய்ய வேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டார்கள். உண்மையில் அதற்கு முன்பே அவன் சாப்பிடத் துவங்கியிருந்தான். ஒரு சம்பிரதாயத்துக்காகக் குருவாயூர் போய் வரவேண்டும் என்று அவர்கள் சொன்ன சமாதானங்கள் சிவராமனுக்குச் சம்மதமாக இருக்கவில்லை.

நித்யாவும் — தியாகுவும் கல்யாணியும் பெரிய விழாவுக்கான ஏற்பாடுகளைப் போல ஓடியாடிச் செய்தபோது சிவராமன் மட்டும் ஒதுங்கியே இருந்தார்! கடைசியில் அவர்கள் கிளம்பும் போது அறுவடையைக் காரணம் காட்டி அவர்களோடு குருவாயூர் போகாமல் ஒதுங்கிக் கொண்டார்!

அதையே கல்யாணி இன்னும் கூடச் சொல்லிக் காட்டிக் கொண்டிருக்கிருள்!

இப்போது இந்தப் பூநூல் பிரச்னை வேறு வந்து விட்டது!

திரும்பத் திரும்ப நித்யாவின் லெட்டரைப் படித்துப் பெருமூச்சு விடவும் — மீண்டும் மீண்டும் சிவராமனைத் துளைப்பதிலுமே கல்யாணியின் பெரும் பொழுது ஓடிக்கொண்டிருந்தது!

சர்வர் சாப்பிடுபவரிடம் :- சாப்பாட்டிலிருந்து கல் எடுத்துப் போட்டீங்களு ஓரமா போடுங்க சார். இப்படி நடக்கிற வழியிலே போட்டீங்களு யாராவது தடுக்கி விழப் போருங்க.

ஆர். கோபாலகிருஷ்ணன்



சிவராமன் அவனுக்கு ஒரு பதிலையும் சொல்லவில்லை.

அவர் வழக்கம் போலவே இருந்தார்.

விடியற்காலை குளிரில் ஓடும் வாய்க்காலில் மூழ்கிக் குளித்தார். விபூதி மணக்கச் சந்தி பண்ணினுர். கோவில் பிராகாரத்தில் ஈரத் துண்டுடன் நின்று காற்றில் வேஷ்டியை உலர்த்திக் கொண்டே சுலோகங்களை ஆத்மார்த்தமாக ஜெபித்தார்—வயலிலும் விவசாயத்திலும் பெரும் பொழுதையும் கழித்தார்.

அக்கிரகாரத் தெருவின் மூலையில் வேத பாடசாலை நடந்து கொண்டிருந்தது. நீண்ட நாட்களாக மூடி கிடந்த பாடசாலை இப்போது பெரியவரின் விடாமுயற்சியால் மிகவும் நேர்த்தியாக நடக்க ஆரம்பித்திருந்தது. பத்துப் பன்னிரண்டு வயதினராய் இருபது மாணவர்கள், அடங்கிய குரலில் வேதம் சொல்வது அபூர்வ அநுபவமாய் இருந்தது.

சிவராமன் நேரம் கிடைக்கும்போது எல்லாம் தானும் ஒரு மாணவனைப் பாடசாலைக்குப் போனுர்.

ஸ்லோகங்கள்— அதன் அர்த்தங்கள் என்று கனபாடிகள் சொல்லச் சொல்லச் சிவராமனின் உடம்பே புல்லரித்து மகிழ்ந்தது.

இது எல்லாம் போதாது என்று—

கடந்த ஒரு வாரமாய் ஐந்து பேர் கொண்ட அமெரிக்க மாணவர் கோஷ்டி ஒன்றும் வேத பாடசாலை மாணவர்களுக்குச் சமமாய் அவர்களைப் போலவே உடுத்திக் கொண்டு— அதிகாலையில் ஓடும் வாய்க்கால் நீரில் குளித்து அவர்களோடு தானும் கனபாடிகளிடம் வேதம் கேட்க ஆரம்பித்திருந்தது.

அவர்கள் பார்வையிலிருந்த ஆழமும் வேதம் பயில்வதில் அவர்களுக்கு இருந்த ஆர்வமும் அதற்காக அவர்கள் தங்களை மாற்றிக்கொண்ட தீவிரமும் சிவராமனுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

அவர்களின் உண்மையான ஆர்வத்தை அவர் மிகவும் மதித்தார்.

தினசரி வயல் வேலை முடிந்ததும் வேத பாடசாலைக்கு வந்து பாடம் கேட்பது சிவராமனுக்கு மிகவும் பிடித்தமானதாக இருந்தது. அவர்கள் நிறையச் சந்தேகங்களைக் கேட்டார்கள். கனபாடிகள் சொன்ன பதில்களைக் குறித்து அவர்களுக்குள் விவாதம் செய்தார்கள். இதை யெல்லாம் பார்க்கப் பார்க்க அவருக்கு மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவும் இருந்தது.

அன்றும் அவர் பாடசாலையிலேயேதான் இருந்தார்.

பக்கத்து வீட்டுச் சிறுவன் ஒருவன் ஓடி வந்து, ''மாமா உங்க பொண்ணும் மாப்பிள்ளையும் வந்திருக்காளாம். மாமி உங்களைக் கூட்டிண்டு வரச் சொன்னு!'' என்று அவரிடம் சொல்லிவிட்டு ஓடினுன்.

சிவராமன் வீட்டுக்குப் புறப்பட்டார்.

வீட்டில் — வழக்கம் போல நித்யா ஓடி வந்து வாசலிலேயே அவரை வரவேற்கவில்லை. மாப்பிள்ளை தியாகு முன் அறையில் பேப்பர் படித்துக் கொண்டு இருந்தான். அவனும் வழக்கம் போல உற்சாகமாக அவரை வரவேற்கவில்லை. சிவராமன் மௌனமாகவே உள்ளே நுழைந்தார். தியாகு

படித்துக் கொண்டிருந்த பேப்பரை லேசாக மடக்கி, ''சௌக்கியமா?'' என்று சம்பிரதாயமாகக் கேட்டுவிட்டுப் பழையபடி பேப்பரிலேயே முகத்தைப் பதித்துக் கொண்டான்.

சிவராமன் தமக்குள் சிரித்துக் கொண்டார்.

இரவு சாப்பிடும்போது — கல்யாணியும் கூட முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு தான் பரிமாறினாள்.

சிவராமன் தலை குனிந்தபடியே சாப்பிட்டார்.

ரமேஷ் வாசலில் செல் போர்டின் முன்னால் தீவிர சிந்தையுடன் குனிந்து உட்கார்ந்திருந்தான்.

''நன்றாகத்தான் வளர்ந்திருக்கிறான்!'' — சிவராமன் தமக்குள்ளாகச் சொல்லிக் கொண்டார்.

ஊரில் அவன் வயதுடைய மற்ற இளைஞர்களைவிட அவன் உயரமாகவும் புஷ்டியாகவும் இருப்பதாக அவருக்குப் பட்டது. நல்ல சிவப்பு. ரத்தச் சிவப்பில் உதடுகள். லேசாகச் செம்மை படர்ந்த தலைமுடி. பழுப்பு விழிகள்! ஏறக்குறைய ஒரு வெள்ளைக்காரச் சிறுவனைப் பார்க்கிற மாதிரியே இருந்தது.

நித்யாவிடமும் தியாகுவிடமும் பேசும் போது ஆங்கிலத்திலேயே பேசினான்.

கல்யாணி அவன் பேசப் பேசத் திறந்த வாய் மூடாமல், ''எவ்வளவு அறிவு என் பேரனுக்கு'' என்று மகிழ்ச்சியால் பூரித்துப் போனாள்!

நித்யா அவனுக்குத் தமிழ் பேச வரவில்லை என்பதை ஒரு குறை போலச் சொல்லிப் பெருமைப்பட்டாள்!

வழக்கம்போலச் சிவராமன் வாசல் திண்ணையில் சாய்ந்து கொண்டிருந்தார். அவர்கள் எல்லோரும் சொல்லி வைத்தாற் போல் தன்னை ஒதுக்குகிற மாதிரி அவருக்குத் தோன்றியது.

ஒரு வாரமாகக் கல்யாணியை அழைத்துக்கொண்டு அவர்கள் கடை வீதிக்கும் பக்கத்தில் இருந்த டவுனுக்கும் என்று அலைந்து கொண்டு இருப்பதை மௌனமாகவே பார்த்துக் கொண்டிருந்தார் சிவராமன்.

தன்னை ஒதுக்கிவிட்டு ரமேஷுக்குப் பூநூல் போடுகிற வேலையில் அதன் தொடர்பான ஆலோசனைகளில் ஈடுபடுவதாக அவருக்கும் தெளிவாகவே புரிந்தது.

இதுவும் எவ்வளவு தூரம் போகிறது என்று பார்க்க விரும்பிய சிவராமன் அங்கே நடப்பதை ஒரு வேடிக்கையாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர்கள் தம்மோடு நேரில் மோதக் கூடிய ஒரு சந்தர்ப்பத்துக்காக அவர் காத்திருந்தார்.

அந்த நாளும் வந்தது.

வாசலில் கார் வந்து நிற்கிறது. பற்றாததற்கு ஒரு டாக்ஸியும் இருக்கிறது. மூட்டை முடிச்சுகள்! பட்சணங்கள்! படுக்கைகள்! ஒரு கல்யாணத்துக்குப் புறப்படுகிற மாதிரி பெரிய ஏற்பாடுகள்!



நித்யாவும் தியாகுவும் அவர்கள் அறையில் ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

ஊஞ்சல் பலகை லேசாக ஆடிக் கொண்டு இருக்க— சிவராமன் அங்கே நடக்கிறவற்றை அமைதியாகப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்.

''ம்....ம்... கிளம்புங்கோ. இப்படியே எவ்வளவு நேரம்தான் உட்கார்ந்திண்டே இருப்பேளா?''

''எங்கேடி கிளம்பச் சொல்றே?'' — சிவராமனின் குரலில் கேலி துள்ளியது.

''உங்களுக்கு எதுவுமே தெரியாது இல்லையா? நாலு மாசமாய்க் குழந்தை லெட்டர் மேலே லெட்டர் போட்டான். ஒரு பதில் எழுதிப் போடத்தான் மனசு வரலை. இப்போ அவாளே எல்லா ஏற்பாட்டையும் செஞ்சாச்சு. நாம பெரியவான்னு இருக்கோம். இல்லையா? போய்ப் பேரனை ஆசீர்வாதமாவது செய்யலாமோன்னோ? 'அதுகூட எதுக்குன்னு' உட்கார்ந்துண்டே இருக்கப் போறேளா?''

முகத்தில் கோபம் துள்ளப் 'படபட'வென்று பொரிந்து தள்ளிவிட்டுக் கல்யாணி அவர் பதிலுக்குக் காத்திராமல் உள்ளே ஓடினாள்.

அவளுக்குப் பதில் சொல்லச் சிவராமன் வாயைத் திறந்தார்.

மாப்பிள்ளை தியாகு அவர் எதிரில் வந்து நின்று கொண்டிருந்தான். அவன் பின்னால் நித்யாவும் வந்து நின்றாள். கடைசியில் கல்யாணியும் வந்து நின்று கொண்டாள்.

சிவராமன் மௌனமாகத் தம்மைச் சுற்றி நின்றிருந்தவர்களை ஒருமுறை பார்த்தார். அவர்கள் எல்லோருடைய முகத்திலும் தம் மீது உள்ள கோபம் தெரிவதாக அவருக்குத் தோன்றியது.

''நீங்கள் செய்யறது உங்களுக்கே நன்றா இருந்தாச் சரிதான். ரமேஷுக்குப் பூநூல் போடணும்னு எவ்வளவோ தடவை எழுதினோம். பதிலே போடலை நீங்க. ரொம்பச் செலவாகும்னு பயந்துட்டேளோன்னு நாங்களே எல்லா ஏற்பாட்டையும் பண்ணியாச்சு. கிளம்புங்கோ.''

தியாகுவின் குரலில் பொங்கிய கோபம் சிவராமனை ஒரு கணம் திகைப்படையச் செய்தது. ஒரு கணம்தான். உடனே சமாளித்துக் கொண்டு சிரித்தார்.

''இப்படிச் சிரிச்சா என்ன அர்த்தம்?''



''குழந்தைக்கு என்ன பேர் வைக்கலாம்?''
''லரிலை பாப்பா.''

நித்யாவும் கோபத்தோடு பேசினாள்.

''நான் வரலேன்னு அர்த்தம்!'' சிவராமன் அமைதியாகச் சொன்னார்.

''ஏன்?'' மூவரும் ஏககாலத்தில் கேட்டார்கள்.

''இங்கே எனக்கு நிறைய வேலே இருக்கு!''

''போய்!'' — தியாகுவின் குரல் கோபத்தில் வெடித்தது. ''உங்களுக்கு எங்களைப் பிடிக்கலே. எங்களோடு வர இஷ்டம் இல்லே. உங்களுக்குப் பிடிக்கா விட்டால் இனிமேல் நாங்கள் இங்கே வருவதையும் நிறுத்திக் கொள்கிறோம்.''

சிவராமன் 'சட்'டென்று தலே நிமிர்ந்து பார்த்தார். இனியும் தம் எண்ணங்களை மனத்துக்குள் போட்டுக் கொண்டிருக்க அவரால் முடியவில்லே. மெல்லிய குரலில்— ஆனால் உறுதியாகப் பேசினார்.

''புடிக்கலேங்கறது உண்மைதான். உங்களேயோ நித்யாவையோ — குழந்தையையோ இல்லே. கல்யாணி உட்பட நீங்கள் எடுத்துக் போத்திக்க நினைக்கிற போலியான இந்த வேஷங்களைத்தான் நான் வெறுக்கிறேன். கல்யாணி — உனக்கு உன் பெண்ணும் மாப்பிள்ளையும் மேல் நாட்டில் இருக்கிற சந்தோஷம் போதும். அதுக்காக எதையும் சகிச்சுப்பே! என்னால் முடியாது. மாப்பிள்ளே! உங்களே நான் குறை சொல்றேன்னு நினைக்கக் கூடாது. நீங்கள் இப்போ எந்த வாஷிங்டனிலிருந்து நாகரிகம் என்கிற பேரால இதையெல்லாம் கத்துண்டு வந்தேளோ அதே வாஷிங்டனிலிருந்து இங்கே வந்தவர்கள் — இந்த மண்ணைப் படிக்க ஆசைப்படறான்! இங்கே இருக்கிற மாதிரி வாழ ஆசைப்படறான்; நம்பளை மாதிரி புடவை கட்டிக்க, கோலம் போட, நம்ப சங்கீதம், நம்ப நாட்டியம், நம்ப வேதம் — இப்படி நம்மோட எல்லாத்தையுமே படிக்க வராங்க! இங்கே இருந்து போன உங்களாலே இங்கே இருந்த மாதிரியே வாழ முடியாதா என்ன? முடியும்! ஆனால் நீங்களே அதை விரும்பல்லே! அந்தப் போலி நாகரிகங்களை நீங்களே விரும்பி ஏத்துண்டேள்.

''பிறகு இங்கே இருக்கிற மாதிரி பாவனைகள் எதற்காக? உங்கள் பிள்ளைக்குப் பூநூல் போட்டு என்ன செய்யப் போகிறீர்கள்? அது வெறும் அடையாளமா? சம்பிரதாயமா? அதைப் போட்டு விடுவதால் உங்கள் கடமை தீர்ந்து விடும் என்பதற்காகப் போடுகிறீர்கள். அப்படித்தானே?

''நான் இந்தப் போலித்தனத்தைத்தான் வெறுக்கிறேன்.

''உண்மையில் நீங்கள் அவனுக்குப் பூநூல் போட நினைத்தால் முதலில் நீங்கள் அதன் கர்மாக்களைச் செய்ய வேண்டும். உங்களைப் பார்த்து அவன் செய்ய வேண்டும். நீங்களே அதை மதிக்காவிட்டால் ரமேஷ் அதை மதிப்பான் என்று எப்படி நம்புவது? அப்படி மதிக்க வேண்டாம் என்றால் இப்படி ஒரு சம்பிரதாயம் எதற்காக?''

சிவராமன் பேச்சை முடித்து விட்டுத் தம்மைச் சுற்றி இருந்தவர்களை மௌனமாகவே ஊடுருவிப் பார்த்தார். எல்லோர் மனத்திலும் அவருடைய நியாயங்கள் புரிந்தன. மூவரும் ஏதோ குற்றவாளிகளைப் போல அவர் முன் நிற்கவே கூச்சப்பட்டு ஒதுங்கி நின்றார்கள்.

தியாகு படித்தவன். விரைவில் சிவராமனின் எண்ணங்களை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. அவர் நியாயங்கள் அவனை ஒரு கணத்தில் புரட்டிப் போட்டு விட்டன.

இந்தக் கிராமத்து மனிதரின் மனத்தில் இவ்வளவு ஆழமான ஏக்கங்கள் இருக்கக் கூடும் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லே.

யாரும் எதிர்பார்க்காத நிலேயில் — 'சட்'டென்று சாஷ்டாங்கமாக விழுந்து அவரை நமஸ்கரித்தான் தியாகு. ''எங்களை மன்னிக்கணும். உங்கள் உள் மனம் புரியாமல் உங்களைத் தப்பா நினேச்சோம். ரமேஷுக்குப் பூநூல் ஒரு சம்பிரதாயமாகப் போட மாட்டேன். அவன் அந்தச் சத்தியத்தைப் பரிபூரணமாகக் கடைப்பிடிக்கச் செய்வேன். நானும் இந்தப் போலியான நாகரிகத்திலே இருந்து விடுபடுவேன்'' என்றான்.

அவன் சொன்னதை நிரூபிக்கிற மாதிரி—

திருப்பதியில் ரமேஷுக்குப் பூநூல் முடிந்து கிராமம் திரும்பி அங்கே சிவராமன் தம் பேரனுக்கு மந்திரங்களைச் சொல்லிக் கொடுத்தபோது தாமும் பக்கத்திலேயே இருந்து அவைகளை ரமேஷுடன் தானும் கற்றுக் கொண்டான் தியாகு.

சிவராமனின் நெஞ்சில் இருந்த பெரிய பாரம் இறங்கிய நிம்மதியில் — இம்முறை அவர்கள் வாஷிங்டன் கிளம்பியபோது, அவரே சென்னை வரை போய் அவர்களை வழி அனுப்பி வைத்து விட்டுத் திரும்பினார்.

இப்போதெல்லாம் நித்யாவிடம் இருந்து வரும் லெட்டர்களுக்குச் சிவராமன் உடனுக்குடன் பதில் எழுதுகிறார்.

ஒவ்வொரு கடிதத்தின் முடிவிலும் மறக்காமல் ''இப்படிக்கு உன் அப்பா சிவராமன்'' என்று கையெழுத்தும் போடுகிறார்!

வாசகர்களுக்கு அதிர்ஷ்டப் பரிசுத் திட்டம்

இந்தப் பக்கத்தில் ஒரு ஜோடி விழிகளையும் ஒரு கவிதையையும் காண்கிறீர்கள்.

இதே போன்று சென்ற மூன்று வாரங்களாகப் பார்த்தீர்கள். மேலும் அடுத்த இரு வாரங்களுக்கு ஒரு ஜதை விழிகளையும் ஒரு கவிதையையும் பிரசுரிக்கவிருக்கிறோம். ஒவ்வொரு வாரமும் வெவ்வேறு நட்சத்திரத்தின் கண்கள்; வெவ்வேறு கவிஞருடைய கவிதை.

ஆனால் ஒவ்வொரு வாரமும் விழிகளும் கவிதைகளும் பொருத்தம் பார்த்துப் பிரசுரிக்கப்படவில்லை. மாறிப் போயிருக்கின்றன.

ஆறு ஜோடி விழிகளையும் ஆறு கவிதைகளையும் கவனித்து யோசித்துப் பொருத்தம் பார்த்து நீங்கள் இணை சேர்க்க வேண்டும். ஆறாவது வாரத்தில் —செப்டம்பர் 9-ந் தேதி இதழில்— இடம்பெறவிருக்கும் கூப்பனில் உங்கள் முடிவை, கவிஞர் பெயரையும் எதிரே நட்சத்திரத்தின் பெயரையும் எழுதுவதன் மூலம் தெரியப்படுத்த வேண்டும். தனித் தாளில் எழுதி அனுப்பப்படும் விடைகள் நிராகரிக்கப்படும்.

ரயில் ராதிகா இந்த ஆறு கவிதைகளையும் ஆறு ஜதைக் கண்களையும் பொருத்தம் பார்த்து இணை சேர்த்து எங்களிடம் ஒரு விடை தந்திருக்கிறார். அந்த விடை எந்த வாசகருடைய விடையுடன் ஒத்துப் போகிறதோ அவருக்கே முதல் பரிசு. இரண்டாவது மூன்றாவது பரிசுகளும் ஆறுதல் பரிசுகளும் உண்டு.

பரிசு விவரம்

முதல் பரிசு: பிரஸ்டீஜ் பிரஷர் குக்கர்
2-ம் பரிசு: வி.ஐ.பி. பிரீஃப் கேஸ்
3-ம் பரிசு: அலாரம் கடிகாரம்
ஆறுதல் பரிசுகளாக 200 கல்கி தீபாவளி மலர்கள்.

ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் வந்தால் பரிசுப் பொருள்களின் மதிப்பைக் கணக்கிட்டு அத்தொகை பகிர்ந்தளிக்கப்படும்.

200க்கு அதிகமான ஆறுதல் பரிசுகள் தரவேண்டிய நிலை ஏற்பட்டால் சீட்டுக் குலுக்கல் முறையில் 200 பேர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

முடிவு தேதி செப்டம்பர் 15

உறையின் மேல் 'அதிர்ஷ்டப் பரிசுத் திட்டம்' என்று குறிப்பிட்டு, ஆசிரியர் கல்கி சென்னை-32 என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

வேறு கடிதப் போக்குவரத்துக் கிடையாது.

சந்தேகம் எழும் விஷயங்களில் ஆசிரியரின் தீர்மானமே முடிவானது.

ஸ்ரீப்ரியா



இந்த வாரக் கண்கள்:



இந்த வாரக் கவிதை:

கண் பாற்கடல் மிதக்கும் கரும்
பாவைத் தோணி மிசைப்
பெண் பாக்கியக் கரையைப்
பிடிக்க விழைந்தாயே

—ச. து. சு. யோகியார்




In fond and affectionate memory of

Smt. RENGAMONY

Born: 25-3-1925 Died: 29-8-1972

Beloved wife of S. Padmanabhan Affectionate mother of Jana and Kanna, mother-in-law of J. Gopalan & Malathy, Grandmother of Sandhya & Srinivas



ராஜாஜி வாழ்க்கை வரலாறு

ராஜ்மோகன் காந்தி



தஞ்சாவூரில் மதுக் கடைகள், அயல் நாட்டுத் துணிக் கடைகள் ஆகியவற்றின் முன் மறியல் செய்தவர்கள் கடையிலிருந்து நூறு கெஜம் அல்லது நூற்றி ஐம்பது கெஜம் தள்ளி நிற்க வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்த இடைவெளி அளவுக்கதிகமானது, நியாயமற்றது என்று வி. ஆர். வாதம் புரிந்தபோது, தஞ்சைக் கலெக்டர் அந்த ஆணையை அமுல்படுத்தாமலிருந்து விடுவதாக ஒப்புக் கொண்டார்.

உப்பு விஷயத்திலும் வி. ஆர். சலுகைகள் பெற்றார்: வண்டியில் அல்லாது, தலைச் சுமையாக எடுத்துச் செல்லப்படும் வரை கிராமவாசிகள் எங்கிருந்து வேணுமானாலும் வந்து உப்பளத்தில் உப்பெடுத்துப் போகலாம். அவர்கள் குறிப்பிட்ட எல்லைக்குள் வசிப்பவர்களாக இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு கிடையாது. அரசுக்குச் சொந்தமான, பயனற்றுக் கிடக்கிற கடற்கரைப் பிரதேசங்களிலும் உப்பைத் தயாரிக்கவோ சேகரிக்கவோ அனுமதி உண்டு.

இதையெல்லாம் பார்த்தபோது, 'ஆட்சியில் காங்கிரஸுக்கும் பங்கு இருக்கிறதோ' என்று தோன்றியது. 'ஒரு வேளை ஆட்சி அதிகார மாற்றத்துக்கு இது முன்னோடியோ?' இத்தகைய எதிர்பார்ப்புக்களை வி. ஆர். வளர்த்துக்கொண்ட கணங்களும் உண்டு. ஆனால் எல்லாம் மாயை என்பது சீக்கிரமே நிரூபணமாயிற்று.

உண்மையில், அரசின் ஒரு செல்வாக்கு மிக்க பகுதியினரே ஒப்பந்தத்தை வெறுத்தனர். அதை ஒரு மாபெரும் தவறு என்று கருதினர். இர்வினை அடுத்து வந்த வைஸ்ராய் வில்லிங்டன் பிரபு அவர்களுடைய கருத்தையே பிரதிபலிப்பதாகத் தோன்றியது. இதனால் தைரியமடைந்த அதிகாரிகள் பலர் ஒப்பந்தத்தின் ஜீவனைக் கொன்று பிரிட்டிஷ் ஆட்சியை மீட்க முயன்றார்கள்.

ஏ. ஆர். காக்ஸ் என்ற பெயருடைய சென்னை கலெக்டர் மறியலை எதிர்த்தார். அவருடன் வாதம் புரிந்த வி. ஆர். கூறினார்:

"ஏ. ஆர். காக்ஸ் இந்தியாவின் வைஸ்ராயாக இருந்திருந்தால் அவர் மறியலுக்கு அனுமதி அளிக்கும் காந்தி – இர்வின் ஒப்பந்தத்தில் ஒரு நாளும் கையெழுத்துப் போட்டிருக்க மாட்டார். மறியல் மிகவும் அமைதியாக நடக்கும் என்ற உத்தரவாதம் கூட அவரிடம் பிரயோஜனப் பட்டிராது. ஆனால் காக்ஸ் வைஸ்ராய் அல்ல. கலெக்டர்தான். கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய பொறுப்புள்ள அதிகாரி."

வி. ஆருக்கும் பிரதம காரியதரிசி காட்டனுக்கும் இடையில் உருவாகி வந்த நல்லுறவும் காட்டன் கடமையாற்றுகையிலேயே காலமானபோது முற்றுப் பெற்று விட்டது. காட்டனுக்குப் பிறகு அப்பதவிக்கு வந்தவர் தம்மை மட்டம் தட்டத் தீர்மானித்திருப்பதாக வி. ஆர். உணர்ந்தார். காங்கிரஸ் சார்பான எல்லா மனுக்களையும் மாகாண மாஜிஸ்திரேட்டுகளிடம் தள்ளி விடுவதிலேயே அவர் கண்ணாக இருப்பதாகவும் வி. ஆருக்குத் தோன்றியது.

சென்னை உற்பத்தி வரி அதிகாரி, 'மதுக் கடைகள் முன் வற்புறுத்தலற்ற மறியலை இந்த ஒப்பந்தம் அனுமதித்த போதிலும் அரசு கள்ளுக் கடைகளை ஏலம் விடும்போது மறியல் செய்வதை ஒப்பந்தம் உள்ளடக்கியதாகாது' என்றார்.

இப்படி அர்த்தம் கற்பிப்பது தவறு என வி. ஆர். சவால் விட்டார். இந்தியாவிலிருந்து அரசு பின்வாங்குவதற்கு முன் இதனை எதிர்க்குமாறு மக்களைக் கேட்டுக்

கொண்டார். 'இம்மாதிரி ஏலங்களை மறியல் செய்வது மக்களின் சட்டபூர்வமான உள்ளடங்கிய உரிமைகளுள் ஒன்று' எனத் தீர்மானமாகக் கூறினார். மேலும் அவர், ''டில்லி ஒப்பந்தமானது சுதந்திரங்களைக் கட்டுப்படுத்த ஏற்பட்டதல்ல, விரிவாக்க உருவானதே'' என்று வாதிட்டார்.

ஒப்பந்தம் இரு தரப்பிலும் சரியாக அமல்படுத்தப்பட வேண்டும் என்பதில் காந்தி, முன் எப்போதையும் விட உண்மையான விசுவாசத்துடன் இருப்பதாக டில்லியில் உள்நாட்டுக் காரியதரிசியாக இருந்த எச். டபிள்யு. எமெர்ஸன் குறிப்பிட்டார். காந்தி, வி. ஆரின் ஆட்சேபணையை மத்திய அரசுக்குத் தெரிவிக்க, மத்திய அரசு விட்டுக் கொடுக்குமாறு சென்னைக்கு அறிவுரை வழங்கியது.

கீழ் மட்டத்தில் அரசு ஊழியர்கள் பலர் தொல்லைகளுக்கு உள்ளானார்கள். கிராமங்களில் கள்ளுக் கடைகளை மறியல் பண்ணை வரும் காங்கிரஸ்காரர்களுக்கு இருக்க இடமோ, உண்ண உணவோ தரக் கூடாது எனக் கிராமக் கர்ணங்களை ஓர் உயர் அதிகாரி எச்சரித்தார். இதன் காரணமாகக் கடைக்காரர்களுக்கு வியாபாரம் இல்லாமல் போனதாகத் தமது கவனத்துக்கு வந்துள்ளது என்று அந்த அதிகாரி குறிப்பிட்டிருந்தார்.

இது எங்ஙனமாயினும் தென்னாட்டைப் பொறுத்தவரை மதுக்கடையே ஒப்பந்தத்தின் பிரதான சோதனைக் களமாக அமைந்தது. அரசு உண்மையாக நடக்கிறதா இல்லையா என்பதையும் சோதிப்பதாக இருந்தது. குடிப்பதற்கு உள்ள சுதந்திரம் தவிர மற்ற எல்லா சுதந்திரங்களும் வழங்கப்பட வேண்டும் என காங்கிரஸ் நினைத்தது. மற்ற எல்லா சுதந்திரங்களையும் வழங்கத் தயங்கிய அரசு குடிப்பதற்கு உள்ள சுதந்திரத்தை மட்டும் உறுதிப்படுத்துவதில் தீவிரமாக இருந்தது!

மது விற்பனையாளர்கள், மறியலை முறியடிப்பதற்காக, சட்டப்படி அனுமதிக்கப்பட்ட நேரத்துக்கு அப்பாலும், தமது கடைகளில் அன்றி வேறு இடங்களிலும் மது விற்க ஆரம்பித்தனர். இவற்றுக்கு அதிகாரிகள் உடந்தையாக இருந்தனர்.

அரசு ஊழியர்கள் தனியார் வசம் இருந்த பனைமரங்களில் கூட அவர்கள் அனுமதியின்றியே எண்கள் குறித்துக் கள்ளிறக்க வசதி செய்தனர். இந்த மோசடியை அம்பலப்படுத்திய போதுகூட அரசு அசைந்து கொடுக்கவில்லை.

ஆயினும் மறியல் வெற்றி பெற்றுத்தான் வந்தது. ஒரே ஒரு தேசத் தொண்டர் தேசியக் கொடியைக் கரத்தில் ஏந்திக் கள்ளுக்கடை அருகே சும்மா நின்றாலே போதும், வியாபாரம் படுத்து விடும். நூலின் யாத்ததில் வி. ஆர். வெற்றிப் பெருமிதத்துடன் தமது நண்பர் பூலக்கால் ஜான்ஸனுக்கு, ''சிந்துவாரில்லாததாம் முன்பிருந்த கள்ளுக் கடைகளின் ஆவி வடிவங்கள்தாம் இப்போது இருக்கின்றன'' என எழுதினார். ''ஒன்றன் பின் ஒன்றாகப் பல கள்ளுக் கடைகள் வியாபார மின்றி மூடப்பட்டு வருகின்றன'' என்று மேரி காம்ப்பெல்லுக்கு எழுதினார். அமெரிக்கரான மேரி காம்ப்பெல், மதப் பிரசாரகர்; மிதமாக மது அருந்துமாறு பிரசாரம் செய்து வந்தவர்.

அரசு ஏலம் விட்டும்கூட ராஜதானியில் மொத்தம் வழங்கப்படவிருந்த 9000 லைசென்ஸுகளில் 3000 இன்னும் வாங்கப்படாமலே இருந்தன. செப்டம்பர் மாதத்தில் இந்த நிலைமை. 1931ல் கள்ளுக் கடை ஏலம் 150 லட்சம் ரூபாய் அரசுக்குப் பெற்றுத் தரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கிடைத்ததென்னவோ 50 லட்சம் தான்!

அரசுக்கு மது வருமானம் குறைவதும் மதுக் கடைகளில் மனித நடமாட்டமே இல்லாதிருப்பதும் மட்டும் வி. ஆருக்குத் திருப்தி அளிக்கவில்லை. இவை பலாத்காரமின்றியும் ஒழுங்கு சீர்குலையாமலும் நடைபெற வேண்டும் என்றும் விரும்பினார். அதாவது அரசுடன் சண்டை போட்டுக் கொண்டே அதே நேரத்தில் அதனுடன் சமாதானமாகவும் போக வேண்டும்! உயரத்தில் இழுத்துக் கட்டிய கம்பி மீது நடனமாடுவது போன்று இது ஒரு சவாலாக இருந்தது.

தம் தரப்பினரிடம் வி. ஆர். கண்டிப்புடன் நடந்து கொண்டார். மறியல் செய்வோரிடம் ''சுயராஜ்யம் வேண்டும் என்று கேளுங்கள். ஆனால் சமாதான உடன்படிக்கை கையெழுத்து ஆகியிருப்பதால் அரசைத் தாக்கிப் பேசாதீர்கள்'' என்றார். ''அயல் தேசத் துணியைப் பகிஷ்கரிக்கும் போது பிரிட்டிஷ் துணியை மட்டும் பகிஷ்கரிப்பதாகக் காட்டிக் கொள்ளாதீர்கள். ஜெர்மானிய, இத்தாலியத் துணிகளையும் சேர்த்துப் பகிஷ்கரியுங்கள்'' என்று சொல்லித் தந்தார். ''அமைதியான மறியல் குறித்த சட்ட திட்டங்களிலும் ஏதாவது சந்தேகம் எழுமானால் அப்போது அரசுக்குச் சாதகமான முடிவுக்கே வந்து விடுங்கள்'' என்றார். இந்த உத்தரவுகளைப் பற்றி அறிந்து பிரமித்துப் போன எமெர்ஸன், வி. ஆரை வாழ்த்துமாறு காந்தியைக் கேட்டுக் கொண்டார். (தொடரும்)


தமிழாக்கம்: கி. ராஜேந்திரன்

கண்ணன்: அவசரமாகப் பத்து ரூபாய் கடன் கொடுங்க சார். கையில் பைசா கூட கிடையாது

முரளி: நூறு ரூபாய் நோட்டாக இருக்கே. சில்லறையாக இல்லையே?

கண்ணன்: நூறு ரூபாய்க்குத்தானே. இந்தாங்க சில்லறை. பத்துரூபாய் கடன் தருகிறீர்களா?

—லலிதா செல்லப்பா



“சிகரெட் என் இரண்டாவது மனைவி — ரமேஷ்”

தினமும் நாற்பது முதல் ஐம்பது சிகரெட்டாவது குடிக்கும் திரு ரமேஷிடம், ஒரே ஒரு நாள் அதைத் துறக்க முடியுமா என்று கேட்டதும் அலறியே விட்டார். ஆனாலும் இதை ஒரு சவாலாக ஏற்பதில் ஆர்வம் இருந்தது அவருக்கு.

காலை சிற்றுண்டி முடிந்ததுமே சிகரெட் ஞாபகம் வந்து விட்டது. என்னைப் பார்த்தவர், கடகடவென்று நான்கு டம்ளர் தண்ணீர் குடித்தார். பின்பு ஒரு கொத்து ஊது பத்தியை அறையில் மணம் பரப்ப ஏற்றினார். ஆங்கில நகைச் சுவை எழுத்தாளர் ஒட்ஹவுஸ் நாவல்களிலிருந்து பல பகுதிகளையும் ஏன்! பல கதைகளையும்கூடச் சொல்ல ஆரம்பித்தார். அவர் கதை சொல்லும் போது சிகரெட் ஞாபகம் எழத்தான் செய்தது. என்னிடம், ''சார், ஒரே ஒரு தரம் மட்டும் பிடிக்க அனுமதியுங்க சார். நிச்சயமா அதுக்கு மேலே பிடிக்க மாட்டேன். சிகரெட்டின் மேலே சத்தியம்! இன்னும் சொல்லப் போனா ஒரே சிகரெட்டை அணைச்சு அணைச்சுப் பிடிக்கிறேன், ப்ளீஸ்!'' என்றார். மசியவில்லை நான். சவாலை மீண்டும் ஞாபகப் படுத்தினேன். மிளகாய் கடித்தாற்போல் அவர் முகம் மாறிவிட்டது. தொடர்ந்து ஒட்ஹவுஸ்தான் கைகொடுத்தார் அவருக்கு.

மதிய உணவு வேளை. உணவு முடிந்தவுடன் அதுவரை தான் சவாலைக் காப்பாற்றியதைப் பற்றிப் பெருமையாகச் சொன்னார். உணவு முடிந்ததும் சிகரெட்டைக் கைகள் தேடின. ஏதோ நினைத்துக் கொண்டவராகச் சில ஏலக்காய்களை வாயில் போட்டு மெல்ல ஆரம்பித்தார்.

மாலைவேளை. ரமேஷுக்கு மனமே சூன்யமாகிவிட்டது. ஆனாலும் சவாலை விடவில்லை. இந்த அமளியில் விஷயம் தெரியாத நண்பர், ''ரமேஷ்! என்னோட சிகரெட் பாக்கெட்டைக் கொண்டுவர மறந்து விட்டேன். சிகரெட்டும் தீப்பெட்டியும் கொடு'' என்றவுடன், தன் காதலி சிகரெட்டுக்கு ஆசை தீர ஒரு முத்தம் கொடுத்துவிட்டு, ''நீ ரொம்பக் கொடுத்து வைச்சவன். என்னைப் பாரு. என் போதாத காலம்'' என்றவாறு கொடுத்தார். நண்பர் ஆச்சரியத்துடன் வாங்கிக் கொண்டார். ரமேஷ், மாலை காப்பி ஒன்றுக்குப் பதிலாக மூன்று டம்ளர் சூடாகக் குடித்தார்.

தொடர்ந்து என்னிடம் ''சிகரெட்டோட அருமையே அது குடிச்ச பிறகுதான் தெரியும். உங்களைப் போன்ற பத்திரிகைக் காரங்களுக்குச் சிகரெட் பிடிச்சா புது தெம்பும் உற்சாகமும், ஏன் 'மூட்' கூட வரும். நீங்களும் ஒரு 'தம்' இழுத்துப் பாருங்க'' என்று கூறி என்னைக் கவரப் பார்த்தார்.

மாலை சீட்டாட வந்த நண்பர்களுக்கு விஷயத்தைச் சொன்னவுடன் எல்லோரும் அனுதாபம் தெரிவிப்பது போல, ''ரமேஷ்! உனக்கு ஏன் இந்தப் போதாத காலம்? உன்னுடைய ஒரு நாள் உற்சாகத்தை அடியோடு இழந்துட்டு நிற்கிறியே!'' என்று பேச ஆரம்பித்தார்கள். இப்போது ரமேஷ் பாக்குச் சாப்பிட ஆரம்பித்தார். தொடர்ந்து ரெகார்ட் ப்ளேயரில் தமக்குப் பிடித்தமான கிஷோர் குமாரின் இந்தி இசைத்தட்டுகளைக் கேட்டு மகிழ்ந்தார். நண்பர்கள் இப்போது சர்தார்ஜி ஜோக் சொல்லி ரமேஷை உற்சாகப் படுத்தினர்.

''இந்த அனுபவத்தால் எனக்கு வருங்கால மாமனாரிடம் நல்ல பெயர் கிடைக்கும். ஒரு நாளாவது நான் பிடிக்கும் சிகரெட்டின் எண்ணிக்கை குறையுமா என்ற அவர் ஆசை அமோகமாக நிறைவேறியுள்ளது'' என்றார் விரைவில் திருமணம் செய்து கொள்ளவிருக்கும் ரமேஷ்.

மாலை மயங்கி இருள் கவியவும் மேலும் தாக்குப்பிடிக்க முடியாமல், சிகரெட் பாக்கெட்டை அள்ளினார் ரமேஷ். தொடர்ந்து ஒரே புகை மண்டலம்தான்! ரமேஷுக்கு இப்போதுதான் உயிரே வந்தது என்பதை அவரது உற்சாகம் புலப்படுத்தியது. ''நான் இவ்வளவு நேரம் தாக்குப்பிடித்ததே பெரிய அதிசயமாக்கும்!'' என்று பெருமிதத்தோடு சொன்னார் ரமேஷ்.

—அனுபவம் ''சிக்கி''



ஒரு நாள்! ஒரு சவால்!

சிவகுமார்

61–70

புது வெள்ளம் : எளிமை, இனிமை, அடக்கம், அன்பு ஆகியவைகளை யெல்லாம் ஒருங்கே பெற்றவரை இந்தப் படத்தின் முதல் நாளன்று சந்தித்தேன். இப்படத்தின் கன்னட மொழியில் கதாநாயகனாக நடித்தவர் அவர். 'சம்பத் கே சவால்' என்று பெயரிடப்பட்ட அந்தக் கன்னடப் படத்தின் தமிழாக்கம்தான் புது வெள்ளம். மைசூரில் இவரது படத்தைத் தெய்வப் படங்களுக்கு நடுவில் வைத்துப் பல வீடுகளில் பூஜை செய்கிறார்கள்! தமிழகத்தின் இரு பெரும் திலகங்களுக்கு இணையாகக் கர்நாடகத்தில் புகழ் பெற்றவர். அவர்தான் ராஜ்குமார்.

தேன் சிந்துதே வானம் : ரசிகர்கள் எதையுமே ஓரளவுக்குத்தான் ரசிப்பார்கள். இப்படத்தில் நல்ல பல அம்சங்கள் இருந்தும் இரு பொருள் பட வசனங்கள் சில காட்சிகளில் இடம் பெற்றுவிட்டன. நான் படம் பார்க்கச் சென்றிருந்த சமயம் நல்லபடியாக ஓடிக்கொண்டிருந்த படத்தின் இடையில் இக்காட்சிகள் ஒரே பச்சையும் கொச்சையுமான அந்த வசனங்களால் ஆரவாரம் மட்டுமல்ல; ரசிகர்களிடையே கலாட்டாவும் நிகழ்ந்தது! அத்துடன் இதயமில்லாத கேலிச் சிரிப்பும் ஒலித்தது. நடுத்தெருவில் விபசாரிப் பட்டம் பெற்ற நிலையில் அவமானப்பட்டுத் தியேட்டரை விட்டு வெளியேறினேன். அன்று ஒரு முடிவுக்கு வந்தேன், இனி அசிங்கமான வசனங்கள் பேசி நடிப்பதில்லை என்று.

இப்படியும் ஒரு பெண் : கதை வசனம் டைரக்ஷன், தயாரிப்பு, இசை, ஓவியம், ஜோதிடம் இப்படி ஒவ்வொரு கலையாகச் சொல்லிக் கொண்டு வந்தாலும் அனைத்தையும் தம்மை இணைத்துக் கொண்டு அஷ்டாவதானியாகச் செயல்படுகிறார் பானுமதி. பெண் குலமேபெருமைப்படுகிறது அவரை எண்ணி. எனது ஓவியங்களைப் பார்த்துப் பாராட்டியவர், மூன்று மாதங்களில் எனக்குத் திருமணம் நடக்கும் என்று என் ஜாதகத்தைப் பார்த்துக் கூறினார். சோதிடம் பொய்க்கவில்லை. இப்படியும் ஒரு பெண் தயாரித்த படம்தான் "இப்படியும் ஒரு பெண்".

மேல் நாட்டு மருமகள் : படப் பிடிப்புக்கு மேல் நாடு செல்வது இன்று சர்வ சாதாரணமாகி விட்டது. திரு ஏ. பி. என். வெளி நாட்டுக்குச் செல்வதற்குப் பதிலாக பிரான்சு தேசப் பெண்ணை இங்கு வந்து இப்படத்தில் நடிக்க வைத்தார். படத்தின் மிகப் பெரிய சிறப்பு ஏ. பி. என். எழுதிய நீண்ட வசனங்களை டேப்பில் பதிவு செய்து ஆர்வத்தோடு மனப்பாடம் செய்து செல்வி லாரன்ஸ் நடித்ததுதான்.

தங்கத்திலே வைரம் : கமலஹாசன், ஸ்ரீப்ரியா, ஜெய சித்ரா, நான் இப்படி நட்சத்திரப் பட்டியல் நீண்டிருந்தும் அருமையான நகைச்சுவைப் படமாக இது இருந்தும் ஓடவில்லை. காரணம் இன்னும் புரியவில்லை.

யாருக்கும் வெட்கமில்லை : விஷயங்கள் உள்ளவர். விவரங்கள் அறிந்தவர். நேர்மையான குணமுள்ளவர். அரசியல், சமூகம் ஆகியவற்றில் நாம் பார்க்கும் குற்றம் குறைகளைப் பாரபட்சமின்றி சுட்டிக் காட்டுபவர். இவரது டைரக்ஷனில் நான் நடித்ததுதான் இந்தப் படம். அந்த டைரக்டர் வேறு யார்? 'சோ'வேதான்!

பட்டிக்காட்டு ராஜா : இந்தப் படம் தயாராகும்போது எனக்குப் பெரும் துயரமொன்று நேர்ந்தது. நான் பிறந்த சில காலத்தில் தந்தையை இழந்தேன். நாலாவது வயதில் ஒரு சகோதரனையும், பிறகு மற்றொரு சகோதரன், சகோதரியையும் ஒருவர் பின் ஒருவராகப் பறி கொடுத்தேன். இத்துயரை எல்லாம் தாங்கிக் கொண்டு என்னை வளர்த்து ஆளாக்கினார் என் தாய். எனது சகோதரிக்கு ஒரு மகள். நான் தூக்கி வளர்த்த பெண். கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த அவள் ஒரு நாள் புடவையில் தீப்பிடிக்கத் தீக்காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாள். பூத்துக் குலுங்க வேண்டிய வயது. எனது தாயார் பிரமை பிடித்தாற்போல் பக்கத்தில் உட்கார்ந்திருக்க அவள் போய்விட்டாள். இரண்டு வயதிலிருந்து இருபது வயது வரை அவளை மாடலாக வைத்து எழுதிய சித்திரங்கள்தான் இப்போது எனக்கு ஆறுதலைத் தருகின்றன.

உறவு சொல்ல ஒருவன்: திரைப்பட உலகில் பேசுவது ஒன்று செய்வது ஒன்றாகத்தான் இருக்கும்.

✱ பஞ்சு அருணாசலம்

✱ பானுமதி

✱ ராஜ்குமார்









- பட்டிக்காட்டு ராஜா படத்தில் ஜெயசுதாவுடன் சிவகுமார்
- உறவு சொல்ல ஒருவன் படத்தில் பேபி சுமதியுடன்
- மேல் நாட்டு மருமகள் படத்தில்



அப்படி வில்லாமல் பேசிய தொகையைப் படம் வெளி வருவதற்கு முதல் நாளே வெள்ளித் தட்டில் ஆப்பிள் பழங்களுக்கு நடுவில் வைத்துக் கொடுத்து நெஞ்சார நன்றி சொல்வோர் இவரைப் போல் எத்தனை பேர் இருக்க முடியும்? அவர் தான் பஞ்சு அருணாசலம். கவியரசு கண்ணதாசன் நிழலாகக் கலைப் பணியைத் துவக்கி இன்று கதை வசனம், பாடல்கள் தயாரிப்பு என்று படிப்படியாக உயர்வு பெற்றுள்ளவர்.

ஆண்பிள்ளை சிங்கம் : சிறப்புக்கு முந்திய படம் என்றால் அதே பஞ்சு அருணாசலம் அவசரக் கோலத்தில் உருவாக்கி அவஸ்தைப் பட்ட படம் இது!


கிருகப் பிரவேசம் : நடிகர் திலகம் சிவாஜி கணேசனுடன் நான் நடித்துக் கடைசியாக வெளிவந்த படம். பல படங்களில் அவருக்குப் பிள்ளையாக நடித்த நான், இதில் நடித்தேன், தம்பியாக! — பேட்டி: **'சலன்'**



இவர்: வாங்கின கடனைத் திருப்பி தந்தியா இல்லே பல்லைக் கழட்டட்டுமான்னு கேட்கிறாரே! அவரிடம் அப்படி என்ன கடன் வாங்கினீங்க?

அவர் : பொய்ப்பல் செட்!

—கடலூர் கன்னியப்பன்



நாலு பேரிடம் நாலு நூல்களைத் தந்துவிட்டு ஒரு வாரம் கழித்துச் சென்று சந்தித்த போது...



ராதா சீனிவாசன்

சிறகுகள்

(உயர்நீதி மன்றத்தின் வழக்கறிஞர் ராதா சீனிவாசன்)

பொதுவாக, சட்டப் புத்தகங்களைப் படிக்கும் எனக்கு ஒரு மாறுதலாக இருக்கும் என்ற முறையில் ஆவலுடன் வாங்கிக் கொண்டேன். ஆனால் முதல் நாற்பது பக்கங்கள் பொறுமையை மிகவும் சோதித்து விட்டன. அப்புறம் விறு விறுப்பாகச் செல்கிறது.

கதாநாயகி சீதா, ராணுவ அதிகாரி பாஸ்கரைக் காதலித்துத் திருமணம் செய்து கொள்கிறாள். கலப்பு மணம். அவன் குடிகாரனாக மாறி, குழந்தைகள் முன்னிலையில் அவளைத் துன்புறுத்துகிறான். குழந்தைகளுடன் வெளியேறி, தானாகக் கட்டடத் தொழில் நடத்திச் சிறப்படைகிறாள். திருந்திய கணவன் பின்பு அவளிடம் மன்னிப்புக் கேட்டு இறப்பதாகக் கதை முடிகிறது.



குமாரி ராஜி

பாத்திரங்களின் தொகுப்பு அருமை. சீதா என்றும் மறக்க முடியாத பாத்திரம். ஆசிரியர் சீதா மூலம் ஒரு லட்சியப் பெண்ணை அறிமுகப்படுத்துகிறார். மனிதருடைய பலவீனங்களை ஆசிரியர் கையாளும் முறை பாராட்டுக்குரியது. அதே சமயம் ஆபாசம் தலைகாட்டாதது குறிப்பிடத் தக்கது.

கருத்துக்கள் ஆழமாக இருந்தாலும் கற்பனையும் அதிகமாக உள்ளது. கதையைப் படிக்கும்போது ஆசிரியர் கதாசிரியர் என்பதை விடச் சிந்தனையாளராகத் தோன்றுகிறார். சீதா பாத்திரத்துக்கு ஆசிரியர் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளதால் மற்றவை பின்னணிக்குப் போய்விடுகின்றன.

நாலு பேரிடம் நாலு நூல்கள்



என்னை மிகவும் கவர்ந்த புத்தகம்.

''சிறகுகள்'' ஆசிரியர்: வாஸந்தி. வெளியீடு: தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், 2/96, பெரிய தெரு, சென்னை—5. விலை: ரூ. 4.



வி. ராமதாஸ்

துணுக்கு இலக்கியங்கள்

[ஹோட்டல் சவேராவின் வரவேற்பாளர் குமாரி ராஜி.]

ஆசிரியர் எழுதி கல்கி, குமுதம், விகடன் இதழ்களில் வெளிவந்த துணுக்குகளின் தொகுப்புத்தான் இப்புத்தகம். என்னைப் போன்று அதிக நேரம் கிடைக்காதவர்களுக்கு இப்புத்தகம் ஒரு நல்ல பரிசு. நெகிழ வைக்கும் கருத்தாழம் மிக்க துணுக்குகள் உள்ளன. நூறு துணுக்குகளும் சிறிது சிறிதாக இருந்தாலும் சிந்தனைச் சிறப்பில் மிகவும் உயர்ந்தவை. வான வில்லின் வர்ணங்கள் போல் பல்சுவைத் துணுக்குகள் என்னைப் பரவசப்படுத்தின. பலரின் சொற்பொழிவுகளிலிருந்தும், புத்தகங்களிலிருந்தும் ஆசிரியர் பல பகுதிகளைத் துணுக்குகளாகத் தொகுத்துள்ளார்.

புத்தகத்தில் உள்ள துணுக்குகள் சில சம்பந்தமே இல்லாமல், நம் பொறுமையைச் சோதிக்கின்றன. சில தத்துவக்



கே. கே. எஸ். மூர்த்தி

கருத்துக்கள் புரிந்து கொள்ளவே கஷ்டமாக உள்ளன. சினிமா சம்பந்தப்பட்ட சில துணுக்குகளையும் சேர்த்திருந்தால் புத்தகம் மேலும் விறுவிறுப்பாக இருக்கும் என்பது என் எண்ணம்.

எடுத்த எடுப்பிலேயே பிள்ளைப் பாசம் என்ற முதல் துணுக்கு நன்றாக அமைந்துள்ளது. பின்னால் வரும் கருத்துச் சங்கிலிக்கு முன்னோடியாக இருக்கிறது. அளப்பரிய தாய்ப் பாசத்தை அளவான இத்துணுக்கு உணர்த்துவது அருமை. இப்புத்தகம் மேலும் பல பாகங்களாக வெளிவந்தால் சிறப்பாக இருக்கும். பாராட்டத்தக்க முயற்சி.

துணுக்கு இலக்கியம்: ஆசிரியர்: டாக்டர் இரா. மோகன். வெளியீடு: சர்வோதய இலக்கியப் பண்ணை, 32-1, மேற்கு வெளி வீதி, மதுரை—625001. விலை: ரூ. 7.


கலையரசி கிளியோபாட்ரா

[செண்பகம் டூரிஸ்ட் பஸ் மானேஜர் திரு வி. ராமதாஸ்.]

எனக்கு வேலை மிகுதியாக இருந்ததால் இதைப் படிக்க ஆறு நாட்கள் ஆயின. நீங்கள் கொடுத்ததற்காகத்தான் படித்தேன்.

தன் தாய் நாட்டுக்காக எதையும் துணிந்து செய்யும் எகிப்து அழகி கிளியோபாட்ராவின் வாழ்க்கைச் சம்பவங்களைக் கொண்ட நாடகம்தான் இப்புத்தகம்.

ஆரம்பம் முதல் இறுதிவரை கிளியோபாட்ராவை வீரம் மிக்க மங்கையாக ஆசிரியர் விவரித்துள்ளார். எளிய நடை, யாவரும் புரிந்து கொள்ளும் தமிழ் பாராட்டுக்குரியது.



கிளியோபாட்ரா பற்றிய வர்ணனைகள் அருமையாய் உள்ளன. கிளியோபாட்ராவை, காம வெறி பிடித்தவளாகப் பல புத்தகங்கள் விவரிக்கும்போது, ஆசிரியர் அவளை வீரம் மிக்க நல்லவளாகக் குறிப்பிடுவது பாராட்டத் தக்கது.

இதை நாடக பாணியில் எழுதாமல் நாவல் முறையில் எழுதினால் படிப்பதற்கு இன்னும் சுவையாக இருக்கும் என்பது என் கருத்து. கதை அரைகுறையாக உள்ளது. முடிவில் கிளியோபாட்ரா இறப்பதை ஆசிரியர் இப்புத்தகத்தில் கூறாதது ஆச்சரியமாக உள்ளது. ஆசிரியர் நகைச்சுவைக்காக இதில் சேர்த்துள்ள பாத்திரங்கள் அறுவை; தேவையில்லாதவை. இப்படிப் பல பக்கங்களை வீணாக்கியிருக்க வேண்டாம். ''கலையரசி கிளியோபாட்ரா'' என்பது புத்தகத் தலைப்பாயினும் நாடகத்தில் அவளைச் சித்திரிக்கும் விதம் முற்றிலும் மாறுபட்டது.

ஆசிரியர் எழுதிய நாடகத்தை விட, அவருடைய முன்னுரையை அதிகமாகப் பாராட்டலாம்!

கலையரசி கிளியோபாட்ரா. ஆசிரியர்: த. புருஷோத்தமன். வெளியீடு:. செந்தில் பதிப்பகம். 15, ஒற்றைவாடைத் தெரு, சென்னை-600006. விலை: ரூ. 5.00.

ஜெயகாந்தன் ஆய்வடங்கல்

[மத்திய அரசின் ஏற்றுமதி இறக்குமதி பிரிவின் கண்ட்ரோலர் திரு கே. கே. எஸ். மூர்த்தி]

ஜெயகாந்தன் பற்றிய ஆய்வு என்றதும் போரடிக்குமோ என்ற கலக்கம் இருந்தாலும் படித்துப் பார்த்தேன். புத்தகம் விறுவிறுப்பாக உள்ளது. ஐந்து இரவுகளில் இதைப் படித்து முடித்தேன். நான் இதுவரை தமிழில் சீரியஸாகப் புத்தகங்கள் படித்ததில்லை. இதுதான் முதல் முயற்சி.

ஜெயகாந்தனுடைய கதைகளையும், கட்டுரை, நாவல்களையும் ஆசிரியர் அலசித் தமக்குப் பிடித்த பகுதிகளைப் புத்தகத்தில் கொடுத்துள்ளார். இந்தப் புத்தகத்தில் ஜெயகாந்தன் படைப்புக்களை ஆசிரியர் விவரிப்பதால், இது ஜே. கே. நூல்கள் அடங்கிய அலமாரிக்குச் சாவி போல விளங்குகிறது. அவரின் பல படைப்புக்களைப் படிக்கும் ஆவலைத் தூண்டுகிறது. பாராட்டப்பட வேண்டிய ஆய்வு.

ஆசிரியருடைய சொந்த எண்ணங்களை இதில் அவர் கூறாதது சற்று வியப்பாகத்தான் உள்ளது. ஜெயகாந்தனைப் பற்றிப் பல ஆசிரியர்களின் கருத்துக்கள் ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அச்சுப் பிழைகள் அதிகமாக உள்ளன. தனி நபர்களுக்கு இப்புத்தகத்தை வாங்கும் ஆவல் இருக்குமா என்பது என் சந்தேகம். ஆயினும் இது போல் பிரபல தமிழ் எழுத்தாளர்களுக்கு ஆய்வுப் புத்தகங்கள் வெளிவருவதை வரவேற்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

ஜெயகாந்தன் ஆய்வடங்கல் ஆசிரியர்: ந. அறிவழகன். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை-600020.

பேட்டி: —''சிகே''



அவன்: "சாம்பார்ங்கிறது என்ன தெரி யுமாடா..?"
இவன்: "என்ன...?"
அவன்: "இட்லியின் ஸ்விம்மிங்பூல்!"

—உ. ராஜாஜி

இமயம்

படவிமரிசனம்



சிவாஜியை அழைத்துக் கொண்டு நேபாளத்துக்குப் போய்ப் படம் தயாரிக்கத் தயாரிப்பாளருக்குச் சுதந்திரம் உண்டு. அந்தப் படத்தைக் குறித்து விமர்சனம் செய்ய நமக்குச் சுதந்திரம் உண்டு — கட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரம்தான். — ஆனல் இந்திரா காந்தி பாணி கட்டுப்பாடு அல்ல.

இந்தக் கதையை நேபாளத்தில்தான் படம் பிடிக்க வேண்டும் என்பதில்லை. நெல்லிக்குப்பத்திலும் எடுக்கலாம். நேபாளத்துக்குப் போய் எடுக்கத்தான் செய்தார்களே, அந்த நாட்டின் இயற்கை அழகு தவிர வேறு எதைக் காட்டிஞர்கள்? சூதாட்ட விடுதியைத்தான்! அசடுகளான சில போலீஸாரைத்தான். மற்றபடி நேபாளியின் வீரம், நாட்டுப் பற்று, உழைப்பார்வம், இறையுணர்வு எதையாவது பிரதிபலிக்கச் செய்தார்களா? கிடையாது. சிவாஜிக்கு நேப்பாளி உடை ஒன்று பாக்கியிருந்தது. போட்டுப் பார்த்தாகிவிட்டது; போதாதா?

என்னதான் சுதந்திரப் பிரியஞக இருந்த போதிலும் வளர்ப்பு மகளிடம் கூட, நானும் உன் தாயும் சிருங்கார லீலையில் ஈடுபடுவதை சாவித் துவாரம் வழியே பார்த்துக் காதல் பண்ணுவது எப்படி என்று கற்றுக்கொள் என்று ஒரு தகப்பன் கூறுவாஞ? சிவாஜிக்குத் தலைகுனிவை ஏற்படுத்திவிட்டகாட்சி.

ஏதோ பத்திரிகைக் கதையைப் படித்து விட்டு, அந்த வளர்ப்பு மகள், காதலனிடம் தன் கற்பைத் தானே பலவந்தமாகப் பறிகொடுக்க ஓடுகிருளாம். வராந்தாவில் நின்று நாலு பேர் பார்க்க ஆடை அவிழ்க்கிருளாம்! அறுபதுகள் பாணி கதையாடு விடக் கூடாதே என்று எழுபதுகளின் ஆபாசத்தையும் புகுத்தப் போய் மாடர்னும் இல்லை பழகும் இல்லை என்று குட்டை குழப்பி விட்டார்கள்.

தேங்காயும் மனேரமாவும் முறையே பெண்ணுகவும் ஆணுகவும் வேஷம் போட்டு சூதாட்ட விடுதியில் அடிக்கும் கூத்து. ஜெய் கணேஷ் மீரா டேயட்டின்போது ஆபாச அசைவுகள் — மாஸ் அப்பீல் என்ற பெயரில் எத்தனை நாளேக்கு இந்தக் கூத்து? சிவாஜி ஜெய் கணேஷ் டேயட் வேறு!

மனத்தில் நிற்கும் காட்சிகள் அதிகமில்லை. என்றும் நிற்கும் சில சிவாஜி, ஸ்ரீவித்யா நடிப்பாற்றலால் சிறக்கின்றன. பத்து மணி கெடுவை வைத்துத் தொகுக்கப்பட்ட காட்சிகள்; 'கண்ணிலே குடியிருந்து' என்ற கண்ணதாசனின் பாடல் சௌந்தரராஜனின் குரலில் ஒலிக்க, பேபி துர்க்காவுடன் சிவாஜி பாடி நடிக்கும் காட்சி, பாலகிருஷ்ணன் காமிராவில் அடங்கிவிட்ட நேப்பாளத்தின் அழகுகள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

படம்: இமாலயக் காட்சி: கதை: இமாலய வீழ்ச்சி! — குட்டி கிருஷ்ணன்



SPORTS PICTURE PAGE

டேபிள் டென்னிஸ் இன்டோர் விளையாட்டு. தமிழகப் பெண்கள் இந்த விளையாட்டில் சிறப்புடன் பரிமளிக்கிறார்கள். குமாரி வித்யா தமிழக ஆட்டக்காரிகளின் வரிசையில் சிறப்பு இடம் பெறுகிறாள். தேசிய டேபிள் டென்னிஸ் போட்டியில் சர்வ கலாசாலைக் குழுவுக்குக் காப்டனாக ஐந்து வருஷங்களாக இருந்து வருகிறாள். ஸ்டெல்லா மேரி கல்லூரி காப்டன். இவள் Fore hand sma hல் விசேஷ நிபுணத்துவம் வாய்ந்தவள்.

டேபிள் டென்னிஸ் விளையாட்டுக் கலைஞர்களுக்காகத் தனியே டேபிள் டென்னிஸ் விளையாட்டுக் கலைஞர்கள் நல சங்கம் ஒன்றும் இயங்கி வருகிறது. இந்த நலசங்கம் அவ் விளையாட்டுக் கலைஞர்கள் சர்வ தேசப் போட்டிகளில் கலந்து கொள்ள உதவி வருகிறது.

ஒய். எம். ஐ. ஏ. டேபிள் டென்னிஸ் போட்டியின்போது புகைப்பட நிபுணர் உத்ரா, குமாரி வித்யாவின் 'ஆக்ஷன்' களை உற்று நோக்கிச் சிறப்பான தொன்றைத் தேர்ந்தெடுத்துத் தந்திருக்கிறார்.

அந்தப் புகைப்பட வர்ணனை இதோ:

"என்னிடத்தில் 1200,1400 ஏ எஸ் ஏ ஸ்பீட் பிலிம் கிடையாது. இருந்திருந்தால் இந்த இன் - டோர் கேமை அதற்கு இயல்பாக உள்ள குறைந்த வெளிச்சத்திலேயே பிளாஷ் உதவி இல்லாமலேயே படம் பிடித்திருக்கலாம். ஆக்ஷனை Freeze பண்ணி யிருக்கலாம். என்கிட்ட இருந்த பிலிம்400 ஏ எஸ் ஏ ஸ்பீட் பிலிம். டேபிள் டென்னிஸ் அரங்கில் உள்ள வெளிச்சத்தில் (Dim light) எடுத்தால் படம் மங்கலாக, கலங்கலாக விளங்கும். ஆகவே 'லைட் பிளாஷ்' உதவி கொண்டு 1-16ல் Fast Aperture ல் இந்தப் படத்தை எடுத்தேன்."

படம்: **உத்ரா**
விளக்கம்: **குண்டுமணி.**

Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras - 600 032. Editor: K. Rajendran

REGISTERFD No. M. 4392
Registered as a Newspaper in Sri Lenka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப்பதிப்பு) 60 மலேயக் காசு

